
விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Registered as a Newspaper in Srilanka
# வலம்புரி
Valampurii
E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk
சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 புரட்டாதி 04 செவ்வாய்க்கிழமை (20.09.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 276

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

# இன அழிப்பின் பிரதிபலிப்பே உயிர்களை காவுகொண்டது



## வடமாகாண முதலமைச்சர் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

சிறுபான்மை இனத்தை இல்லாதொழிக்க மேற்கொண்ட முயற்சிகளின் பிரதிபலிப்பே இன்று பல்லாயிரக்கணக்கான தமிழ், சிங்கள மக்களின் உயிர்களைக் காவுகொண்டுள்ளது என வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

(03ஆம் பக்கம் பார்க்க)

## 95 போராளிகளுக்கு மருத்துவ பரிசோதனை

(யாழ்ப்பாணம்)

விஷ ஊசி விவகாரம் தொடர்பில் முன்னாள் போராளிகளுக்கான மருத்துவ பரிசோதனையில் மூன்றாம் வாரத்தில் 22 பேர் மருத்துவ பரிசோதனையை மேற்கொண்டுள்ளதாக வடமாகாண சுகாதார அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன் மூலம் மருத்துவ பரிசோதனையை

23ஆம் பக்கம் பார்க்க....

க.பொ.த (சா/த)
பரீட்சை
மாதிரி வினாத்தாள்
தமிழ் I,II

உள்ளே...

## காஷ்மீர் தாக்குதல்; இலங்கை கண்டனம்

(கொழும்பு)

காஷ்மீரில் இந்திய இராணுத் தளம் மீது நடத்தப்பட்ட பயங்கரவாதத தாக்குதலை இலங்கை கண்டித்துள்ளது.

இராணுவத் தளத்தை மையப்படுத்தி ஆயுததாரிகளால் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடத்தப்பட்ட இந்தத் தாக்குதல் சம்பவத்தில் 17 இராணுவ வீரர்கள் உயிரிழந்துள்ள தோடு 20க்கும் மேற்பட்டோர் காய

23ஆம் பக்கம் பார்க்க....

## உலகில் சிறந்த ஜனாதிபதியாக மைத்திரிபால சிறிசேன தெரிவு

(கொழும்பு)



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உலகில் சிறந்த ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகளின் பொருளாதாரம் மற்றும் சமூக பேரவை கடந்த 17ஆம் திகதி வெளியிட்டுள்ள ஆண்டு அறிக்கையில் இவ் விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தரப்படுத்தலை மேற்கொண்ட சர்வதேச

23ஆம் பக்கம் பார்க்க....

## யுத்தம் மூலம் பெற முடியாததை சமஷ்டி மூலமாக பெற முயற்சி!

### சாடுகிறார் விமல் வீரவன்ச

(கொழும்பு)

தமிழின கடும் போக்குவாதிகள யுத்தத்தின் மூலம் பெறப்பட முடியாத சமஷ்டியை தற்போது புதிய அரசியலமைப்பினூடாக பெற முயற்சிக்கின்றார்கள் என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

தேசிய சுதந்திர முன்னணியின் தலைமைக்காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

தமிழர்களுக்கான பிராந்திய சமஷ்டி ஆட்

23ஆம் பக்கம் பார்க்க....

## காஷ்மீர் தாக்குதல்; இலங்கை கண்டனம்

(கொழும்பு)

காஷ்மீரில் இந்திய இராணுத் தளம் மீது நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதலை இலங்கை கண்டித்துள்ளது.

இராணுவத் தளத்தை மையப்படுத்தி ஆயுததாரிகளால் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடத்தப்பட்ட இந்தத் தாக்குதல் சம்பவத்தில் 17 இராணுவ வீரர்கள் உயிரிழந்துள்ள தோடு 20க்கும் மேற்பட்டோர் காய 23ஆம் பக்கம் பார்க்க....

## உலகில் சிறந்த ஜனாதிபதியாக மைத்திரிபால சிறிசேன தெரிவு



(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உலகில் சிறந்த ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகளின் பொருளாதாரம் மற்றும் சமூக பேரவை கடந்த 17ஆம் திகதி வெளியிட்டுள்ள ஆண்டு அறிக்கையில் இவ் விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தரப்படுத்தலை மேற்கொண்ட சர்வதேச 23ஆம் பக்கம் பார்க்க....

## யுத்தம் மூலம் பெற முடியாததை சமஷ்டி மூலமாக பெற முயற்சி!

### சாடுகிறார் விமல் வீரவன்ச

(கொழும்பு)

தமிழின கடும் போக்குவாதிகள யுத்தத்தின் மூலம் பெறப்பட முடியாத சமஷ்டியை தற்போது புதிய அரசியலமைப்பினூடாக பெற முயற்சிக்கின்றார்கள் என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

தேசிய சுதந்திர முன்னணியின் தலைமைக் காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

தமிழர்களுக்கான பிராந்திய சமஷ்டி ஆட் 23ஆம் பக்கம் பார்க்க....

### "எழுக தமிழ்" உரிமைப் போராட்டம்

## பாதிக்கப்பட்டவர்கள் உரிமையைப்பெற "எழுக தமிழ்" பேரணி மகத்தான சக்தி

### திராவிட விடுதலைக் கழகம் வாழ்த்து

(தமிழகம்)

பாதிக்கப்பட்ட மக்களால் முன்னெடுக்கப்படும் போராட்டமே மகத்தான சக்தி ஆகும். அதுவே சர்வதேசத்தை திரும்பிப்பார்க்க வைக்கும் என சென்னை திராவிட விடுதலைக்கழக பொதுச்செயலாளர் விடுதலை 24ஆம் பக்கம் பார்க்க....

## ஒட்டுமொத்த தமிழர்களின் குரலாக "எழுக தமிழ்" ஓங்கி ஒலிக்க வேண்டும்

### இலங்கை ஆசிரியர் சங்கம், யாழ்.பல்கலை ஊழியர் சங்கம் பூரண ஆதரவு

(யாழ்ப்பாணம்)

தமிழர் தாயகத்தில் தொடரும் சிங்கள - பௌத்த மயமாக்கல் மற்றும் தமிழின அடக்கு முறைகளுக்கு எதிராக எதிர்வரும் 24ஆம் திகதி சனிக்கிழமை இடம்பெறவுள்ள மாபெரும் மக்கள் எழுச்சிப் பேரணிக்கு தமது பூரண ஆதரவை தெரிவித்துள்ள இலங்கை ஆசிரியர் சங்கம் மற்றும் யாழ்.பல்கலைக் கழக ஊழியர் சங்கம் என்பன "எழுக தமிழ்" மக்கள் பேரணியானது ஒட்டுமொத்த தமிழரின் குரலாக ஓங்கிஒலிக்க வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளன. 23ஆம் பக்கம் பார்க்க....

## சகோதரர்கள் இருவர் கடலில் மூழ்கிப் பலி

## பிரிவைத் தாங்க முடியாது பெற்றோர் உயர்மாய்ப்பு

### அதிர்ச்சியில் சகோதரி மயக்கம்; சோகமானது கல்குடா










ச.சதீஸ்குமார் | ச.சுரேஸ் | வே.சண்முகம் | ச.யோகலெட்சுமி



(கல்குடா)

நண்பர்களுடன் குளிக்கச் சென்ற சகோதரர்கள் இருவர் கடலில் மூழ்கி உயிரிழந்துள்ள நிலையில் அந்த சோகத்தை தாங்க முடியாத பெற்றோர் உயிரைமாய்த்துக் கொண்ட துயரச் சம்பவம் ஒன்று நேற்றையதினம் மட்டக்களப்பு கல்குடா பகுதியில் இடம் பெற்றுள்ளது.

மட்டக்களப்பு கல்குடா கடலில் குளித்துக் கொண்டிருந்த ஒரே குடும்பத்தை சேர்ந்த இரு இளைஞர்கள் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ள நிலையில் அத் துயரத்தினை தாங்காத அவர 23ஆம் பக்கம் பார்க்க....

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

# கிளிநொச்சி பொதுச்சந்தை தீ அனர்த்தம்; அமைச்சர் மனோ கணேசன் நேரில் பார்வை

## நிலைமையை சீர்செய்து தருவதாகவும் உறுதியளிப்பு



(கிளிநொச்சி)

கிளிநொச்சி சந்தையில் ஏற்பட்ட அனர்த்தத்தினை பார்வையிடுவதற்காக நேற்று மாலை கிளிநொச்சி பொதுச்சந்தைக்கு வருகை தந்த மொழிகள் மற்றும் சகவாழ்வு அமைச்சர் மனோகணேசன் தீயினால் எரிந்து முற்றாக அழிவடைந்த பகுதிகளை பார்வையிட்டதுடன் அங்கு பாதிக்கப்பட்ட வர்த்தகர்களுடனும் கலந்துரையாடினார்.

அங்கு அவர் கருத்து தெரிவிக்கையில்,

இந்த அனர்த்தம் உண்மையில் என்மனதை வருத்துகின்றது. இங்கு பல குறைபாடுகளை கேள்விப்பட்டேன். குறிப்பாக கடந்த கால ஆட்சியில் இந்த சந்தையிலும் கூட பல குளறுபடிகள் ஏற்பட்டு இருந்திருக்கின்றது. முறையான பிரதேச சபை உருவாக்கப்பட்ட பின்னும் கூட சர்வாதிகாரப்போக்கில் அப்போதைய ஆட்சியில் இந்த சந்தையை கையாண்டுள்ளார்கள்.

குறிப்பாக எரிவடைந்த கடைகள் கூட முறைமையில்லாமல் அமைப்பட்டு இருக்கிறது. தீ பரவியதற்கு அதுவும் ஒரு காரணமாக அமைந்திருக்கிறது. எனவே கடந்தவற்றை விடுவோம் நாங்கள் எதிர்காலத்தில் உங்களுக்கு என்ன செய்வேண்டும் என்பதை பற்றி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடனும் பிரதமர் மற்றும் நிதி அமைச்சருடனும் கலந்துரையாடி உங்களுக்கு கிடைக்கூடிய உதவிகளை என்னால் செய்ய முடியும்.

குறிப்பாக நான் நாளை கொழும்பு சென்று நிதி அமைச்சருடன் நீங்கள் வங்கியில் மற்றும் தனியார் நிதி நிறுவனங்களில் பெற்ற கடன் தொடர்பில் கதைத்து அதனை குறிப்பிட்ட காலத்திற்கு ஒத்திவைப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்வேன் என்றார்.

இவருடன் பாராளுமன்ற உறுப்பினர் சறீதரன், பாஸ்கரா மற்றும் அதிகாரிகள் வர்ததக சங்க பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். (செ)

# பட்டதாரிகள் ஆர்ப்பாட்டம்

(அம்பாறை)

கிழக்கு மாகாண சபையால் வழங்கப்பட்ட பட்டதாரிகளுக்கான வேலைவாய்ப்பில் அம்பாறை மாவட்டப் பட்டதாரிகள் புறக்கணிக்கப்பட்டுள்ளதாகக் கூறி அம்பாறை மாவட்டத்தில் நேற்று திங்கட்கிழமை ஆர்ப்பாட்டப் பேரணி இடம்பெற்றது.

அம்பாறை மகாவாபி விஹாரையில் ஒன்றுகூடிய பட்டதாரிகள், அங்கிருந்து மணிக்கூட்டுக் கோபுரம் வரை பேரணியாகச் சென்றனர்.

பின்னர் அங்கு சிறிது நேரம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுவிட்டு, ரீகல் சந்திவரை பேரணியாகச் சென்று மீண்டும் மணிக்கூட்டுக் கோபுரத்தை வந்தடைந்து அங்கு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது அம்பாறை டிஎஸ்சேனநாயக்க வீதியை மறித்து பட்டதாரிகள் எதிர்ப்பை வெளிக்காட்டியதை அடுத்து, பொதுமக்களின் போக்குவரத்துக்கான மாற்று வழியை பொலிஸார் ஏற்படுத்திக் கொடுத்தனர்.

ஆர்ப்பாட்ட இடத்துக்கு வருகை தந்த கிழக்கு மாகாண சபை உறுப்பினர் மஞ்சுள பெர்னாண்டோ, ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பட்டதாரிகளுடன் கலந்துரையாடினார்.

இந்நிலையில், கிழக்கு மாகாண ஆளுநர் ஒஸ்டின் பெர்னாண்டோவுடன் தொலைபேசியூடாக தொடர்பு கொண்ட மாகாணசபை உறுப்பினர், நாளை 21ஆம் திகதி பட்டதாரிகளுடனானு சந்திப்பை மேற்கொள்வதற்கு ஏற்பாடு செய்து கொடுத்தார். (செ)

## தனியார் வைத்தியசாலையை அமைக்க

# இந்திய மருத்துவக் குழுவினர் கிழக்கு முதல்வருடன் சந்திப்பு



(கொழும்பு)

இந்தியாவில் பிரபலமான தனியார் வைத்தியசாலைகளை இயக்கும் ருக்மணி மெமொறியல் மருத்துவமனை மற்றும் ருக்மணி தாதிப் பயிற்சிக்கல்லூரிகளின் நிர்வாக இயக்குநர் டாக்டர் மோகன குழுவினர் நேற்று கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நஸீர் அஹமட்டை அவரது கொழும்புக் காரியாலயத்தில் சந்தித்தனர்.

இச்சந்திப்பின்போது கிழக்கு மாகாணத்தில் தனியார் வைத்தியசாலை ஒன்றினை அமைப்பது தொடர்பாக நீண்ட கலந்துரையாடல் மேற்கொண்டனர்.

இதன்போது கிழக்கில் மூன்று மாவட்டங்களிலும் அல்லது விரும்பிய ஒரு மாவட்டத்தில் சகல வசதிகளும் அடங்கிய கிழக்கு வைத தியசாலை ஒன்றை அமைக்க சம்பந்தப்பட்ட குழுவினருக்கு முதலமைச்சர் முதற்கட்ட அனுமதியளித்துள்ளார்.

இதுவரை பாரிய சத்திரசிகிச்சை மற்றும் சில நோயாளர்கள் சிகிச்சை பெறுவதற்காக கிழக்கில் இருந்து கொழும்புக்கு வர வேண்டிய நிலையே காணப்படுகின்றது.

எனவே இதனால் ஏற்படும் சிரமத்தைத் தடுக்க சகல வசதிகளும் கொண்டதான வைத்தியசாலை ஒன்றை கிழக்கில் அமைப்பதனை பெரும் வெற்றியாக ஏற்று கிழக்கு மக்கள் சந்தோசமடைவார்கள் எனபதில் எந்தச் சந்தேகமும் இல்லை.

எனவே இப்படியான வைத்தியசாலை ஒன்றினை அமைக்க முழு ஆதரவினை கிழக்கு மாகாண சபை வழங்கத் தயாராக இருக்கிறது என்று முதலமைச்சர் ஹாபிஸ் நஸீர் அஹமட் இந்திய மருத்துவ தூதுக் குழுவினரிடம் தெரிவித்தார்.

குறிப்பிட்ட இச்சந்திப்பில் இந்திய தமிழ் நாடு மற்றும் கேரளாவைச் சேர்ந்த வைத்தியர்களான எஸ்.எஸ்.முகம்மட் இப்ராகிம், எம.மோகன், சீ.ஏ.ராஜன், எஸ்.ஞானமூர்த்தி, என்.உதயா பானு இவர்களுடன் இணைப்பாளர்மனோவை அஷோகன் ஆகியோர் கலந்து கொண்டனர். (செ-9)

**வலம்புரி**

விளம்பரத் தொடர்புகளுக்கு

**021 221 7603, 021 567 1532**

**ஏல விற்பனை**

இடம் :- யா/ ஆவரங்கால் மகாஜன வித்தியாலயம், புத்தூர்.

காலம் :- 28.09.2016 புதன்கிழமை காலை 10.00 மணி

பொருள்கள் :- உடைந்த மாணவர் கதிரை மற்றும் மேசை, பழைய புத்தகங்கள், பழுதடைந்த கணினி (மூன்றாந் தலைமுறை)

– அதிபர்

(5960)

**தவறிவிட்டது**

**கனகரத்தினம் சிவானந்தன்**

ஆகிய எனது அடையாள அட்டை 770823862V உடைய வாகன அனுமதிப்பத்திரம் மற்றும் முக்கிய ஆவணங்கள் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.

**077 348 6305**

(5966)

# "மூழ்கும் கப்பலில் ஏறும் எலிகளல்ல"

## அரசை சாடுகிறார் உதய கம்மன்பில



(கொழும்பு)

தெளிந்த புத்தி இருக்கும் எவரும் அழுகி துர்நாற்றம் வீசும் அரசாங்கத்தில் இணைந்து கொள்ள மாட்டார்கள் என தெரிவித்த பிவித்துரு ஹெல உறுமய கட்சியின் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில, மூழ்கும் கப்பலில் ஏறும் அளவுக்கு முட்டாள்களான எலிகள் கூட்டு எதிர்க்கட்சியில் இல்லை எனவும் தெரிவித்தார். கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கம்மன்பில இதனை கூறியுள்ளார்.

அங்கு அவர் மேலும் கூறுகையில்,

கடந்த ஊடகவியலாளர் சந்திப்பில் டென்மார்க் அரசாங்கம் தமிழீழத்தை சுதந்திரமான நாடாக ஏற்றுக் கொண்டுள்ளதை முதல் முறையாக வெளியிட்டேன்.

48 மணி நேரத்தில் அங்குள்ள எமது தூதுவரிடம் வருத்தம் தெரிவித்து, டென்மார்க் அரசாங்கம் தனது இணையத்தளத்தில் தமிழீழத்தை சுதந்திரமான நாடு என்ற பட்டியலில் இருந்து நீக்கியது.

டென்மார்க் அரசாங்கம் எடுத்த உடனடியான இந்த நடவடிக்கைக்கு நான் நன்றிகளை தெரி வித்துக் கொள்கின்றேன்.

இலங்கையின் வெளிவிவகார அமைச்சு விழிப்புடன் இருந்து வினைததிறனாக செயற்பட்டால், தமிழீழத்திற்கு அங்கீகாரம் கிடைக்காது. அரசாங்கம் தொடர்பாக மக்கள் மத்தியில் காணப்படும் எதிர்ப்பின் சூட்டை தற்போது அமைச்சர்களும் உணர்ந்துள்ளனர்.

இதனால், அமைச்சர்கள் விலகி எதிர்க்கட்சிக்கு சென்று விடுவார்கள் என்று அரசாங்கத்தின் தலைவர்கள் அச்சத்தில் உள்ளனர்.

அரசாங்கத்தில் உள ளவர்கள் எமது பக்கம் வருவ்தை தடுக்க, எமது பக்கம் உள்ளவர்கள் அரசாங்கத்தில் இணையப் போவதாக அவ்வப்போது பொய்ப பிரசாரத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

குமார வெல்கம அரசாங்கத்துடன் இணைந்து கொள்ளப் போவதாக கூறுவதும் அப்படியான பொய்களில் ஒன்று. வெல் கமவும் இந்த செய்தி பொய்யானது என ஏற் கெனவே கூறியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆகியவற்றின் கூட்டு அரசாங்கத்தற்கு முதலில் குமாரவெல்கமவே எதிர்ப்பு தெரிவித்தார்.

இதனால், மேற்கில் சூரியன் உதிக்கும் நாளில் தான் குமார வெல்கம அரசாங்கத்துடன் இணைவார். மகிந்தானந்த அலுத்கமகே அரசாங்கத்துடன் இணையப் போவதாக கடந்த மாதம் பொய் ஒன்றை கூறினார். அர சாங்கத்திற்கு செல்லவில்லை. இறுதியில் சிறைக்கே சென்றார். அரசாங்கத்தின் இந்த பொய்கள் 10 மாதங்களுக்கு முன்னர் தொடங்கியது.

2015ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படும் போது கூட்டு எதிர்க் கட்சியின் 8 உறுப்பினர்கள் அரசாங்கத்தில் இணைந்து கொள்ளப்போவதாக அமைச்சர் ராஜித சேனாரத்ன கூறினார்.

வரவு செலவுத்திட்டத்திற்காக வாக்கெடுப்பு முடிந்து 10 மாதங்கள் ஆகிவிட்டது. எவரும அர சாங்கத்தில் இணையவில்லை எனவும் உதய கம்மன்பில குறிப்பிட்டுள்ளார். (செ)

**கண்ணீர் அஞ்சலி**



எமது கல்லூரி ஆசிரியர் திருமதி **யோ.சிவஞானம்** அவர்களின் அன்பு மாமியார் **அமரர் திருமதி மகேஸ்வரி ஆலாலசுந்தரம்** அவர்கள் காலமானதையிட்டு அவர்களின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

(5965)

**ஆசிரியர் நலன்புரிக் கழகம்**


**யா/கொக்குவில் இந்துக் கல்லூரி**

# இனஅழிப்பின் பிரதிபலிப்பே உயிர்களை காவுகொண்டது

## வடமாகாண முதலமைச்சர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

**சிறுபான்மை இனத்தை இல்லாதொழிக்க மேற்கொண்ட முயற்சிகளின் பிரதிபலிப்பே இன்று பல்லாயிரக்கணக்கான தமிழ், சிங்கள மக்களின் உயிர்களைக் காவுகொண்டுள்ளது என வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.**



அன்று எதேச்சதிகாரமாக செயற்பட்ட அரசியற் தலைமைகள் தமது ஆட்சியதிகாரங்களைப் பயன்படுத்தி அன்றைய பதற்ற நிலைகளைத் தணித்து இனங்களுக்கிடையே ஒற்றுமையை உண்டாக்குவதற்கும் ஏற்ற முயற்சிகளில் ஈடுபட்டிருந்தால் இன்று அனைத்து இனங்களும்இலங்கைத் தீவில்சுதந்திரமாக வாழ்வதற்கான சந்தர்ப்பங்கள் ஏற்பட்டிருக்கும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

வடமாகாண இளைஞர் கொள்கைகள் செயற்றிட்டம் தொடர்பில் பங்குதாரர்கள் உடனான ஆலோசனைக் கூட்டம் நேற்றைய தினம் யாழ். கிறீன்கிறாஸ் ஹோட்டலில் நடைபெற்றது.

அதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் உரையாற்றுகையில்,

வடபகுதி இளைஞர், யுவதிகள் ஒரு காலத்தில் கல்வியில் மேம்பட்டவர்களாக, ஒழுக்க சீலர்களாக உலகெங்கும் போற்றப்படுகின்ற அல்லது அடையாளப்படுத்தப்பட்ட ஒரு பண்பட்ட இனம் அல்லது சமூகம் என்ற பெருமையைக் கொண்டிருந்தனர்.

எனினும் இந்த நாட்டில் ஏற்பட்ட நீண்டகால கொடிய யுத்தம் இங்கிருக்கும் எமது அனைத்து இருப்புக்கள், கல்வி நடவடிக்கைகள், பொருளாதாரம், பண்பாடு, அடிப்படை உரிமைகள் அனைத்தையும் பாதித்து விட்டது.

இன்றைய இளைஞர்.யுவதிகள் வெளிநாடு செல்ல வேண்டும் என்று கனவுகண்டு கொண்டிருக்கின்றார்கள். வெளிநாட்டுப் பணங்களைப் பணத்தின் அருமை தெரியாமல் ஊதாரிச் செலவு செய்து கொண்டிருக்கின்றார்கள். கல்வி மீதும் ஒழுக்கம் மீதும் பண்பட்ட பாரம்பரியம் மீதும் அவர்கள் சிந்தனைகள் செல்வதாகத் தெரியவில்லை.

அந்நியர் ஆட்சிக் காலத்தில் பல நூறு வருடங்கள் சகோதர இனங்களாக வாழ்ந்து வந்த சிங்கள, தமிழ் சமூகங்கள் இலங்கைக்கான சுதந்திரம் கிடைப்பதற்கும் ஆங்கிலேயர் ஆட்சியை இல்லாது ஒழிப்பதற்கும் சேர்ந்து போர்க்கொடியேந்தினர்.

ஆனால் இலங்கை சுதந்திரம் பெற்று ஒரு சொற்ப காலத்தினுள்ளேயே இனங்களுக்கிடையே கருத்து வேறுபாடுகளும் மோதல்களும் ஏற்படத் தொடங்கின.

தாம் எண்ணிக்கையில் கூடியிருந்ததால் எண்ணிக்கையில் குறைந்தவர்களைக் குட்டி வைக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டு பல மனித உரிமை மீறல் நடவடிக்கைகளில் பங்குபற்றத் தலைப்பட்டனர் குறிப்பிட்ட பெரும்பான்மையினர்.

பல்வேறு கால இடைவெளிகளில் தமிழர்களின் சொத்தை சூறையாடுவதும் அவர்களின் இருப்பிடங்களை ஆக்கிரமித்தல், அழித்தொழித்தல் போன்ற தொடர்நெருக்கடிகளின்விளைவே தமிழ் இளைஞர் களை. இள இரத்தங்களை வன்முறைச் செயற்பாடுகளில் ஈடுபடத் தூண்டின.

அன்றைய அரசியற் தலைமைகள் இவ்வாறான தருணங்களில் தமது ஆட்சியதிகாரங்களைப் பயன்படுத்தி அன்றைய பதற்ற நிலைகளைத் தணித்து இனங்களுக்கிடையே ஒற்றுமையை உண்டாக்குவதற்கும் புரிந்துணர்வுடன் வாழ்வதற்கும் ஏற்ற முயற்சிகளில் ஈடுபட்டிருந்தால் இந்த இலங்கைத் தீவினுள் அனைத்து இனங்களும்ஐக்கியத்துடனும் புரிந்துணர்வுடனும் சுதந்திரமாக வாழ்வதற்கான சந்தர்ப்பங்கள் நிறைய இருந்திருக்கும்.

அன்றைய அரசியற் தலைமைகள் தமது அரசியல் சுயலாபங்களுக்கும் தமது பாராளுமன்ற இருப்பைத் தக்க வைத்துக் கொள்வதற்கும் அப்பாவிச் சிங்கள மக்களை பிழையான வழிகளில் நெறிப்படுத்திஅவர்களிடையே பொய்ப் பிரசாரங்களையும் மற்றும் இனவாதத்தைத் தூண்டக் கூடிய பிரசாரங்களையும் முடுக்கிவிட்டார்கள். அன்று எதேச்சதிகாரமாக செயற்பட்ட அரசியற் தலைமைகள் சிறுபான்மை இனத்தை இல்லாதொழிக்கவும் அவர்களின் இருப்பிடங்களை தமதாக்கிக் கொள்ளவும் மேற்கொண்ட முயற்சிகளின் பிரதிபலிப்பே இன்று பல்லாயிரக்கணக்கான தமிழ், சிங்கள மக்களின் உயிர்களைக் காவுகொண்டுள்ளது. அது மட்டுமல்ல. இன்னும் பல்லாயிரக்கணக்கானவர்கள்உடலுறுப்புக்களை இழந்த வர்களாகவும் நடைப்பிணங்களாகவும்வாழுகின்றஒரு துன்ப நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

வாழ்வாதாரங்களைத் தொலைத்துவிட்டு மற்றையோரின் தயவை எதிர்பார்க்கும் துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

பாரிய யுத்த நிகழ்வுகளின் விளைவாக இங்குள்ள இளைஞர், யுவதிகள் பதற்ற நிலைக்கு உள்ளானார்கள். அவர்கள் கல்வியின் பால் கவனம்"செலுத்த முடியாமல் தத்தளித்தார்கள்.

அரச படைகளின் அட்டூழியங்களால் தமது வாழ்விடங்களில் வாழப்பயந்து பலர் உயிரைக் கையில்பிடித்தபடி வெளிநாடுகளுக்கும் இலங்கையின் வேறு பாகங்களுக்கும் ஓடித்தப்பினர். இதனால்கல்வி பாதிக்கப்பட்டது. உடல் நிலைபாதிக்கப்பட்டது. உள்ளம் பாதிக்கப்பட்டது. பொருளாதாரம் பாதிக்கப்பட்டது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# இலங்கைக்கு சர்வதேச ரீதியில் முன்னோக்கிச் செல்ல சந்தர்ப்பம்

## அமைச்சர் மங்கள தெரிவிப்பு

ஐக்கிய நாடுகள் சபையின் 71 ஆவது பொதுச் சபைக் கூட்டம் என்பது இலங்கைக்குசர்வதேசரீதியில்மேலும்முன்னோக்கி செல்ல கிடைத்துள்ள சந்தர்ப்பம் என வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

நியூயோர்க்கில் இருந்து வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றிலேயே அமைச்சர் இதை தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு சர்வதேச ரீதியில் மிகப் பெரிய வரவேற்பு கிடைத்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

நியூயோர்க்கில் நேற்று ஆரம்பமான ஐக்கிய நாடுகள்சபையின்பொதுச்சபைக்கூட்டம் எதிர்வரும் 26ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூன் தலைமையில் நடைபெறும் இந்த கூட்டம் சில காரணங்களால் முக்கியத்துவம் பெறுகிறது.

10 வருடங்களாக செயலாளர் நாயகமாக பதவி வகித்த பான் கீ மூன் தலைமையில் நடைபெறும் இறுதி பொதுச்சபைக் கூட்டம் இதுவாகும். இதனை தவிர குடியேற்றவாசிகள் தொடர்பான மாநாடும் நியூயோர்க்கில் ஐ.நா மற்றும் அமெரிக்காவின் அனுசரணையில் நடைபெறவுள்ளது. இந்த மாநாடு அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா தலைமையில் நடைபெறவுள்ளது.



ஒபாமா மாநாட்டில் உரையாற்றவுள்ளதுடன் அவர் உரையாற்றும் இறுதி மாநாடு இதுவாகும். இதனிடையே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாளை 21 ஆம் திகதி ஐக்கிய நாடுகள் சபையில் உரையாற்றவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

# மகிந்தவுக்காக ஓர் உயர் பதவி காத்திருக்கிறது

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியை தான் ஒருபோதும் எதிர்க்கவில்லை. ஆனால் ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்து குழுவாகவுள்ள ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியையே தான் வெறுப்பதாக முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான குமார வெல்கம தெரிவித்துள்ளார்.

மொனராகலையில் இடம் பெற்ற ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். எதிர்வரும் தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு உயர்ந்த பதவி கிடைக்கவுள்ளதாகவும் இது வியப்படையக் கூடியதாக அமையும் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் குமாரவெல்கம தெரிவித்தார். (இ-7-10)

# ஜெனிவா பயணமானார் சந்தியா எக்னெலிகொட

கடத்திச் செல்லப்பட்டு காணாமற் போகச் செய்யப்பட்ட ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொடவின் மனைவி சந்தியா எக்னெலிகொட நேற்று முற்பகல்10.05மணியளவில்சுவிட்சர்லாந்து புறப்பட்டுச் சென்றுள்ளார். ஜெனிவாவில் நடைபெறும் ஐ.நா. மனித உரிமை பேரவை கூட்டத்தில் கலந்து கொள்ளும் நோக்கில் அவர் அங்கு புறப்பட்டுச் சென்றுள்ளார்.

இலங்கையில் காணாமற் போனோரின் மனித உரிமை சம்பந்தமாக சந்தியா செயற்பட்டு வருகிறார்.

இலங்கை இராணுவத்தினர் இரசாயன ஆயுதங்களை பயன்படுத்தியதாக சந்தியாஎக்னெலிகொடஜெனிவா மனித உரிமை பேரவையில் ஒருமுறைகுற்றச்சாட்டை முன்வைத்திருந்தார்.

பிரகீத் எக்னெலிகொட விடுதலைப் புலிகளின் உளவாளி என மகிந்த ராஜபக்ஷவின் முன்னாள் அரசாங்கம் குற்றம் சுமத்தியிருந்தது.

எனினும் எக்னெலிகொடவிற்கும் புலிகளுக்கும் எந்த தொடர்பும் இல்லை என குற்றப் புலனாய்வு பிரிவினர் அண்மையில் நீதிமன்றத்திற்கு அறிவித்தனர்.

2010 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளராக போட்டியிட்ட சரத் பொன்சேகாவின் தேர்தல் பிரசாரங்களுக்கு எக்னெலிகொட பங்களிப்பு வழங்கியிருந்தார். அத்துடன் ராஜபக்ஷ குடும்பத்தினர் தொடர்பில் குடும்ப மரம் என்ற கட்டுரையை எழுதியிருந்தார்.

இந்த இரண்டு விடயங்கள் அவரை கடத்திச் செல்லப்பட காரணம் எனக் கூறப்படுகிறது.

இந்த நிலையில், ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் கூட்டத் தொடர் ஜெனிவாவில் நடைபெறவுள்ளது. புலம்பெயர் அமைப்புகள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக ஜெனிவா சென்றுள்ளனர். இலங்கையில் இடம் பெற்றதாக கூறப்படும் போர்க் குற்றங்கள் குறித்து விசாரணை நடத்த ஸ்தாபிக்கப்படவுள்ள நீதிமன்ற செயற்பாடுகளானது சர்வதேச தலையீட்டுடன் செயற்படுத்தப்பட வேண்டும்என கடந்த வாரம்ஜெனிவா மனித உரிமை பேரவையில் மீண்டும் யோசனை முன் வைக்கப்பட்டது. (இ-7-10)

# சிறைக் கைதி ஒருவர் தூக்கிட்டு தற்கொலை

மாத்தறை சிறைச்சாலையில் கைதியொருவர் தூக்கிட்டு நேற்று தற்கொலை செய்துகொண்டுள்ளார். 48வயதான குறித்த கைதி மூடிய அறையில் இவ்வாறு தற்கொலை செய்து கொண்டுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதேவேளை, சென்றவாரம் புசல்லாவ பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட சந்தேக நபர் ஒருவர் பொலிஸ் சிறைக்கூண்டுக்குள் வைத்து தூக்கில் தொங்கி தற்கொலை செய்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

# இலங்கையிலுள்ள கர்ப்பிணி பெண்களுக்கு ஓர் அறிவித்தல்

ஸிகா வைரஸ் (Zika) தொற்றுள்ள நாடுகளுக்கு பயணிப்பதை கர்ப்பிணிப் பெண்கள் தவிர்க்குமாறு சுகாதார அமைச்சு அறிவுறுத்தியுள்ளது.

மேலும், ஸிகா வைரஸ் மற்றும் சிக்குன்குனியா போன்ற தொற்றுக்களைத் தடுக்கும் நோக்குடன் இலங்கையின் பிரதான விமான நிலையங்கள் மற்றும் கொழும்பு துறைமுகம் ஆகியன அதி அவதானத் திற்குரிய பகுதிகளாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. சிங்கப்பூர், மலேசியா, பிரேசில் மற்றும் தென்னமெரிக்கா ஆகிய நாடுகளில் இந்த ஸிகா வைரசின் தொற்று அதிகமாக காணப்படுவதாக தெரியவந்துள்ளது. (இ-7)

# விஷத்தன்மை கொண்டவரை வெல்ல ஒரே வழி அவருடன் விளையாடாமல் இருப்பதுதான்

## பயஸுக்கு சானியா பதிலடி



விஷத்தன்மை வாய்ந்த நபரை வெல்வதற்கு ஒரே வழி அவர்களுடன் விளையாடாமல் இருப்பதுதான் என்று லியாண்டர் பயஸ் கருத்துக்கு சானியா காட்டமாக பதில் அளித்துள்ளார்.

இந்தியாவின் முன்னணி டெனிஸ் வீரர்களாக லியாண்டர் பயஸ், ரோஹன் போபண்ணா, சானியா மிர்சா ஆகியோர் திகழ்ந்து வருகிறார்கள்.

ரியோ ஒலிம்பிக் ஆண்கள் இரட்டையர் பிரிவில் போபண்ணா விளையாட தேர்வு பெற்றார். இதனால் இந்தியாவின் மற்றொரு வீரருடன் போபண்ணா கலந்து கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது. போபண்ணா லியாண்டர் பயஸ் உடன் ஜோடி சேர விரும்பவில்லை. ஆனால், அகில இந்திய டெனிஸ் கூட்டமைப்பு லியாண்டர் பயசுடன் இணைந்துதான் விளையாட வேண்டும் என்று கூறியது.

கலப்பு இரட்டையர் பிரிவில் சானியா மிர்சா ரியோ ஒலிம்பிக்குக்கு தகுதி பெற்றார். அவர் தன்னுடன் விளையாடும் நபரை தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம் என்ற நிலை இருந்தது. அவர் போபண்ணாவுடன் ரியோவில் கலந்து கொண்டார். இந்த இரண்டு ஜோடியும் ரியோவில் தோல்வியை சந்தித்தது.

2012-ம் ஆண்டு லண்டனில் நடைபெற்ற கலப்பு இரட்டையர் பிரிவில் சானியா மிர்சா லியாண்டர் பயசுடன் விளையாடினார். அப்போது சானியா மகேஷ் பூபதியுடன் ஜோடி சேர விரும்பினார். ஆனால், இந்திய டென்னிஸ் கூட்டமைப்பு சம்மதிக்கவில்லை.


அதன்பின் பொதுவாக போபண்ணா, சானியா மிர்சா ஆகியோர் லியாண்டர் பயசுடன ஜோடி சேர விரும்பவில்லை.

இந்நிலையில் இந்தியாவில் டேவிஸ் கோப்பை போட்டியில் இந்தியா - ஸ்பெயின் அணிகள் டெல்லியில் மோதின. இதில் இந்தியா 0:5 என தோல்வியை சந்தித்தது. இந்த போட்டியின் போது ரியோவிற்கு இந்தியாவின் கலப்பு இரட்டையர் ஜோடி சரியாக அமையவில்லை என்று பயஸ் கூறியிருந்தார்.

இதற்கு கடுமையாக எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் சானியா மிர்சா கருத்து வெளியிட்டுள்ளார். இதுதொடர்பாக சானியா தனது டுவிட்டர் பக்கத்தில் "விஷத்தன்மை கொண்ட நபரை வெல்ல ஒரே வழி, அவர்களுடன் விளையாடாமல் இருப்பதுதான்" என்று பயசை மறைமுகமாக சாடியுள்ளார். மேலும், #karmaiswatching #zenmode என்ற இரு ஹேஸ்டேக்கையும் உருவாக்கியுள்ளார்.

சானியாவின் இந்த கருத்தினை ஏராளமானோர் டுவீட் செய்துள்ளனர். அவர்களில் போபண்ணாவும் ஒருவர், அவர் தனது டுவிட்டரில், "இது திரும்பவும் நடைபெற்றுள்ளது. சக வீரர்களை வசைபாடி மீடியாக்களில் செய்தி வருவதற்காக செய்யப்படும் வழக்கமான சூழ்ச்சிதான் இது" என்று குறிப்பிட்டுள்ளார். அத்துடன் #Patriotism என்ற ஹேஸ் டேக்கையும் உருவாக்கியுள்ளார். (க)

## கட்டமைப்பில் உள்ள குறைபாடே நாங்கள் பின்தங்கியதற்கு காரணம்



உள்நாட்டு கட்டமைப்பில் உள்ள குறைபாடே ஒருநாள் போட்டிகளில் நாங்கள் பின்தங்கி இருக்க முக்கிய காரணம் என்று டெஸ்ட் அணித்தலைவர் மிஸ்பா கூறியுள்ளார்.

டெஸ்ட் தரவரிசையில் பாகிஸ்தான் அணி 111 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளது. 2-வது இடத்தில் இந்தியாவும் 3-வது இடத்தில் அவுஸ்திரேலியாவும் உள்ளன.

மிஸ்பா தலைமையிலான டெஸ்ட் அணி ஜொலித்துக் கொண்டிருக்கும் போது, இளம் வீரர்களை கொண்ட ஒருநாள் மற்றும் இருபது-20 அணி தடுமாறி வருகிறது.

இந்நிலையில் ஒருநாள் போட்டிகளில் சிறப்பாக செயல்பட முடியாமல் போவதற்கு உள்நாட்டு கட்டமைப்பே காரணம் என்று குற்றம்சாட்டியுள்ளார் மிஸ்பா.

அவர் மேலும் கூறுகையில், உள்ளூர் கிரிக்கெட் தொடர்களில் ஒருநாள் கிரிக்கெட்டிற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து அதிக போட்டிகளை நடத்த வேண்டும் என்று நான் நீண்டகாலமாக கூறி வருகிறேன்.

ஒருநாள் தொடருக்கு குறைந்த முக்கியத்துவமே கொடுக்கப்படுகிறது. கிளப் லெவலில் கூட ஒருநாள் தொடர் நடைபெறுவதில்லை. அப்படி என்றால் நம்மால் இந்த வகை கிரிகெட்டில் வளர முடியாது என்று கூறியுள்ளார்.(க)

## நுவான் குலசேகர பிணையில் விடுதலை

கம்பஹா-கிரில்லவெல ரன்முத்துகல பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்து தொடர்பில் கைது செய்யப்பட்ட இலங்கை கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சாளர் நுவான் குலசேகர



பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.


ரன்முத்துகல பிரதேசத்தில் கார் மோதியதில் நிட்டம்புவ பிரதேசத்தைச் சேர்ந்த 28 வயதுடைய இளைஞன் ஒருவர் உயிரிழந்தார்.

இதுதொடர்பில் காரை செலுத்திய நுவன் குலசேகரவை கடவத்த பொலிஸார் சந்தேகத்தின் பேரில் கைது செய்தனர்.

இதனைத் தொடர்ந்து நுவான் குலசேகர பொலிஸ்பிணையில்விடுதலை செய்யப்பட்டதாக கடவத்த பொலிஸார் குறிப்பிட்டனர். (க)

## ஸ்ரார்க், ஸ்டெயின்தான் உலகில் சிறந்தவர்கள்

### வேகப் பந்துவீச்சு குறித்து கில்கிறிஸ்ட்



அவுஸ்திரேலிய அணியின் மிட்செல் ஸ்ரார்க், தென்னாபிரிக்காவின் டேல் ஸ்டெயின் ஆகியோர்தான் உலகின் சிறந்த வேகப்பந்து வீச்சாளர்கள் என்று கில்கிறிஸ்ட் பாராட்டியுள்ளார்.

அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் விக்கெட் கீப்பரும்,தொடக்க ஆட்டக்காரராகவும் திகழ்ந்தவர் அடம் கில்கிறிஸ்ட். 44 வயதாகும் இவர், தனது துடுப்பாட்டத்தால் உலக பந்து வீச்சாளர்களை அச்சம் அடைய வைத்தார். கிரிக்கெட்டில் மிட்செல் ஸ்ரார்க், நீண்ட காலமாக தொடர்ச்சியாக சிறந்த வகையில் பந்து வீசி வரும் டேல் ஸ்டெயின் ஆகியோர்தான் சிறந்த வேகப்பந்து வீச்சாளர்கள் என்று கில்கிறிஸ்ட் கூறியுள்ளார்.

இது குறித்து அவர் கூறுகையில், "மிட்செல ஸ்ரார்க்தான் சிறந்த பந்து வீச்சாளர். அப்படி டொப் பந்து வீச்சாளராக இல்லாவிடினும், மிகச்சிறந்த டொப் பந்து வீச்சாளர்களில் ஒருவராக இருப்பார்.

நீண்ட கால காயத்தில் இருந்து மீண்டு வந்த டேல் ஸ்டெயின், மிகவும் அபாரமாக பந்து வீசுகிறார். இந்த தலைமுறையின் அனைத்து வேகப்பந்து வீச்சாளர்களும் அவரைப் போல் ஆக வேண்டும் என்று விரும்புவார்கள். அவர்கள் ஸ்டெயினைப் போல் நீண்டகாலம் விளையாட வேண்டும்என ஆசைப்படுவார்கள். எந்தவொரு சம்பியனுக்கு நீண்ட நாட்கள் விளையாடுவது மிகப் பெரிய சோதனையாக இருக்கும் என்று நினைக்கிறேன் என்றார்.

12 வருடங்களாக டெஸ்தொடரில்விளையாடி வரும் ஸ்டெயின் 416 விக்கெட்டுக்கள் வீழ்த்தி 2-ஆவது இடத்தில் உள்ளார். இங்கிலாந்து அணியின் ஜேம்ஸ் அண்டர்சன் 463 விக்கெட்டுக்களுடன் முதல் இடத்தில் உள்ளார். (க)


### மரண அறிவித்தல்

## இராமநாதன் செல்வலட்சுமி

மண்டைதீவைப் பிறப்பிடமாகவும், அல்லைப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட இராமநாதன் செல்வலட்சுமி நேற்று (19.09.2016) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிதம்பரநாதர் சொர்ணம்மா தம்பதிகளின் புதல்வியும், காலஞ்சென்றவர்களான வேலணையைச் சேர்ந்த சரவணமுத்து நாகேஸ்வரி தம்பதிகளின் மருமகளும் ஆவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:-
செ.நடேசபிள்ளை,
இராமச்சந்திரன்
(திருகோணமலை)

130, இராசாவின் தோட்ட வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-5835)

# உயர் பொலிஸ் அதிகாரிகளுக்கு அழைப்பு விடுத்துள்ள பிரதமர்

பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர உள்ளிட்ட முக்கிய பொலிஸ் அதிகாரிகளை பிரதமர்ரணில் விக்கிரமசிங்கஅலரிமாளிகைக்கு இந்த வாரம் அழைத்துள்ளார். புதியபொலிஸ்மா அதிபராக பூஜித ஜயசுந்தர நியமனம் பெற்று 6 மாதத்திற்குள் பொலிஸ் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னேற்றங்கள் தொடர்பில் இதன்போது பிரதமர் கலந்துரையாடுவார் எனவும் எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

அத்துடன், பொலிஸ் தொடர்பில் தற்போது பொதுமக்களுக்கு ஏற்பட்டுள்ள அவ நம் பிக்கையை மீண்டும் கட்டி யெழுப்ப பொலிஸ்மா அதிபர் எடுத்துள்ள நடவடிக்கைகள் தொடர்பாகவும் பிரதமர் கரு த்துக்களை பெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சந்திப்பின் போது அமைச்சர் சாகல ரத்நாயக்க வையும் பிரதமர் அழைத்திருப்பதாக பிரதமர் தரப்பு தகவல்கள் தெரிவித்துள்ளன.

மேலும், அனைத்து குற்றங்கள் தொடர் பான நேரடி அறிக்கையினை அமைச்சின் செய லாளருக்கு வழங்குமாறு பொலிஸ் உயர் மட்ட அதிகாரி களுக்கு அமைச்சு அறிவுரை வழங்கி யுள்ளதாகவும் குறிப்பி டப்பட்டுள்ளது. (இ-7-10)

யாரிடம் பேசுவது?

யார் என்னைப் புரிந்து கொள்வார்?
நான் வாழ்ந்து என்ன பிரயோசனம்?
நான் என்ன தவறு செய்தேன்?
என்னால் எதுவுமே முடியவில்லை ....
என்பன போன்ற எண்ணங்களா?

எம்முடன் பேசுங்கள்.

கை கொடுக்கும் நண்பர்கள்
104, 4 ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்
*மதசார்பற்றது *ரகசியமானது * இலவச சேவை
021 222 8117, 077 900 8776
வவுனியா: (024) 324 4444
(சனி, ஞாயிறு காலை 9.00 - 1.00)
(பி/5649)

## ஜோதிடத் தகவல்

### மஞ்சள் ஆடையின் மகிமை

குரு திசை நடப்பவர்கள் மஞ்சள் ஆடை அணிந்து கொண்டால் குருதிசை நீச்ச திசையாக இருந்தாலும் கூட நன்மையை கொடுக்கும். எப்போதும் மஞ்சள் துண்டு அணிந்து கொள்வது குரு திசை முடியும் வரை நன்மை தரக்கூடும்.

ஓம் விராட் விஸ்வப்பிரமனே நமஹ

# 90 ஆம் நாள் நினைவலைகள்





அமரர் தேவராசா (நகுலன்) நிரோஜ்

அன்னை மடியில்
1999.08.20
ஆண்டவன் மடியில்
2016.06.23

நிரோஜ் என்றால் எங்கள் வீடு நந்தவனம் இன்று துக்கமதை தந்துவிட்டு சென்று விட்டாய்
எங்கள் வீடோ பாலைவனம்
சோகத்தில் எம்மை ஆழ்த்தி விட்டு ஆண்டவனிடம் சென்று விட்டாய்
எல்லையில்லா வானத்தில் சந்திரன் எவ்வளவு அழகு
அது போல் உன் நெற்றியில் உள்ள திருநீறும் அழகுதான்
பொருந்திய உறவுகள் எல்லாம் துடியால் துடிக்க நெருங்கிய எங்கள் நெஞ்சத்து
அன்பு மறந்து கல்வியை மறந்து எங்களை பிரிந்து போன மாயம் தான் என்ன
நூற்றாண்டு காலம் வாழ்வாய் என எண்ணினோம்
பாதியிலே மின்னி மறைந்து விட்டாயோ?
ஆயிரம் உறவுகள் இருந்தும் என்ன உன் உறவிற்கு ஈடாகுமோ
உனது ஆத்மா சாந்தியடைய எங்கள்
கண்ணீர் மலர்த்துளிகளை காணிக்கை ஆக்குகிறோம்.

இவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினர்.
மாமா குடும்பம் (இராசலிங்கம்)
அன்ரி குடும்பம் (சர்வேஸ்வரன்)

காளிகோவிலடி,
தாவடி வடக்கு.

(5941)

# இராசி பலன்

20.09.2016
(புரட்டாதி 04, செவ்வாய்க்கிழமை)
சூரிய உதயம் காலை 6.00 மணிக்கு
சதுர்த்தி மாலை 4.31 மணிவரை
பரணி பின்னிரவு 1.22 மணிவரை
சுபநேரம் 10.33-12.03 மணிவரை
இராகுகாலம் 3.03-4.33 மணிவரை
மகாபரணி

| | | | |
|---|---|---|---|
| | | | |
| கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் அத்தம், சித்திரை | | |
| | | | ராகு புத |
| செவ் | சனி | சுக் | குரு சூரி |

**மீனம்:** எதிர்பாராத தன வரவுகள் வந்து சேரலாம், தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உரு வாகும், இறைவழிபாடு களில் நம்பிக்கை கூடும்.

**மேடம்:** உடல் நலனில் அதிக அக் கறை காட்டுவீர்கள், கனவு பலிதமுண்டு, பணியில் சிறு மன உளைச்சல் ஏற்பட லாம்,போசன சுகமுண்டு.

**இடபம்:** நண்பர்கள் சந்திப்பால் சுப விர யங்கள் ஏற்படலாம், விருப்ப ங்கள் நிறைவேற விநாயகரை வழிபட வேண்டிய நாள், பய ணத்தால் பலனுண்டு.

**மிதுனம்:** இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், தனவரவுகள் திருப்திகரமாக அமையும், எதிர்கால வெற் றிக்கு அடித்தளம் அமைப் பீர்கள்.

**கும்பம்:** முயற்சிகளில் முத்தான வெற்றி கிடைக்கும், பொல் லாதவர்கள் உங்களை விட்டு விலகுவர், குடும்பப் பொறு ப்புக்கள் கூடும்.

**கடகம்:** தொட்ட காரியங்களில் வெற்றி பெறுவீர்கள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், உங்களின் யோச னைக்கு நல்ல பாராட்டுக்கள் கிடைக்கும்.

**மகரம்:** செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், பெற்றோரின் நல னில் அக்கறை காட்டுவீர்கள், வாகன சுகமுண்டு, நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர்.

**சிம்மம்:** சிக்கல்கள் விலகி சிறப்புக் கள் கூடும் நாள், வீட்டை சீரமைப்பதில் அக்கறை காட்டுவீர்கள், முற்கோபமும் அலைச்சலும் அகலும்.

**தனுசு:** கேளிக்கைக் கொண்டாட் டங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, இல்லம் தேடி இனிய தகவல்கள் வந்து சேரலாம்.

**விருச்சிகம்:** ஆராக்கியமான நாள், தொழில் முயற்சிகளில் அதிக பிரயாசை காட் டுவீர்கள், போசன சுக முண்டு, முயற்சிகள் கைகூ டும்.

**துலாம்:** சுற்றத்தாரின் வருகை யுண்டு, வெளியூர்ப் பயணத் தால் ஆதாயம் ஏற்படும், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும், போசன சுக முண்டு.

**கன்னி:** குடும்பப் பெரியவர்கள் உங் கள் செயற்பாடுகளில் குறை கண்டு கூறலாம், வாகனப் பழு துச் செலவுகள் ஏற்படலாம், பயணங்களின் போது பொரு ட்களில் கவனம் தேவை.

வளவன்



யாழ்.மறை மாவட்டத்தின் பிரசித்திபெற்ற யாத்திரை ஸ்தலமான வேலணை சாட்டி புனித சித்தாத்திரை மாதா திருவிழா திருப்பலியும் அன்னையின் திருச்சுரூப பவனியும் ஓய்வுநிலை ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற போது...

# சிறுநீரகங்கள் செயலிழப்பு; உதவி செய்யக் கோரிக்கை

கிளிநொச்சி ஆனந்தபுரத்தைச் சேர்ந்த இன்பநாதன் விஜயராணி என்பவர் இரண்டுசிறுநீரகங்களும்செயலிழந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இறுதியுத்தத்தின் போது தனது கணவனை இழந்த இவர் மிகவும் வறுமைப்பட்ட நிலையில் எவ்வித உதவிகளும் இன்றி கடந்த பல மாத காலமாக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

உதவிக்காக காத்திருக்கும் அப்பெண் கூறுகையில்,

இறுதி யுத்த காலப்பகுதியில் பல இடங்களுக்கு இடம்பெயர்ந்து அலைந்து திரிந்தோம்.

புதுமாத்தளன் பதுங்கு குழியில் இருந்தோம். பதுங்கு குழி வாசலில் இருந்த என் கணவர் செல் விழுந்து இறந்துவிட்டார். நான் எனது பிள்ளைகளை அழைத்துக் கொண்டு ஓடிவிட்டேன்.

இறுதி யுத்தத்தில்பல்வேறு இன்னல்களுக்கு முகங்கொடுத்து தற்பொழுது சொந்த ஊரான கிளிநொச்சி ஆனந்தபுரத்தில் எந்தவித உதவிகளுமின்றி வாழ்ந்து வருகின்றோம்.

எனக்கு இரண்டு சிறுநீரகங்களும் பாதிக்கப்பட்டு ஆரம்பத்தில் கண்டியில் சிகிச்சை பெற்று வந்தேன். பொருளாதார வசதியின்மையால் அநுராதபுரம் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுப் பின் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறேன். எனக்கு இரு பிள்ளைகள். ஒரு ஆண்பிள்ளை அவர் ஒரு மாற்றுத் திறனாளி, மற்றையவர் பெண்பிள்ளை. நான் இருவரையும் தனிமையில் விட்டு விட்டு வைத்தியசாலையில் இருக்கிறேன். ஊது பிள்ளைகள் எவரது உதவியுமின்றி என்னைக் காப்பாற்றுவதற்காக உதவி கேட்டு அலைந்துகொண்டிருக்கிறார்கள். என்னைப் பார்ப்பதா ? அல்லது என் சிகிச்சைக்காக நிதியைச் சேகரிப்பதா? என்று வழி தெரியாது தவித்துக் கொண்டிருக்கிறார்கள். இரண்டு சிறுநீரகங்களும் செயலிழந்துள்ள தனக்கு ஒரு சிறுநீரகத்தையாவது மாற்றி தான் உயிர் வாழ உதவி செய்யுமாறு மன்றாட்டமாக கோரி நிற்கிறார்.

இவரின்சிகிச்சைக்கு உதவி செய்யவிரும்புவர்கள் 077 784 3509 என்ற தொலைபேசி இலக்கத்துடன் அல்லது 71 709 503 என்ற இலங்கை வங்கிக் (BOC) கணக்கிலும் பணத்தை வைப்பிலிட்டு உதவ முடியும். (இ-3)

### மேய்ச்சலுக்குச் செல்லும் ஆடு, மாடுகள் காணாமற்போவதால்

# கால்நடை வளர்ப்பாளர்கள் கவலை

தெற்குப் பகுதியிலுள்ள வயல், தோட்ட நிலங்கள் மற்றும் பற்றைகள் அமைந்துள்ள இடங்களில் மேய்ச்சலில் ஈடுபடும் ஆடு, மாடுகள் காணாமற் போவதால் கால்நடை வளர்ப்பாளர்கள் கவலையடைந்துள்ளனர்.

குறித்த பகுதியில் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படாத இக்காலகட்டத்தில் கால்நடைகளை மேய்ச்சலுக்கு விடுவது வழக்கமாகும். மேய்ச்சலுக்குசெல்லும் ஆடு, மாடுகள் அண்மைக்காலமாக காணாமற்போகின்றன. இவை இனந்தெரியாதோரால் இறைச்சிக்காக திருடப் பட்டு வருவதாக இப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த வாரம் இரண்டு ஆடுகள், மேய்ச்சலுக்கு கட்டிய இடத்திலிருந்து காணாமற் போயுள்ளன. இப்போது கரணவாய் குஞ்சர் கடைப்பகுதியில் ஆடுகளை களவாகக் கொண்டு போவதாக தெரிய வந்ததையடுத்து அவர்களைப் பின்தொடர்ந்து சென்ற பொழுது நீர்வேலியில் இடைமறித்த பொழுது வாக்கு வாதம் ஏற்பட்டு ஆடுகளை கொண்டு சென்றவர்கள் களவைத் தடுக்கப் போனவர்களுக்கு அடித்து விட்டு சென்றுள்ளார்கள்.

எனவே வல்லை வெளியில் கால்நடைகள் கொண்டு செல்லும் பொழுது கவனம் எடுக்க வேண்டும் எனவும் இல்லாவிட்டால் வடமராட்சிப் பகுதியில் கால்நடைகள் அழிந்து போய் விடும் எனவும் கால்நடைகள் வளர்ப்போர்கள் இச் சம்பவங்களைக் கட்டுப்படுத்த முற்றுமுழுதாக ஈடுபடவேண்டும்.கால்நடை திருட்டை தடுத்து நிறுத்த உரிய நடவடிக்கைகளை சம்பந்தப்பட்டோர் எடுக்க வேண்டும் என கால்நடை வளர்ப்போர் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-60)

# வைத்தீசுவரக் குருக்களின் பிறந்ததின நினைவுப்பேருரை

கலாநிதி சிவத்திரு க.வைத்தீசுவரக்குருக்களின் 101வது பிறந்ததின நினைவுப் பேருரையும் திருமுறை இசையும் நாளை மறுதினம் 22 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணியளவில் காரைநகர் வியாவில் ஐயனார் தேவஸ்தானத்தில் இடம்பெறும். (இ-3)




# வாழ்வாதார உதவி வழங்கல்



(யாழ்ப்பாணம்)

இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் உயர்த்தும் கரங்கள் செயற்றிட்டத்தின் கீழ் கொக்குவில் பகுதியில் வசித்து வரும் போரில் கணவனை இழந்த முன்னாள் போராளி ஒருவரின் குடும்பத்திற்கு வாழ்வாதார உதவியாக 65ஆயிரம் ரூபா பெறுமதியான பசுமாடு ஒன்று நேற்று முன்தினம் சங்க உறுப்பினர்களால் வழங்கப்பட்டது. (இ-9)

# மனையடி சாஸ்திரம் நூல் வெளியீட்டு விழா


(யாழ்ப்பாணம்)

நீர்வைமணி பிரம்மஸ்ரீ கு. தியாகராஜக் குருக்கள் எழுதிய *மனையடி சாஸ்திரம்* என்ற நூலின் வெளியீட்டு விழா நாளை மறுதினம் வியாழக்கிழமை மாலை 5.30 மணிக்கு நீர்வேலி இராச வீதியில் உள்ள பொன் செல்வமகால் மண்டபத்தில் நடைபெறும்.

கோப்பாய் ஆசிரிய கலாசாலை பிரதி அதிபர் ச.லலீசன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடப் பீடாதிபதி பேராசிரியர் தி.வேல்நம்பி பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

வரவேற்புரையை நீர்வேலி அரசகேசரிப்பிள்ளையார் கோவில் பிரதம குரு பிரம்மஸ்ரீ சா.சோமதேவக் குருக்களும் ஆசியுரையை பிரம்மஸ்ரீ சா.சோமாஸ்கந்தக்குருக்களும் நூல் அறிமுகவுரையை ஓய்வுபெற்ற பிரதிக் கல்விப் பணிப்பாளர் இ.குணநாதனும் நூல் ஆய்வுரையை பிரம்மஸ்ரீ ப. சிவானந்த சர்மாவும் (கோப்பாய் சிவம்) வழங்குவர். (இ-10)

# நூல்கள் அன்பளிப்பு



அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத்திற்கு வடமாகாண சபை உறுப்பினர் எஸ். அகிலதாஸினால் ஒரு தொகுதி நூல்கள் வழங்கப்பட்டுள்ளன.

வடமாகாண சபையின் 2016 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீட்டில் இருந்து கிடைக்கப்பெற்ற நிதியான 25 ஆயிரம் ரூபாவிற்கு பாடசாலையின் நூல் நிலையத்திற்கு ஒரு தொகுதி நூல்களை வடமாகாண சபை உறுப்பினர் எஸ். அகிலதாஸினால் நூலகப் பொறுப்பாசிரியரிடம் கையளிக்கப்பட்டன.

இந்நிகழ்வில் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தனர். (இ-60)

## முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டுப் போட்டி

புலோலி தென்மேற்கு கந்த முருகேசனார் சனசமூக நிலையத்தின் கீழ் இயங்கும் கந்த முருகேசனார் மாதிரி முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டுப் போட்டி எதிர்வரும் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு முன்பள்ளி மைதானத்தில் நிலையத் தலைவர் பா.இரகுநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் க.தர்மலிங்கம் கலந்து சிறப்பிப்பார்.(இ-60)

# "எழுக தமிழ்" மக்கள் பேரணிக்கு தமிழர் விடுதலைக்கூட்டணி ஆதரவு

எதிர்வரும் 24 ஆம் திகதி தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள "எழுக தமிழ்" மக்கள் பேரணிக்கு தமிழர் விடுதலைக் கூட்டணி தனது முழு ஒத்துழைப்பையும் வழங்கும். அத்துடன் இப்பேரணி அரசுக்கு ஒரு பாரிய அழுத்தத்தை கொடுக்கும் அளவிற்கு அமைய வேண்டும். அப்போதுதான் நல்லாட்சி என்ற பெயரில் தமிழ் மக்களை மறந்துவிட்டு, ஆட்சி நடத்துபவர்களின் கண்களை திறக்க முடியும்.

மக்கள் நலன் சார்ந்த விடயங்களில் நடத்தப்படுகின்ற எல்லா வகையான போராட்டங்களிலும் தமிழர் விடுதலைக் கூட்டணி தனது பங்களிப்பினை செய்து வந்துள்ளது. அந்த வகையில் எமது கட்சியின் ஆதரவாளர்கள் அனைவரும் தமது முழு ஒத்துழைப்பையும் வழங்குவார்கள். அதுமட்டுமல்லாமல் கட்சி பேதங்களை மறந்து தமிழ் மக்கள் அனைவரும் இந்த பேரணியில் கலந்து கொண்டு அரசுக்கு தமிழ் மக்களின் நிலையினை தெளிவுபடுத்த வேண்டும். அப்போதுதான் ஆட்சியாளர்களின் போக்கில் மாற்றத்தைக் காணமுடியும்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் அவல நிலைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமானால் நாம் அனைவரும் எமக்குள் இருக்கின்ற காழ்ப்புணர்ச்சிகளை எல்லாம் ஒரு புறம் ஒதுக்கி வைத்துவிட்டு, ஒற்றுமையுடன் செயற்பட முன்வர வேண்டும்.

அப்போதுதான் எம் மக்களின் விடிவிற்கு ஒரு வழி காண முடியும் என தமிழர் விடுதலைக் கூட்டணியின் நிர்வாகச் செயலாளர் இரா. சங்கையா விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளார். (இ-7-10)

### மாணவர்களின் பெற்றோர்களை ஆசிரியர்கள் தெரிந்திருந்தால்

# சீரழிந்துவரும் மாணவ சமுதாயத்தை நல்வழிப்படுத்தி கட்டியெழுப்ப முடியும்

## பிரதம நீதியரசர் யாழில் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

**பாடசாலையில் கல்வி கற்கின்ற மாணவர்கள் அனைவரது பெற்றோர்களையும் ஆசிரியர்கள் தெரிந்திருக்க வேண்டும். இதன்மூலமே சீரழிந்து வரும் மாணவ சமுதாயத்தை நல்வழிப்படுத்தி சிறந்த முறையில் கட்டியெழுப்ப முடியும் என பிரதம நீதியரசர் கனகசபாபதி சிறீபவன் தெரிவித்துள்ளார்.**



யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பரிசளிப்பு விழா நேற்றைய தினம் நடைபெற்றது. இந்நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இந்த பரிசில் வழங்கும் விழாவில் பங்குபற்ற ஆயத்தமாகும் போது பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் எனது வீட்டிற்கு வருகை தந்து நீங்கள் செல்லும் நிகழ்விற்கு நாம் பொலிஸ் பாதுகாப்பு வழங்க வேண்டும் என்றார். அதற்கு நான் கூறினேன் இது நான் படித்த பாடசாலை. எனக்கு பெருமளவில் பொலிஸ் பாதுகாப்பு எதுவும் வேண்டாம் என்று தெரிவித்தேன். அதற்கு அவ் அதிகாரி இல்லை ஐயா இந்தப் பாடசாலையின் ஒருசில மாணவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு அவர்களில் சிலர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று கூறினார்.

இதனைக் கேட்ட எனக்கு மிக வேதனையாக இருந்தது. அதன் பின்னர் எனது மெய்ப்பாதுகாவலரை அழைத்து எனக்கு பெரியளவில் எந்தப்பாதுகாப்பு ஏற்பாடுகளும் செய்ய வேண்டாம் எனக் கூறி னேன். அவர் அதனை மேல் நீதிமன்ற நீதிபதியிடம் சென்று கூறினார். எனக்கு சிறிது நேரத்தில் ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது. அதில் சேர் நீங்கள் அந்த நிகழ்விற்கு செல்வதாக இருந்தால் உங்கள் பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள் என்று கூறப்பட்டிருந்தது. நான் இப்படியான சம்பவத்தை கொழும்பில் கூட பாடசாலைக்கோ அல்லது வேறு நிகழ்வுகளுக்கோ செல்லும் போது எதிர்நோக்கவில்லை.

நான் இந்தக் கல்லூரியில் கல்வி கற்ற காலப்பகுதியில் கடமை, கண்ணியம், கட்டுப்பாடுகள் என்பன மிக நேர்த்தியாக இருந்தன. அன்றைய காலத்தில் அதிபர்களும் ஆசிரியர்களும் மாணவர்கள் எவ்வாறு கண்ணியத்துடன் வாழ வேண்டும் என்பதை அவர்கள் வாயிலாகவே எமக்கு எடுத்துக் கூறியிருக்கிறார்கள். ஒரு மாணவன் சமூகத்தில் எவ்வாறு வளர்ந்து வர வேண்டும் என்று கற்பித்தார்கள். எனவே ஆசிரியர்கள் ஆகிய உங்களிடம் கேட்டுக்கொள்வது என்னவெனில், மாணவர்களை எல்லாத் துறைகளிலும் முன்னேற்றி அவர்களின் கடமைகள் என்ன? எவ்வாறு நேர்மையாக வாழ வேண்டும் என்பதை கற்றுக்கொடுக்க வேண்டும் என்பதே எனது விருப்பமாகும்.

பாடசாலை மாணவர்களின் ஒவ்வொரு நடத்தையிலும் ஆசிரியர்களாகிய நீங்கள் கவனம் செலுத்த வேண்டும். ஒவ்வொரு மாணவனதும் பெற்றோர்களை ஆசிரியருக்கு தெரிந்திருக்க வேண்டும். எமது காலத்தில் ஆசிரியர்கள் பிள்ளைகளை கண்டிக்கின்ற நிலைமை இருந்தது. ஆனால் தற்போது அது எந்தளவிற்கு இருக்கின்றது என்பது குறித்து எனக்கு தெரியவில்லை. எனவே ஆசிரியர்கள் ஒவ்வொரு மாணவர்கள் மீதும் அக்கறை கொண்டு அவர்களுக்கு நல்வழியைக் காட்ட வேண்டும். இன்றைய காலத்தில் மாணவர்கள் தமது வாழ்வில் பெரும் சவால்களையும் எதிர்நோக்க வேண்டியுள்ளது.

பல இன்னல்களையும் இழப்புக்களையும் இந்த மாணவர் சமுதாயம் சந்தித்துள்ளது. எமது மாணவர்கள் நல்லவற்றை கற்றுக்கொள்ள வேண்டும். அத்துடன் மாணவர்கள் எமது இரண்டாம் மொழியான சிங்கள மொழியையும் கற்றுக் கொள்ள வேண்டும். ஏனெனில் முதிர்ச்சி அடைந்துள்ள அனைத்து அதிகாரிகளுமே மும்மொழியிலும் பாண்டித்தியம் பெற்றவர்களாகவே இருக்கின்றனர். ஆசிரியர்களுடன் மாணவர்கள் நேசத்துடன் பழகி தமது வாழ்வின் உயர்ச்சியை நோக்கி செல்ல வேண்டும் என பிரதம நீதியரசர் மேலும் தெரிவித்தார். (இ-4)

## கவிமணியின் நூற்றாண்டு விழாவும் ஞானக்களஞ்சியம் மலர் வெளியீடும்

(கரணவாய்)

கவிமணி க.த.ஞானப்பிரகாசத்தின் நூற்றாண்டு விழாவும் ஞானக்களஞ்சியம் (தொகுதி ஐந்து) மலர் வெளியீடும் எதிர் வரும் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணியளவில் அல்வாய் பாரதிதாசன் நூலக மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

பாரதிதாசன் சனசமூக நிலையத்தலைவர் கி.நடராசா தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக் கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி த.கலாமணி கலந்து கொள்ளவுள்ளார்.

நூல் மதிப்பீட்டுரையினை நெல்லியடி மத்திய தேசிய பாடசாலையின் முன்னாள் அதிபர் கலாநிதி செ.சேதுராசா வழங்கவுள்ளார். (இ-3-60)

## நடப்பாண்டு உத்தியோகத்தர்கள் தெரிவு

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையின் வருடாந்த பொதுக்கூட்டம் கடந்த 11 ஆம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பின்வருவோர் நடப்பு ஆண்டு உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் இவசந்தசேனன், உபதலைவர்கள் தர்மகுலசிங்கம், ஸ்ரீ.சக்திவேல், செயலாளர் வை.இரகுநாத முதலியார், உப செயலாளர் செல்வி. வினோதினி சண்முகலிங்கம், பொருளாளர் இ.குகநாதன், பரீட்சை செயலாளர் பொ.கமலநாதன், உதவிப்பரீட்சை செயலாளர் வன்னியசிங்கம், சமயப் பிரசார அமைச்சர் க.இராஜ்மோகன், இந்து சாதனம் பத்திராதிபர் திருமதி நாச்சியார் செல்வநாயகம், உள்ளகக் கணக்காளர் நா. இராஜநாயகம், A பிரிவு நிர்வாக சபை அங்கத்தவர்களாக எட்டுப்பேர் தெரிவு செய்யப்பட்டனர் என செயலாளர் வை. இரகுநாத முதலியார் தெரிவித்துள்ளார். (இ-3)


கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1976 இந்து
நட்சத்திரம்: சுவாதி 4
கி.பா: 34 செவ் 4 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: NCT civil தொழில்நுட்ப உத்தியோகத்தர் (அரச)
தொ.இ: B/6297

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: ரோகினி 4
கி.பா: 25.5
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: A/L சாரதி (அரச)
தொ.இ: B/6298

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: மகம் 4
கி.பா: 28.75
உயரம்: 5'10"
தகைமை/தொழில்: பொறியியலாளர் (அமெரிக்கா PR)
தொ.இ: B/6299

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: சித்திரை 3
கி.பா: 14
உயரம்: 5'8"
தகைமை/தொழில்: சுவிஸ் PR
தொ.இ: B/6300

இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1975 இந்து
நட்சத்திரம்: சுவாதி 4
கி.பா: 37.5 செவ் 2 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: BA (Hons) நிகழ்சித்திட்ட உதவியாளர் அரச தொழில்
தொ.இ: G/2037

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம் 1
கி.பா: 31.5
உயரம்: 5'3"
தகைமை/தொழில்:BA அரச தொழில்
தொ.இ: G/2038

பிறப்பு: 1976 இந்து
நட்சத்திரம்: சதயம்
கி.பா: 47 செவ் 8 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:BSc (Hons) (IT) Soft ware Eng
தொ.இ: G/2039

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: சதயம் 4
கி.பா: 14.25 செவ் 2 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: BSc முகாமைத்துவ உதவியாளர் (அரச)
தொ.இ: G/2041

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:-021 720 1005,021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.







முல்லைத்தீவு மாவட்ட புதுக்குடியிருப்பு பிரதேச செயலக அபிவிருத்திக் குழுக் கூட்டம் நேற்று முற்பகல் 10 மணியளவில் ஆரம்பமானது. இக்கூட்டத்தில் அமைச்சர் றிசாத் பதியுதீன், பாராளுமன்ற உறுப்பினர்களான சி.சிவமோகன்,சிவசக்தி ஆனந்தன்,மஸ்தான், சாந்தி சிறீஸ்கந்தராஜா மற்றும் வடக்கு மாகாண சபை பிரதி அவைத்தலைவர் அன்ரனி ஜெகநாதன், வடக்கு மாகாணசபை உறுப்பினர்களான து.ரவிகரன்,சிவநேசன் கமலேஸ்வரன், திணைக்கள தலைவர்கள் மற்றும் மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (படங்கள் -பனிக்கன்குளம் செய்தியாளர்)

# வீடுகளை இழந்துள்ள மக்களுக்கு வீடுகளை பெற்றுக்கொடுக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்

## வன்னி மாவட்ட எம்.பிக்களுடன் இணைந்து கொழும்பில் வலியுறுத்துவேன்– றிசாத் உறுதி







(பனிக்கன்குளம்)

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் யுத்தத்தாலும், சுனாமியாலும் பாதிக்கப்பட்டு வீடுகளை இழந்த மக்களுக்கு வீடுகளை பெற்றுக் கொடுக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படுமென கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சர் றிசாத் பதியுதீன் உறுதியளித்தார்.

இது தொடர்பில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களுடன் இணைந்து, நாளை பாராளுமன்றத்தில் உரிய அமைச்சர்களைச் சந்தித்து காத்திரமான முடிவுகளை மேற்கொள்வோம். என்றும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடமும் இந்த விடயத்தைச் சுட்டிக்காட்டி தீர்வைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுப்போம் என்றும் அவர் உறுதியளித்தார்.




புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்துக்கு முன்னால் பாதிக்கப்பட்ட, வீடுகளை இழந்து இதுவரை வீடுகள் கிடைக்காத மக்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த போது,அவர்களுடன் நேரில் பேசிய அமைச்சர் றிசாத் பதியுதீன் மேற்கண்டவாறு உறுதி மொழியை வழங்கினார்.

அமைச்சருடன் எம்.பிக்களான டாக்டர் சிவமோகன், சாந்தி ஸ்ரீஸ்கந்தராஜா, சிவசக்தி ஆனந்தன், மஸ்தான் ஆகியோரும் உடனிருந்தனர். எம்.பிக்களும் தமது கருத்தை அங்கு தெரிவித்தனர்.

"யுத்தத்தினால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டவர்கள் புதுக்குடியிருப்பு மக்களே. போரின் உக்கிரத்தினால் நாங்கள் வாழ் விழந்து, வீடிழந்து, உறவிழந்து தவிக்கின்றோம். அரசாங்கத்தின் வீட்டுத்திட்டத்தில் எங்களுக்கு பெரும் அநீதி இழைக்கப்பட்டுள்ளது. புள்ளித்திட்டம் என்ற போர்வையில் அதிகாரிகள், எங்களுக்கு வீடு தர மறுக்கின்றார்கள். தனி நபர்களுக்கும் வீடில்லை.

கணவன், மனைவி இருவர் மட்டுமே வாழும் குடும்பத்தில் பிள்ளைகள் எங்கே என்று கேட்கின்றனர்.

பிள்ளைகள் இல்லாத வயோதிபக் குடும்பங்கள் குழந்தைகளுக்கு எங்கே போவது? நாங்கள் இருக்க இடமில்லாமல் தவிக்கின்றோம். யுத்தம் முடிந்து இத்தனை காலம் இல்லிடமின்றி அவதிப்படுகின்றோம். நாங்கள் எதையும் கேட்கவில்லை. இருப்பதற்கு, நிம்மதியாக உறங்குவதற்கு ஒரு வீட்டைத் தாருங்கள் என்றே கேட்கின்றோம். எனவே, எங்களுக்கு உதவுங்கள் என்று அவர்கள் வன்னி மாவட்ட பிரதிநிதிகளிடம் உருக்கமாக வேண்டினர்.

பின்னர் அவர்களது கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றையும் கையளித்தனர். இவர்களின் கோரிக்கைகள் அடங்கிய மகஜரைப் பெற்றுக்கொண்ட வன்னி மாவட்ட மக்கள் பிரதிநிதிகள், இந்தக் கோரிக்கையின் நியாயத் தன்மையை தாங்கள் உணர்ந்து கொண்டதாகவும், இதற்கான உரிய நடவடிக்கைகளை எடுப்பதாகவும் உறுதியளித்தனர். இதன் பின்னர் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தில் ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் ஆர்ப்பாட்டக்காரர்களின் கோரிக்கைகளை எடுத்துக்கூறிய அமைச்சர் றிசாத் பதியுதீனும், டாக்டர். சிவமோகன் எம்.பியும், வீடில்லாத மக்களின் பிரச்சினைகள் தொடர்பில், தீர்க்கமான தீர்மானம் ஒன்றை நிறைவேற்ற வேண்டுமென கூறினர்.

அமைச்சர் றிசாத் இங்கு கருத்துத் தெரிவிக்கையில்,

வீடுகளை வழங்குவதற்கான புள்ளியிடல் திட்டத்தில் புதுக்குடியிருப்பு பிரதேச மக்களுக்கு தளர்வு ஏற்படுத்த வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார். 65000 வீட்டுத் திட்டத்தில் புதுக்குடியிருப்பு பிரதேசத்துக்கென ஒதுக்கப்பட்ட வீடுகள் போதாது. இந்த மக்கள் படும் கஷ்டங்கள் வேதனையானது எனவும் கூறினார். வீட்டுத் தட்டத்தில் மத்திய அரசு ஒரு முடிவும்,மாகாணசபை இன்னொரு முடிவும், ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் வேறொரு முடிவும் மேற்கொள்ளப்படுவதன் மூலம், இந்தப் பிரச்சினையை இன்னும் சில வருடங்களுக்கு இழுத்தடிப்பதாகவே முடியும். எனவே மூன்று சாராரும் ஒருமித்து செயற்பட வேண்டியதன் அவசியத்தை அமைச்சர் இங்கு உணர்த்தினார். ஆகவே நாளை புதன்கிழமை மீள்குடியேற்ற அமைச்சர் சுவாமிநாதனை, வன்னி மாவட்ட எம்.பிக்கள் ஆகிய நாங்கள் சந்திப்போம் எனவும், இந்தப் பிரச்சினையை அவருக்கு விளக்கி, உரிய பரிகாரத்தை மேற்கொள்வோம் எனவும் கூறினார்.

ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் வீட்டுப் பிரச்சினை தொடர்பில் ஏகமனதான தீர்மானம் ஒன்றும்நிறைவேற்றப்பட்டது.(2-281)

# கற்குவாரியில் வெடிகுண்டுகளை பயன்படுத்துவதால் குடிமனைகள் சேதம்

## யேசுபுரம் மக்கள் குற்றச்சாட்டு

(குருமன்காடு)

வவுனியா, யேசுபுரம் பகுதியில் இயங்கும் கற்குவாரியில் கற்களை உடைப்பதற்காக வெடிகுண்டுகளை பயன்படுத்துவதால் அப்பகுதி குடிமனைகள் அடிக்கடி சேதப்படுவதுடன் அச்சத்துடன் வாழ வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக அப்பகுதி மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது.

வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட யேசுபுரம் மக்கள் குடியிருப்பு பகுதியில் உள்ள சுமார் 10 ஏக்கர் காணியில் கற்குவாரி இயங்கி வருகிறது. இங்கு கற்களை உடைப்பதற்காக அடிக்கடி வெடிகுண்டுகள் பயன்படுத்தப்படுகின்றன. இதன்போது மக்களை வீடுகளுக்குள் இருக்குமாறு அறிவித்துவிட்டு குண்டை வெடிக்க செய்கிறார்கள். உடைந்த கற்துண்டுகள் சிதறி மக்கள் குடியிருப்புக்களுக்குள் விழுகின்றது. சில வீடுகளின் கூரைத் தகடுகள், யன்னல் கண்ணாடிகள் என்பன உடைவுற்றும் உள்ளன. சேதமடைந்த கூரைத்தகடுகள், கண்ணாடிகள் என்பவற்றை இரா ணுவத்தினர் வாங்கித் தருகிறாரகள். ஆனால் சிறுவர்கள், மக்களுக்கு ஏதாவது நடந்தால் அதற்கு யார் பொறுப்பு.? வீட்டிற்கு வெளியே நடமாடவே அச்சமான நிலையே காணப்படுகின்றது. எனவே இதனை அகற்றி தாம் இயல்பு வாழ்க்கை வாழ உதவ வேண்டும் என இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இக் கற்குவாரி சுமார் மூன்று ஆண்டுகளாக இப்பகுதியில் இயங்கி வருவதுடன், மக்கள் குடிமனைகள், விவசாய நிலங்களை அண்டியுள்ள இப்பகுதியின் தரை அமைப்பும் இதனால் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்படுகின்றது. (2-5-250)

# புதிய பொலிஸ் நிலையம் நெடுங்கேணியில் திறப்பு



(குருமன்காடு)

நெடுங்கேணி பிரதேசத்தில் நேற்று முன்தினம் புதிதாக பொலிஸ் நிலையமொன்று திறந்துவைக்கப்பட்டது.

சட்டம் மற்றும் ஒழுங்கு தொடர்பான அமைச்சர் சாகல ரத்நாயக்கவின் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில், வர்த்தக கைத்தொழில் அமைச்சர் றிசாத் பதியுதீன், பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், கே.கே.மஸ்தான், டக்ளஸ் தேவானந்தா, வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் மற்றும் வடக்கு மாகாண சபையின் உறுப்பினர்களும் கலந்துகொண்டிருந்தனர்.

சுமார் 1,921,450 ரூபா செலவில் கடந்த 2015ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட குறித்த பொலிஸ் நிலையத்தின் பணிகள் இவ் வருடமே நிறைவுக்கு கொண்டு வரப்பட்டன. குறித்த பொலிஸ் நிலையத்தில் ஏனைய பொலிஸ் நிலையங்களை போலவே நிர்வாகப் பிரிவு, குற்றத்தடுப்பு பிரிவு, சிறு குற்றங்களை விசாரணை செய்யும் பிரிவு மற்றும் மோட்டார் போக்குவரத்து பிரிவு ஆகியன உள்ளடங்குகின்றன.

குறித்த பொலிஸ் நிலையம் நெடுங்கேணியின் 7 கிராம சேவையாளர் பிரிவிற்குட்பட்ட மக்களுக்கு தமது சேவையை வழங்கவுள்ளது. (2-250)

## காலபோக பயிர்ச்செய்கையில் ஈடுபடவுள்ள

# விவசாயிகளுக்கான உரமானிய கொடுப்பனவு கால அட்டவணை

(மல்லாவி)

**பாண்டியன்குளம் கமநல சேவை நிலையத்தின் கீழ் உள்ள விவசாயிகளுக்கு 2016 - 2017 ஆம் ஆண்டு காலபோக பயிர்ச்செய்கைகளுக்கான உரமானிய கொடுப்பனவுக்குரிய விண்ணப்பப்படிவம் பூர்த்தி செய்யும் கால அட்டவணையைப் பாண்டியன்குளம் கமநல சேவை நிலையத்தின் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் நா.சுஜீவரூபன் அறிவித்துள்ளார்.**

இது தொடர்பாக அவர் தெரிவிக்கையில்,

இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு அம்பாள்புரம் கமக்கார அமைப்பின்கீழ் உள்ள விவசாயிகளுக்கும் அம்பாள் புரம் விநாயகர் ஆலய மண்டபத்திலும் ஒட்டறுந்த குளம் கமக்கார அமைப்பின் கீழ் உள்ள விவசாயிகளுக்கு ஒட்டறுந்த குளம் முன்பள்ளி கட்டடத்திலும் நடைபெறவுள்ளது.

நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு பாண்டியன்குளம் கரும்புள்ளியான், செல்வபுரம் ஆகிய கமக்கார அமைப்புக்களின் கீழ் உள்ள விவசாயிகளுக்கு பாண்டியன் குளம் கமநல சேவை நிலையத் தின் ஒன்றுகூடல் மண்டபத்திலும் நடைபெறும்.

இதேபோல் எதிர்வரும் 22 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு விநாயகபுரம் கமக்கார அமைப்பிற்குட்பட்ட விவசாயிகளுக்கு விநாயகர் பொதுநோக்கு மண்டபத்திலும் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு பூவரசங்குளம், பொன்னகர் ஆகிய கமக்கார அமைப்புக்களுக்குட்பட்ட விவசாயிகளுக்கு பூவரசங்குளம் பொது நோக்கு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதேவேளை பனங்காமம், நட்டாங்கண்டல் ஆகிய கமக்கார அமைப்பின் கீழ் உள்ள விவசாயிகளுக்கு எதிர்வரும் 26 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு பனங்காமம் பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 27 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு பாலிநகர் கமக்கார அமைப்பின் கீழ் உள்ள விவசாயிகளுக்கு பாலிநகர் பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.


தவிர்க்க முடியாத காரணங்களினால் மட்டும் மேலே கூறப்பட்ட கால அட்டவணைகளில் உரமானிய கொடுப்பனவுக்கான விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்ய தவறும் விவசாயிகள் எதிர்வரும் 28,29,30 ஆகிய திகதிகளில் பாண்டியன்குளம் கமநலசேவைநிலையத்திற்கு வருகை தந்து பதிவுகளை மேற்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பதிவுகளை மேற்கொள்ள வருகைதரும்விவசாயிகள்தேசியஆள் அடையாள அட்டையின் நிழற் பிரதி -2, கடவுச்சீட்டு அளவிலான புகைப்படம் ஒன்று, வங்கிக் கணக்குப் புத்தகத்தின் நிழற்பிரதி ஒன்று என்பவற்றுடன் கமநல சேவை நிலையத்தில் காணி பதிவினை மேற்கொண்டமைக்கான பற்றுச்சீட்டு என்பவற்றுடன் தவறாது வருகை தருமாறு கேட்டுள்ளார். (2-5-15)




## கிளிநொச்சி சந்தை வியாபாரிகளுக்கு நிரந்தரக் கட்டடமே ஒரேயொரு தீர்வு

### முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் தெரிவிப்பு



கிளிநொச்சி பொதுச் சந்தை வியாபாரிகளுக்கு பாதுகாப்புடனான நிரந்தரக் கட்டடமே ஒரேயொரு நிரந்தர தீர்வாகும் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

கடந்த 16 ஆம் திகதி இரவு தீயினால் எரிந்து நாசமாகிப்போன கிளிநொச்சி பொதுச்சந்தையினை சென்று பார்வையிட்ட அவர், அங்கு வியாபாரிகளிடம் கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

யுத்தப் பாதிப்புகளுக்கு பின்னர் இந்த தீயும் வியாபாரிகளின் வாழ்க்கையில் அனைத்தையும் அழித்து நிர்க்கதியான நிலைக்கு தள்ளியுள்ளது.

இது மிகவும் வேதனையான சம்பவம். மீள்குடியேற்றத்தின் பின்னர் அம்பாள் குளத்தில் வியாபார நடவடிக்கைகளை ஆரம்பித்தவர்களின் வாழ்க்கையில் முன்னேற்றம் ஏற்படவில்லை. அதன் பின்னர் இங்கு சந்தை ஆரம்பிக்கப்பட்டு வியாபாரம் முன்னெடுக்கப்பட்டது.

முழுக்க முழுக்க கடன்களை கொண்டே வியாபாரத்தை ஆரம்பித்தவர்களின் வாழ்க்கையை தீ எரித்து அழித்துள்ளது. எனவே இந்த துயரச்சம்பவத்தில் பாதிக்கப்பட்ட வியாபாரிகளுடன் நானும் பங்கு கொள்கின்றேன் எனத் தெரிவித்த அவர்,

சந்தை வியாபாரிகள் எவ்வாறு அம்பாள்குளத்தில் இருந்து இங்கு வருவதற்கு எல்லாத் தரப்புக்கும் ஒரு அழுத்தச் சக்தியாக ஒற்றுமையாக இருந்து செயற்பட்டார் களோ அவ்வாறே இனியும் தங்களுக்கான ஒரு நிரந்தரத் தீர்வு கிடைக்கும் வரைக்கும் ஒற்றுமையாக செயற்படவேண்டும் எனவும் அதே வேளை வியாபாரிகளின் பிரச்சினைகளை அரசியலுக்கு அப்பால் எல்லாத் தரப்பும் இணைந்து ஒரு நிரந்தரத் தீர்வை பெற்றுக்கொள்ளும் வகையில் செயற்படவேண்டும் எனவும் கேட்டுக்கொள்கிறேன்.

இதன்போது கரைச்சி பிரதேச சபையின், செயலாளர் கம்சநாதன், சந்தை வர்த்தக சங்கத் தலைவர் அ.யேசுராஜன், வர்த்தக சங்க நிர்வாக உறுப்பினர்கள் மற்றும் பாதிக்கப்பட்ட வியாபாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.(2-312)

### மாங்குளம் நகரப்பகுதியில்

## பொது மலசலகூடம் அமைக்கப்படாமையால் பயணிகள்,பொதுமக்கள் பெரும் அவதி நிலை

(மல்லாவி)

புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்கு உட்பட்ட மாங்குளத்தில் நகரப்பகுதியில் பொதுமலசலகூடம் இன்மையால் பயணிகள், வைத்தியசாலைக்கு வருகைதரும் நோயாளர்கள், பொதுமக்கள் எனப்பல தரப்பட்டோர் பாதிக்கப்படுவதாக குற்றம் சாட்டுகின்றனர்.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

மாங்குளம் நகரமானது வடக்கு மாகாணத்துக்கான மத்திய நகரமாகும்.

இதனூடாக முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி, யாழ்ப்பாணம், வவுனியா ஆகிய மாவட்டங்களுக்கும் மற்றும் வவுனியா ஊடாக தென் பகுதிக்கும் பயணிக்கக்கூடிய போக்குவரத்து வீதி அமைப்பு உள்ளதால் தினந்தோறும் இரவு, பகல் என பல நூற்றுக்கணக்கானோர் தமது தேவையின் நிமிர்த்தம் இந்நகரத்தினூடாக பயணிக்கின்றனர்.

இவ்வாறு பயணிப்போர் நீண்ட தூர பயணங்களின் போது பொது மலசலகூட பாவனைக்காக மலசல கூடங்களை தேடி அலைந்து விட்டு வீதியோரங்களில் உள்ள பாழடைந்த கட்டடங்களை பயன்படுத்தும் அவலநிலை காணப்படுகின்றது.

மக்கள் இடப்பெயர்வுக்கு முன்னர் மாங்குளம் நகரப்பகுதியில் மாங்குளம் - முல்லைத்தீவு பிரதான வீதிக்கருகில் பொதுமலசல கூடம் ஒன்று அமைக்கப்பட்டு அது சிறந்த முறையில் இயங்கி வந்தது.

மக்கள் மீள்குடியேற்றத்தின் பின்னர் சேதமடைந்திருந்த அம் மலசல கூடத்தை இராணுவத்தினர் தற்காலிகமாக புனரமைத்து பயணிகள் பயன்படுத்தும் வகையில் நீர் வசதிகளுடன் கூடியதாக ஏற்படுத்திக் கொடுத்திருந்தனர்.

அதுவும் பின்னர் இராணுவத்தினர் அங்கிருந்து சென்றதன் காரணமாக பயன்பாட்டிற்கு உதவாத நிலையை எட்டியது.

எனவே புதுக்குடியிருப்பு பிரதேச சபையினர் சேதமடைந்துள்ள மலசலகூடத்தை நவீன வசதிகளுடன் புனரமைப்பு செய்வதுடன் குளியல் அறை வசதி களுடன் கூடிய கட்டண முறையிலான மலசல கூடமாகவேனும் மாற் றித்தர வேண்டும் என பாதிக்கப்பட் டுள்ள பயணிகள், பொதுமக்கள் ஆகியோர் கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளனர்.(2-5-15)

## ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் பிற்போடல்

கண்டாவளை பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளதாக பிரதேச செயலர் த.முகுந்தன் அறிவித்துள்ளார்.

மேற்படி கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறவிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இக் கூட்டம் நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார். (2-5)

## புனரமைக்கப்படும் திருக்கேதீஸ்வரத்தை பார்வையிட்டார் இந்தியத் துணைத்தூதுவர்

(பனிக்கன்குளம்)

இந்திய அரசின் நிதி உதவியுடன் புனரமைக்கப்பட்டு வரும் திருக்கேதீச்சர திருத்தலத்தை கடந்த 12 ஆம் திகதி காலை மன்னார் மாவட்டத்திற்கு வருகை தந்த இந்திய துணைத் தூதுவர் நடராஜன், வடக்கு கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரன் ஆகியோர் இணைந்து திருத்தலத்தின் கட்டுமானப் பணிகளை பார்வையிட்டனர்.

இதன்போது இந்தியாவில் இருந்து கொண்டுவரப்பட்ட சிற்பங்களையும் அத்தோடு குறித்த புனரமைப்பு பணிகளை மேற்கொள்ளும் கலைஞர்களையும் சந்தித்து உரையாடியதோடு, திருத்தலத்தின் வேலைகள் எதிர்வரும் 2017 ஆம் ஆண்டு மார்ச் மாதத்துடன் முடித்துக்கொடுக்க வேண்டிய கடப்பாடு இருக்கிறதாகவும், ஆனால் தாம் அதற்கு முன்னதாகவே குறித்த வேலைகளை நிறைவு செய்து கொடுக்க திட்டமிட்டுள்ளதாகவும் ஒப்பந்தக்காரரர் தெரிவித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அதனைத்தொடர்ந்து வடக்கு அமைச்சர் பா.டெனிஸ்வரனுக்கும் இந்திய துணைத்தூதுவர் நடராஜனுக்கும் இடையில் ஒரு சில அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பில் கலந்துரையாடல் இடம்பெற்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (2-5-281)

# குழாய் நீர் விநியோக நீரில் மண் கலப்பு

### வவுனியா நகர மக்கள் குற்றச்சாட்டு

வவுனியா நகரையண்டிய பகுதிகளின் குழாய் நீர் விநியோகத்தில் மண் கலப்பதாக மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

வவுனியாவில் நீர்வடிகாலமைப்பு சபையால் குழாய் மூலம் விநியோகிக்கப்படும் நீரில் அவ்வப்போது மண் கலந்து வருவதாக வவுனியா நகரையண்டி வாழும் மக்கள் தெரிவித்துள்ளனர். இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளதாவது,

வவுனியா நகரையண்டிய கற்குழி, வைரவபுளியங்குளம், குருமன்காடு போன்ற பகுதிகளுக்கான குழாய் நீர் விநியோகத்து நீரில் மண் கலந்து வருவதாகவும் அதனால் அந்நீரை குடிப்பதற்கும், சமைப்பதற்கும் பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

காலைவேளைகளிலும், சில தினங்களிலும் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுகின்றன. இதனால் நீர் கறுப்பு மற்றும் கலங்கல் நிலையில் வருவதால் அதனைப் பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதுடன், பாடசாலைக்கு செல்லும் மாணவர்கள், வேலைக்கு செல்வோர் நீராடிவிட்டு செல்ல முடியாத நிலை கூட ஏற்படுவதாகவும் அப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.(2-5-250)

## பரிசளிப்பு விழா

(குருமன்காடு)

வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரியின் பரிசளிப்பு விழா எதிர்வரும் 27 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை அதிபர் பாக்கியநாதன் கம்லேஸ்வரி தலைமையில் இடம் பெறவுள்ளது.

இந் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சர் த.குருகுலராசா கலந்து கொள்ளவுள்ளார். பல் வேறு சாதனைகளை நிலைநாட்டிய பாடசாலை மாணவிகளுக்கு விருது வழங்கி கௌரவிக்கும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (2-250)

## தாமதித்து ஆரம்பமான அபிவிருத்திக் குழுக்கூட்டம்

முல்லைத்தீவு மாவட்டம் கரைதுறைப்பற்று பிரதேச செயலக அபிவிருத்திக்குழு கூட்டம் நேற்று முற்பகல் 11 மணியளவில் ஆரம் பிக்கப்படவிருந்தபோதும் புதுக்குடியிருப்பு அபிவிருத்திக்குழு கூட்டம் தாமத மேற்பட்டதன் காரணமாக பிற்பகல் ஒரு மணிக்கு ஆரம்பமாகியது.


அபிவிருத்திக்குழு கூட்டத்தில் அமைச்சர் றிசாத் பதியுதீன், பாராளுமன்ற உறுப்பினர்களான சி.சிவமோகன், சிவசக்தி ஆனந்தன், மஸ்தான், சாந்தி சிறீஸ்கந்தராஜா , வடக்கு மாகாண சபை பிரதி அவைத் தலைவர் அன்ரனி ஜெகநாதன் மற்றும் வடக்கு மாகாணசபை உறுப்பினர்களான ரவிகரன், சிவநேசன், கமலேஸ்வரன் ஜெனோபர் திணைக்கள தலைவர்கள் மற்றும் மக்கள் என பலரும் கலந்துகொண்டிருந்தனர். (2-5-281)

## சுயதொழில் ஊக்குவிப்பு உதவிகள் 11 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டன



சுயதொழில் முயற்சியை ஊக்குவிக்கும் வகையில் மண்டைதீவு, வேலணை, சரவணை, புங்குடுதீவு, நயினாதீவு போன்ற பகுதியில் வசிக்கும் வறுமைக்கோட்டுக்குட்பட்ட 11 குடும்பங்களுககு தலா 10 ஆயிரம் ரூபாய் பெறுமதியான கோழி வளர்ப்பு உபகரணங்களை வேலணை பிரதேச கால்நடை வைத்தியசாலையில் வைதது வட மாகாணசபை உறுப்பினர் கே.என்.விந்தன் கனகரத்தினம் நேற்றைய தினம் வழங்கி வைத்துள்ளார்.

2016 ஆம் ஆண்டுக்கான பிரமாண அடிப்படையலான மூலதன நன்கொடை நிதி ஒதுக்கீட்டின் மூலம் சுயதொழில் முயற்சிக்காக வழங்கப்படும் இந்த உதவித்திட்ட நிகழ்வில் மாகாண சபை உறுப்பினர்கள், வேலணை பிரதேச கால்நடை வைத்திய அதிகாரியும் வேலணை பிரதேச கால்நடை வைத்தியசாலை அதிகாரிகளும கூட்டமைப்பு பிரமுகரும் வேலணை பல நோககு கூட்டுறவுச் சங்கத் தலைவருமான பாலசந்திரன் (பாலா) மற்றும் கூட்டமைப்பு பிரமுகர் சிறிபத்மராஜா ஆகியோர் கலந்து கொண்டனர். (இ-9)




கேலிச்சித்திரம்

# இளைஞர்,யுவதிகளின் எதிர்காலம் பற்றிய கொள்கைத் திட்ட வரைவு மிகவும் அவசியம்

## வடக்கு முதலமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

இளைஞர் யுவதிகளின் எதிர்காலம் பற்றிய கொள்கைத்திட்ட வரைவு ஒன்று தயாரிக்கப்பட்டு அதன்மூலம் இளைஞர் யுவதிகளை முன்னேற்றப்பாதையில் கொண்டு செல்ல வேண்டும் என வட மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்துளளார்.வடமாகாண இளைஞர் கொள்கைகள் செயற்றிட்டம் தொடர்பில் பங்குதாரர்கள் உடனான ஆலோசனைக் கூட்டம் நேற்றைய தினம் யாழ். கிறீன்கிறாஸ் ஹோட்டலில் நடைபெற்றது.

அதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் உரையாற்றுகையில்,

எமது இளைய சமுதாயத்தை அண்மைக் காலமாகப் பல புதிய விடயங்கள் பாதித்து வருகின்றன. அந்த வகையில் இன்னோர் துர்ப்பாக்கிய நிலையும் எம் இளைய சமுதாயத்திற்கு ஏற்பட்டுள்ளது.

புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழ்கின்ற எம்மவர்கள் தமது உறவினர்கள், சகோதரர்கள்,நண்பர்கள் ஆகியோரை கண்டு அளவளாவிச் செல்வதற்கு இங்கு வருகின்றபோது தமக்கு அங்கு வேலைகள் குறைவாக இருக்கக்கூடிய காலங்களைத் தேர்ந்தெடுத்து தமது பிள்ளைகளின் பாடசாலை விடுமுறை மற்றும் இன்னோரன்ன கடமைகளுக்கு இடையூறு ஏற்படாத வகையில் விடுமுறைகளைப் பெற்றுக்கொண்டு இங்கு வருகின்றார்கள்.

அவர்களின் வருகை அத்தியவசியமானதும் ஏற்றுக்கொள்ளப்படவேண்டியதுதான். ஆனால் ஒரு விடயத்தை அவர்கள் மனதில் கொள்வதில்லை. இங்கிருக்கக்கூடிய மாணவ மாணவியர்களுக்குத் தாம் செல்லுகின்ற காலம் விடுமுறையாகவுள்ளதா? தமது வருகை தமது உறவினர்களின் பிள்ளைகளின் கற்றல் நடவடிக்கைகளைப் பாதிக்குமா?என்பது பற்றி சிந்திப்பவர்கள் மிகக்குறைவாகவே காணப்படுகின்றனர். அவர்கள் வருங்காலத்தில் இளைஞர் யுவதிகளின் கல்வி பாதிக்கப்படுகின்றது.

ஆனால் இதன் தார்ப்பரியம் என்னவென்று ஆராய்ந்தோமானால் தாய்தந்தையர் தாம் உழைக்க வேண்டும், பிள்ளைகளைக் கற்பிக்க வேண்டும், அவர்களை நல்ல நிலைக்கு ஆளாக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருந்து சறுக்கி விடுகின்றார்கள். அனைத்தும் வெளிநாடுகளில் இருந்து தொடர்ந்து கிடைக்கப்பெறும் என்ற நிலையில் வாழ்க்கையை ஓட்டிச் செல்ல முனைந்துள்ளனர் இவையும் எமதுஇளைய சமுதாயத்தை அண்மைக் காலமாகப் பாதித்து வருகின்றன. எனவே இளைஞர் யுவதிகளின் கொள்கையியற் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு அதன்பால் இளைஞர் யுவதிகளை நெறிப்படுத்தவும் வழிகாட்டவும் முன்னேற்றப்பாதையில கொண்டு செல்லவும் முயற்சித்தல் இத்தருணத்தில் இன்றியமையாததாகியுள்ளது.

மாணவ மாணவியர்கல்வி மீது ஆர்வம் காட்ட என்ன செய்ய வேண்டும், செயற்பாடுகள் மூலம் கல்வி கற்பித்தல் எவ்வாறு நன்மை பயக்கும், தொழில்நுட்ப முறைகள் எவ்வாறான நன்மைகளைத் தருவன, மாணவ மாணவியருக்கு இயைந்த கல்வியைப் புகட்டல் அதாவது இவ்வாறானதான கல்வி அமைய வேண்டுமென்று மேலிருந்து மாணவ,மாணவியர் மீது திணிக்காமல் அவர்களின் ஆர்வங்களை நடைமுறைப்படுத்தல் போனற பல விடயங்கள் ஆராயப்பட வேண்டும்.

அதேநேரத்தில் மாணவ மாணவியர்களின் கல்விச் செயற்பாடுகள் அவர்களின் எதிர்காலத் தொழில்முயற்சிகளை நோக்கியதாக அமைதல்மிகவும் அவசியம். எனவே இளைஞர் யுவதிகளின் எதிர்காலம் பற்றிய கொள்கைத்திட்ட வரைவு ஒன்று தயாரிப்பதும் அதன் வழி உரியவர்களை நெறிப்படுத்துவதும் மாணவ,மாணவியர்களுக்குப் படிப்பின் பால் ஊக்கத்தை ஏற்படுத்துவதும் இக்காலகட்டத்தில் அவசியமாகின்றன. மாணவ, மாணவியரிடம் இலக்கியம், கலை, விஞ்ஞானம், கணிதம், புவியியல், வரலாறு, ஆங்கிலம் போன்ற பாடநெறிகளில் கூடிய ஆர்வத்தை ஏற்படுத்த வேண்டும். அதுமட்டுமல்ல. நல்லொழுக்கத்தை இளவயதில் இருந்தே கற்றுக் கொள்ளக்கூடிய விதத்தில் அவர்களை வழிப்படுத்தலும் அத்தியாவசியமாகின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

## இனிப்புப் பண்டங்களை திருடிய இருவர் பொலிஸாரால் கைது

(கொழும்பு)

நாட்டில் உள்ள பொதுச் சந்தைகளில் தொடர்ந்து 5 மாதங்களாக இனிப்புப் பண்டங்களான டொபிகள் மற்றும் சொக்லேட்டுக்களை திருடிய இருவரை பெந்தோட்டை பொலிஸார் நேற்று கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் ஹொரணை மற்றும் பொரலஸ்கமுவ பகுதியைச் சேர்ந்த 25 மற்றும் 28 வயதுடையவர்கள் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த சந்தேக நபர்களால் திருடப்பட்ட இனிப்புப் பண்டங்கள் ரூபா 2 இலட்சம் பெறுமதி வாய்ந்தது என பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துருகிரிய, நாரஹேன்பிட்டிய, கிருலப்பனை, மஹரகம, பாணந்துறை, மொரட்டுவ, களுத்துறை, பயகல, பேருவளை மற்றும் பெந்தோட்டை பகுதியில் உள்ள பொதுச்சந்தைகளில் இருந்தே விலை மதிப்புள்ள இந்த உணவு வகைகள் திருடப்பட்டுள்ளதாக விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சந்தேகநபர்கள் ஐந்து மாதங்களாக இந்த திருட்டில் ஈடுபட்டு வந்துள்ளார்கள் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-7-10)

## ஜனாதிபதி செயலகத்திற்கு அருகில் கூரை மேல் ஏறி ஊழியர்கள் எதிர்ப்பு



(கொழும்பு)

கொழும்பில் ஜனாதிபதி செயலகத்திற்கு அண்மையில் உள்ள நிறுவனம் ஒன்றின் ஊழியர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

குறித்த ஆர்ப்பாட்டம் நிறுவனத்தின் ஊழியர்களால் நேற்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

குறித்த ஆர்ப்பாட்டக்காரர்களில் மூவர் கூரையின் மீது ஏறி தமது எதிர்ப்பினை வெளிப்படுத்தியுள்ளனர்.

15 வருடங்களுக்கு மேலாக இந்த நிறுவனத்தின் வேலை செய்யும் ஊழியர்களுக்கு எந்த விதமான சம்பள உயர்வுகளும் வழங்கப்படவில்லை என குற்றம் சுமத்திய இவாகள் அண்மையில் வேலைக்கு வந்த புது ஊழியர்களுக்கு ஒரு இலட்சத்திற்கும் அதிகமாக சம்பளம் வழங்கப்படுவதாக சுட்டிக்காட்டினர்.

இதை எதிர்த்தும் தமக்கு தரவேண்டிய சம்பள உயர்வை தரக்கோரியுமே தாம் இந்த போராட்டத்தை முன்னெடுத்துள்ளதாக தெரிவித்தனர். (இ-7-10)

## வாஸ் குணவர்த்தனவின் குடும்பத்திற்கு எதிராகக் குற்றப்பத்திரிகை தாக்கல்

(கொழும்பு)

முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் வாஸ் குணவர்த்தன உள்ளிட்ட 8 பேர் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மாலபே தனியார் மருத்துவக் கல்லூரி மாணவனை தாக்கிய சம்பவம் தொடர்பில் முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் வாஸ் குண வர்த்தன அவரது மனைவி, மகன உள்ளிட்ட ஏனைய ஐவருக்கு எதிராக இந்த குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கொழும்பு மேல் நீதிமன்றில் நேற்று குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

நிபுன ராமநாயக்க என்ற 21 வயதுடைய மாணவன் 2009 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 09 ஆம் திகதி கடத்திச் செல்லப்பட்டு தாக்கப்பட்டமை குறிப்பிடத்தககது.

இதற்கமைய குறித்த வழககின் விசாரணை அடுத்த வருடம் பெப்ரவரி மாதம் 6, 7, 8ஆம் திகதிகளில் விசாரணைக்கு எடுத்துக் கொள்வதற்கு மேல்நீதிமன்ற நீதிபதிகள் தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7-10)

# புசல்லாவ பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி இடமாற்றம்

புசல்லாவ பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தற்காலிகமாக கம்பொல பகுதிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

புசல்லாவ பொலிஸ் நிலையத்தில், கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் நடராஜா ரவிசந்திரன் என்ற 28 வயதான சந்தேகநபர் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளதாக கூறப்படும் சம்பவம் தொடர்பிலேயே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்படி கண்டி, மாத்தறை பகுதிக்கு பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபரின் பணிப்புரைக்கு அமையவே குறித்த பொலிஸ் அதிகாரிக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மரணமடைந்த ரவிசந்திரனின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

வழக்கு விசாரணைகளுக்காக நீதிமன்றத்தில் ஆஜராகாமையால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த நிலையில், அவர் கடந்த சனிக்கிழமை கைது செய்யப்பட்டிருந்தார்.

எனினும் புசல்லாவ பொலிஸ் நிலையத்தில் தூக்கில் தொங்கிய நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவேளை அவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எனினும், அவரது மரணத்தில் சந்தேகம் நிலவுவதாக கூறி பொது மக்கள் நேற்று முன்தினம் பெரும் ஆர்ப்பாட்ட நடவடிக்கையை முன்னெடுத்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

# மகிந்தவின் தோல்வியால் மகிழ்ச்சியடைந்த இந்தியா

## மைத்திரி ஆட்சியில் தமிழருக்கு தீர்வு கிடைக்கும் என நம்புகிறது

(கொழும்பு)

***ஜனாதிபதியாக மைத்திரிபால சிறிசேனவும் பிரதமராக ரணில் விக்கிரமசிங்கவும் தெரிவு செய்யப்பட்டமைக்கு இந்திய அரசு மிகுந்த மகிழ்ச்சி அடைந்ததாக ஹிந்துஸ்தான் டைம்ஸ் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.***



மகிந்தவின் ஆட்சியின் போது அவர் மேற்கொண்ட இரண்டு நடவடிக்கைகள் தொடர்பில் இந்திய அரசு அதிருப்தி கொண்டிருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ள ஹிந்துஸ்தான் டைம்ஸ் பத்திரிகை அதில் முதலாவது தமிழ் மக்களது அரசியல் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு மகிந்த அரசு ஆர்வம் காட்டவில்லை என்றும், இரண்டாவது அதிகமாக சீனாவின் பக்கம் மகிந்த அரசு நெருங்கிய உறவுகளை கொண்டிருந்தமை இந்திய அரசை அதிருப்தி அடையச் செய்த முக்கிய இரண்டு விடயங்கள் என ஹிந்துஸ்தான் டைம்ஸ் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இதேவேளை மகிந்த அரசு தோல்வியடைந்து தற்பொழுது ஆட்சியில் உள்ள நல்லாட்சி அரசாங்கம் தமிழ் மக்களது அரசியல் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கும் என இந்திய அரசு எதிர்பார்த்துள்ளதாகவும் ஹிந்துஸ்தான் டைம்ஸ் பத்திரிகை சுட்டிக்காட்டியுள்ளது. (இ-7)

# வேட்பு மனுத்தாக்கல் செய்யும் போதே சொத்து விபரத்தை ஒப்படைக்க சட்டம்

(கொழும்பு)

வேட்பு மனுத்தாக்கல் செய்யும் போதே சொத்து விபரங்கள் ஒப்படைக்கப்படும் வகையில் சட்டம் இயற்றப்பட வேண்டுமென பவ்ரல் என்ற தேர்தல் கண்காணிப்பு அமைப்பு தெரிவித்துள்ளது.

வேட்பு மனுத்தாக்கல் செய்யும் போது அல்லது அதிலிருந்து ஒரு வார காலத்திற்குள் சொத்து விபரங்களை ஒப்படைக்கும் வகையில் சட்ட திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டுமென தேர்தல் ஆணையாளரிடம் பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி கோரியுள்ளார்.

அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்,

அவ்வாறு சொத்து விபரங்களை ஒப்படைக்கத் தவறினால் வேட்பு மனு நிராகரிக்கப்படக்கூடிய வகையில் சட்டம் இயற்றப்பட வேண்டும்.

இந்த இரண்டு முறைமைகளும் நடைமுறைச் சாத்தியமற்றது என்றால் தேர்தல் தினத்திற்கு முன்னதாக சொத்து விபரங்கள் ஒப்படைக்கப்படக்கூடிய வகையில் சட்டம் உருவாக்கப்பட வேண்டும்.

இவ்வாறு சொத்து விபரங்களை ஒப்படைக்கத் தவறும் நபர்கள் வெற்றியீட்டினாலும் அவர்கள் பதவி இழக்கக்கூடிய வகையில் சட்டத் திருத்தங்கள் செய்ய வேண்டும்.

ஏதேனும் சந்தர்ப்பத்தில் பொது மக்கள் பிரதிநிதி பதவிகளில் வெற்றிடம் ஏற்பட்டால் அந்தப் பதவிக்கான வெற்றிடத்தை கட்சிகள் நிரப்பாது, தேர்தல் நடத்தி நிரப்பும் வகையில் சட்டத் திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இந்தச் சட்டங்கள் எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலிலிருந்து அமுல்படுத்தப்பட வேண்டுமென ரோஹண ஹெட்டியாரச்சி மேலும் தெரிவித்துள்ளார்.(இ-7-10)

# நாடாளுமன்ற உறுப்பினருக்கு பிடியாணை

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பாலித தெவரப்பெரும நீதிமன்றில் ஆஜராகாமையினால் மத்துகம நீதிமன்ற பிரதான நீதவான் வசந்த கொசல சேனாதிர கடுமையாக எச்சரித்துள்ளார்.

நாடாளுமன்றம் என்பது சட்டத்தை உருவாக்கும் இடமாகும். அங்குள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் சட்டத்தை உருவாக்குபவர்கள் என நீதவான் தெரிவித்துள்ளார்.

சட்டத்தை உருவாக்கும் நாடாளுமன்ற உறுப்பினரான பாலித சட்டத்தை மதிக்கவில்லை என நீதவான் மேலும் தெரிவித்துள்ளார்.

பாலிதவின் வழக்குகள் தொடர்பில் நீதிமன்றில் நேற்றுமுன்தினம் முன்னிலையாகாத காரணத்தினால் அவரைக் கைது செய்யுமாறு நீதவான் பிடியாணை பிறப்பித்துள்ளார்.

எவ்வாறாயினும் சற்று தாமதமாக அவருடைய சட்டத்தரணிகளுடன் தெவரப்பெரும நீதிமன்றில் முன்னிலையாகினார்.

பாலிதவிற்கு நெஞ்சு வலி காரணமாக அவரால் நீதிமன்றில் முன்னிலையாக முடியவில்லை என அவரது சட்டத்தரணி நீதிமன்றில் அறிவித்துள்ளார்.

ஒவ்வொரு மாதமும் 2 மற்றும் 3 ஆம் வாரங்களில் நீதிமன்றில் முன்னிலையாகுமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7-10)



# வைன், பியர் போன்ற மென்மையான மதுபானங்களும் தீங்கானவையே

மதுபானம், புகைப்பிடித்தல் என்பன தீமையானவை என்பதை அனைவரும் அறிவர்.

எனினும் இவற்றின் பாவனை தொன்றுதொட்டு இன்றுவரை தொடரவே செய்கின்றது. இவை இளவயது மரணங்களை ஏற்படுத்துவதுடன் பல்வேறு நோய்களுக்கும் வித்திடுகின்றன. இன்னும் சில நோய்களை துரிதப்படுத்துவதுடன் உடலுறுப்புகளையும் அவற்றின் சீரான தொழிற்பாட்டையும் இவை பாதிக்கின்றன.

மதுபானம் அருந்தும் போது கிட்டும் கிளர்ச்சியான குதூகல மனநிலைக்காகவே பலரும் மதுவை அருந்த ஆரம்பித்து பின்னர் நாளடைவில் அதற்கு அடிமையாகி சீரழிகின்றனர். நோய் நொடிகளுக்கு அப்பால் மதுவினால் சமூக சீர்கேடுகளும் சண்டை சச்சரவுகளும் ஏற்பட்டு கொலைகள் கூட விழுகின்றன. மனித ஆரோக்கியத்தையும் சமூகத்தையும் சீரழிக்கும் மதுவை நாம் அனைவரும் புறக்கணிப்பது சாலச் சிறந்தது. மதுப்பழக்கத்திற்கு அடிமையாகி சீரழிவதை விட அதை பழகாமல் இருப்பதே சிறந்தது. பழகிவிட்டு மறப்பதைவிட பழகாமலிருப்பது சாலச் சிறந்தது அல்லவா? எனவே இளைஞர்களே! மதுவை தொட்டும் பார்க்காதீர்கள்.

### சிறிதளவு மது அருந்துவது ஆரோக்கியமானதா?

வைன் அருந்தினால் இதயத்திற்கு நல்லது என்றும் பியர் அருந்தினால் சிறுநீரகங்களுக்கு சிறந்தது எனவும் கள் அருந்தினால் அசதி போகும் என்றும் பாரம்பரியமாகக் கூறப்பட்டு வரும் கூற்றுக்களில் உண்மை எதுவுமில்லை. மது எமது உடலின் பிரதானமான உறுப்புகளில் ஒன்றான ஈரலை மோசமாகப் பாதிக்கின்றது. இதுதவிர மூளை நரம்புத் தொகுதி உள்ளிட்ட இன்னும் பல உறுப்புகளை நீண்டகால அல்லது அதிகமான மதுப்பாவனை பாதிக்கின்றது. சிறிதளவு மதுவை அருந்தும் போது அது அசதியைப் போக்கும் என்பதிலும் பசியைக் கூட்டும் என்பதிலும் சிறிதளவு உண்மை உண்டெனினும் மது அருந்துபவர்கள் யாரும் இதற்காகக் குடிப்பதில்லை. மதுவினால் கிட்டுகின்ற மகிழ்ச்சிக்காகவே குடிக்கின்றார்கள். இதனால் மதுவை அதிகம் குடித்து அதற்கு அடிமையாகி சீரழிகின்றனர்.

நாம் ஒவ்வொரு முறை மது அருந்தும் போதும் ஈரல் கலங்கள் சிதைவடைய ஆரம்பிக்கின்றன. அவை மீண்டும் தன்னை சீர்படுத்த நாட்கள் சில செல்லும். அதற்கிடையில் மதுவை மீண்டும் அருந்தினால் ஈரல் தொடர்ந்து சிதைவடையும். குளிர் பிரதேச மேற்கத்தேய நாடுகளில் கூட மதுவின் அளவை மிக சொற்பமாக அருந்தும்படியும் ஒரே நாளில் அதிகம் அருந்த வேண்டாம் என்றும் வலியுறுத்தப்படுகின்றது.




மதுப்பாவனையால் ஈரல் அழற்சி, சிரோசிஸ் (cirrhosis) முதலான நோய்கள் ஏற்படுகின்றன. இதனால் மரணமும் ஏற்படலாம். இது தவிர மாரடைப்பு, ஸ்ரோக் முதலானவற்றையும் மது துரிதப்படுத்துவதாக அறியப்பட்டுள்ளது. அண்மைக் கால ஆய்வுகளின்படி மதுப்பாவனைக்கும் சிலவகைப் புற்று நோய்களுக்கும் தொடர்பு இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. குறிப்பாக சமிபாட்டுத் தொகுதி புற்று நோய்க்கும் நீண்டகால மதுப்பாவனைக்கும் இடையே தொடர்பு இருப்பதாக தெரிகின்றது. வைன் அருந்துவதால் இளமையாக இருக்கலாம் என்பதும் தவறான கூற்றே ஆகும்.

கர்ப்பிணிகள் சொற்பளவு மதுவையும் அருந்தக்கூடாது

கருவிலுள்ள சிசுவை மது பாதித்து விடும் என்பதனால் மதுவை கர்ப்பவதிகள் அறவே பாவிக்கக் கூடாது. வைன், பியர் போன்றவை கூட கருவைப் பாதித்துவிடும்.

மூளை நரம்புத்தொகுதி, ஈரல் என்பவற்றில் வெளித் தெரியாத குறைபாடுகள் சிசுவுக்கு ஏற்படலாம். பிறந்த பின்னர் குழந்தையின் உடல், உள வளர்ச்சியையும் கற்கும் திறனையும் மது பாதித்துவிடும். மதுவை தொட வேண்டாமே!


Dr.ச. முருகானந்தன்

# விஷம் கக்குவதைத்தான் பாகிஸ்தான் விரும்புகிறது

## இந்தியா கடும் கண்டனம்

(டில்லி)

**பேச்சுவார்த்தையை விட விஷத்தை கக்குவதில் தான் பாகிஸ்தான் விருப்பம் காட்டுகிறது என்பதையே காஷ்மீரின் உரி பகுதியில் நடந்த தீவிரவாத தாக்குதல் காட்டுகிறது என்று அணிசேரா நாடுகளின் உச்சி மாநாட்டில் இந்தியா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.**



வெனிசுவேலா நாட்டில் நடைபெற்றுவரும் அணிசேரா நாடுகளின் உச்சி மாநாட்டில் நேற்று பேசிய இந்திய வெளியுறவுத்துறை இணை அமைச்சர் எம்.ஜே அக்பர், "வெளிப்படையாக தீவிரவாதத்தை ஊக்குவித்தும், தனது வெளிவேஷத்தாலும் சர்வதேச சமூகத்தின் மத்தியில் தீண்டத்தகாத நாடாக தன்னைத்தானே பாகிஸ்தான் சுருக்கி கொண்டு வருகிறது" என்று தெரிவித்தார்.

17 ஆவது அணி சேரா உச்சிமாநாட்டின்போது பாகிஸ்தான் வெளியுறவுத்துறைக்கான பிரதமரின் ஆலோசகர் சர்தாஜ் அஜிஸ், காஷ்மீர் விவகாரம் குறித்து பேசியது பற்றி எம்.ஜே.அக்பரிடம் செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர்.

இதற்கு பதிலளித்த எம்.ஜே. அக்பர், உள்ளூர் அளவிலும் சர்வதேச அளவிலும் தீவிரவாதிகளுக்கு புகலிடம் மற்றும் ஆதரவை பாகிஸ்தான் அளித்து வருகிறது.

இது தொடர்பாக, அணிசேரா நாடுகளிடம் எழுத்து பூர்வமாக பாகிஸ்தானுக்கு எதிராக எங்களது பலத்த எதிர்ப்பை பதிவு செய்வோம்.

உரியில் நடைபெற்ற இந்த கொடூர தாக்குதல் பேச்சுவார்த்தையைவிட விஷமத்தனத்தை கக்குவதில் பாகிஸ்தான் ஆர்வமாக இருக்கிறது என்பதையே காட்டுகிறது.

உரியில் நடைபெற்ற தாக்குதல் இந்தியாவுக்கு மட்டும் கொடூரமானது அல்ல. ஒட்டு மொத்த உலகமும் இது போன்ற பயங்கரவாத தாக்குதல்களால் கோபத்துடன் உள்ளது. இந்த கொடூர செயலுக்காக தக்க பதிலடி கிடைக்கும். அப்போது, பாகிஸ்தானுக்கு யாரும் ஆதரவு தரமாட்டர்கள் என்பதையும் அந்நாடு புரிந்து கொள்ள வேண்டும்' என்று தெரிவித்தார்.

சர்வதேச விவகாரங்களில் தீவிரவாதத்தை ஒரு கருவியாக பயன்படுத்துவதை நாங்கள் ஒரு போதும் ஏற்றுக்கொள்ள மாட்டோம்.

அணிசேரா நாடுகளின் உச்சி மாநாட்டில் கலந்து கொண்ட 120 நாடுகளில் 118 நாடுகளின் தலைவர்கள் தீவிரவாதத்தை வேரறுக்க ஒருங்கிணைந்த செயற்பாட்டு குழுவை அமைக்க வலியுறுத்திய வேளையில், தீவிரவாதத்தை ஆதரிக்கும் நாடான பாகிஸ்தான் இந்த திட்டத்துக்கு ஆதரவு தெரிவிக்க முன்வராததை வைத்தே, தீவிரவாதத்தை அந்நாடு ஊக்குவித்து வருவதை உணர்ந்து கொள்ளலாம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7-10)

# சி.பி.ஐ.விசாரணைக்கு உத்தரவிடும்வரை ராம்குமாரின் உடலை வாங்க மாட்டோம்

## தந்தை மறுப்பு



(சென்னை)

ராம்குமார் மரணம் குறித்து சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவிடும் வரை உடலை வாங்கப்போவதில்லை என்று அவரது தந்தை பரமசிவம் தெரிவித்துள்ளார்.

ராம்குமார் உயிரிழந்த செய்தியை கேட்டு அதிர்ச்சியடைந்துள்ள அவர், பொலிஸார் திட்டமிட்டு தனது மகனை கொன்றுவிட்டதாக குற்றம்சாட்டியுள்ளார். மரணம் குறித்து சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவிட்டால் மட்டுமே உடலை வாங்குவோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். இதனிடையே ராம்குமார் மரணத்தால் உறவினர்கள் மட்டுமன்றி அவரது சொந்த ஊர் மக்கள் அனைவரும் சோகமடைந்துள்ளனர். பொலிஸாரின் செயற்பாட்டுக்கும் அவர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர். (இ-7-10)

### திட்டமிட்ட கொலையாக இருக்கலாம்

# ராம்குமாரின் உயிரிழப்புக்கு சிறை அதிகாரிகளே பொறுப்பு

## முன்னாள் நீதிபதி சந்துரு தெரிவிப்பு



(சென்னை)

நுங்கம்பாக்கம் ரயில் நிலையத்தில் வெட்டிப் படுகொலை செய்யப்பட்ட சுவாதி கொலை வழக்கில் கடந்த ஜூலை முதலாம் திகதி ராம்குமாரை பொலிஸார் கைது செய்தனர்.

வழக்கின் தொடக்கம் முதலே பல்வேறு சந்தேகங்கள் எழுந்த நிலையில் நேற்று முன்தினம் புழல் சிறையில் ராம்குமார் மின்சார வயரை கடித்து மரணமடைந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ராம்குமாரின் இந்த திடீர் மரணம் திட்டமிட்ட கொலையா? அல்லது தற்கொலையா? என்ற பெரும் விவாதத்திற்கு வழிவகுத்துள்ளது.

இந்நிலையில் ராம்குமாரின் மரணத்திற்கு சிறைத்துறை அதிகாரிகளே பொறுப்பு ஏற்க வேண்டும் என முன்னாள் நீதிபதி சந்துரு கருத்து தெரிவித்துள்ளார்.

மேலும் கருத்து கூறியுள்ள முன்னாள் நீதிபதி சந்துரு, சிறையில் பாதுகாப்பு விதிமுறைகள் இருக்கும் நிலையில் ராம்குமாரின் உயிரிழப்பு சந்தேகம் அளிப்பதாக தெரிவித்தார்.

சிறையில் நிகழும் மர்மங்களுக்கு சிறைத்துறை அதிகாரிகளே பொறுப்பு என்று கூறியுள்ள அவர், நல்ல உடல் நலத்துடன் இருப்பவர்கள் சிறையில் அடைக்கப்படும் போது மட்டும் எப்படி அவர்களுக்கு உடல்நிலை சரியில்லாமல் போகிறது என வினவியுள்ளார்.

அனைத்து சிறைகளிலும் மின்சார வயர்கள் வெளியில் தெரியும்படி இருக்காது என்று கூறியுள்ள முன்னாள் நீதிபதி சந்துரு, சுவற்றில் பதிக்கப்பட்ட நிலையில்தான் மின்சார இணைப்புகள் கொடுக்கப்பட்டிருக்கும் என்ற அவர், ராம்குமாரின் மரணம் ஏன் திட்டமிட்டு நடைபெற்ற கொலையாக இருக்கக்கூடாது எனவும் முன்னாள் நீதிபதி சந்துரு கேள்வி எழுப்பியுள்ளார். (இ-7)

# காவிரியிலிருந்து தமிழகத்திற்கு இனிமேல் நீர் திறக்க இயலாது

## கர்நாடகா அறிக்கை தாக்கல்

(டில்லி)

தமிழகத்திற்கு இதுவரை 13 டி.எம்.சி. தண்ணீர் காவிரியிலிருந்து திறக்கப்பட்டுள்ளதாக கர்நாடகா கூறியுள்ளது. டில்லியில் காவிரி மேற்பார்வைக் குழுக் கூட்டம் நடைபெற்றது.

இதில் தனது தரப்பு அறிக்கையை தாக்கல் செய்த கர்நாடகா, தங்களது மாநிலத்தில் 4 அணைகளில் 27 டி.எம்.சி தண்ணீர் மட்டுமே உள்ளதாக குறிப்பிட்டுள்ளது.

அடுத்த ஆண்டு ஜூலை மாதம் வரை கர்நாடக மாநிலத்தின் குடிநீர் தேவைக்கு 21 டி.எம்.சி தண்ணீர் தேவைப்படுவதாக குறிப்பிட்டுள்ளது.

மேலும் கர்நாடகத்தில் மழை 18 சதவீதம் குறைவாக பெய்துள்ளதாகவும் தனது அறிக்கையில் அந்த மாநில அரசு கூறியுள்ளது. எனவே காவிரியிலிருந்து தமிழகத்திற்கு இனிமேல் நீர் திறக்க முடியாத சூழல் நிலவுவதாக கர்நாடகா, காவிரி மேற்பார்வைக் குழு கூட்டத்தில் திட்டவட்டமாக தெரிவித்துள்ளது. (இ-7)

# காஷ்மீரில் ஊரடங்கு உத்தரவு தொடர்கிறது



தலைநகர் ஸ்ரீநகர் உள்ளிட்ட பகுதிகளில் தொடர்ந்து பதற்றம் நீடித்து வருவதால் அங்கு தொடர்ச்சியாக ஊரடங்கு உத்தரவு அமுலில் இருந்து வருகிறது.

காஷ்மீரில் கடந்த ஜூலை 9 ஆம் திகதி ஹிஸ்புல் முஜாகிதீன் இயக்க தளபதி பர்கான் வானி உள்ளிட்ட 3 பேர் சுட்டுக்கொல்லப்பட்டனர். அன்று முதல் காஷ்மீர் பள்ளத்தாக்கு பகுதியில் தொடர்ந்து வன்முறை சம்பவங்கள் நடந்து வருகின்றன.

இந்த வன்முறை சம்பவங்களில் பொலிஸார் 2 பேர் உட்பட 83 பேர் உயிர் இழந்துள்ளனர்.

இந்தநிலையில், நேற்று முன்தினம் பிரிவினைவாத அமைப்பைச் சேர்ந்தவர்கள் பன்டிபோரா, கந்தர்பால், சோபியான் ஆகிய 3 மாவட்டங்களில் பேரணி நடத்துவதற்கு அழைப்பு விடுத்து இருந்தனர்.

எனவே அசம்பாவிதங்களை தவிர்க்கும் வகையில் அந்த 3 மாவட்டங்களிலும் ஊரடங்கு உத்தரவு அமுல்படுத்தப்பட்டது.

மேலும், தலைநகர் ஸ்ரீநகர் உள்ளிட்ட பகுதிகளில் தொடர்ந்து பதற்றம் நீடித்து வருவதால் அங்கு தொடர்ச்சியாக ஊரடங்கு உத்தரவு அமுலில் இருந்து வருகிறது. இருந்த போதிலும் மற்ற பகுதிகளில் இயல்பு வாழ்க்கை ஓரளவு சீரடைந்து வருகிறது. (இ-7)

# தாக்குதலில் பலியான வீரர்களின் உடல்களுக்கு மெஹ்பூபாமுப்தி மலர்வளையம் வைத்து அஞ்சலி



(ஸ்ரீநகர்)

ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தில் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் பலியான இராணுவ வீரர்களின் உடல்களுக்கு காஷ்மீர் முதலமைச்சர் மெஹ்பூபாமுப்தி நேற்று மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்.

ஜம்மு - காஷ்மீர் மாநிலம், உரி பகுதியில் உள்ள இந்திய இராணுவ தலைமையகம் மீது நேற்று முன்தினம் தீவிரவாதிகள் திடீர் தாக்குதல் நடத்தியதில் 17 பாதுகாப்பு படை வீரர்கள் உயிரிழந்தனர்.

4 பயங்கரவாதிகளும் சுட்டு வீழ்த்தப்பட்டனர்.

காயம் அடைந்த 19 இராணுவ வீரர்களுக்கு படாமிபாக் கன்ட்டோன்மென்ட் பகுதியில் உள்ள இராணுவ வைத்தியசாலையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.


இந்நிலையில், அங்கு சிகிச்சை பலனின்றி 3 இராணுவ வீரர்கள் உயிரிழந்ததால் உரி தாக்குதலில் பலி எண்ணிக்கை 20 ஆக உயர்ந்துள்ளது.

இந்நிலையில், படாமிபாக் கன்ட்டோன்மென்ட் பகுதியில் உள்ள ராணுவ தலைமையகத்துக்கு நேற்று காலை சென்ற மெஹ்பூபா முப்தி, பலியான வீரர்களின் உடல்களுக்கு மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினார். (இ-7-10)

# காஷ்மீர் தீவிரவாத தாக்குதலுக்கு பான் கீ மூன் கண்டனம் தெரிவிப்பு

(நியூயோர்க்)

ஜம்மு - காஷ்மீர் மாநிலத்தில் 20 இந்திய இராணுவ வீரர்களின் உயிரைப் பறித்த தீவிரவாத தாக்குதலுக்கு ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் பான் கீ மூன் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.



ஜம்மு - காஷ்மீர் மாநிலம், உரி பகுதியில் உள்ள இந்திய இராணுவ தலைமையகம் மீது நேற்று முன்தினம் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியதில் 20 பாதுகாப்பு படைவீரர்கள் உயிரிழந்தனர்.

4 பயங்கரவாதிகளும் சுட்டு வீழ்த்தப்பட்டனர். காயம் அடைந்த 19 இராணுவ வீரர்களுக்கு வைத்தியசாலையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில், ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தில் நடைபெற்ற பயங்கரவாதிகளின் இந்த கொடூரத் தாக்குதலுக்கு ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலாளர் பான் கீ மூன் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, அவர் விடுத்துள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது,

உரி தாக்குதல் தொடர்பான செய்திகளை மிக நெருக்கமாக கவனித்து வரும் ஐக்கிய நாடுகள் சபை அப்பகுதியில் வசிக்கும் மக்கள் நிம்மதியாக வாழ வேண்டும் என்பதில் அக்கறை கொண்டுள்ளது.

இந்த தாக்குதலுக்கு காரணமானவர்கள் அடையாளம் காணப்பட்டு, நீதியின் முன் நிறுத்தப்படுவார்கள் என்றும், மேற்கொண்டு இதுபோன்ற உயிரிழப்புகள் நேராத வகையில் அங்கு நிரந்தரத்தன்மையை பாதுகாக்க முன்னுரிமை அளிக்கப்படும் எனவும் நம்புகிறோம்.

இந்த தாக்குதலில் பலியான இந்திய வீரர்களின் குடும்பங்களுக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்வதுடன் காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய விரும்புகிறோம்.

இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.(இ-7-10)

# ஆற்றில் சுற்றுலாப்படகு கவிழ்ந்து 13 பேர் பலி!

## 33 பேர் படுகாயம்

(தாய்வே)

**தாய்லாந்தில் ஆற்றில் சுற்றுலாப் படகு கவிழ்ந்ததில் 13 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். 33 பேர் காயமடைந்தனர்.**



தாய்லாந்தின் வடக்கு பாங்கொக்கில் இருந்து 80 கிலோமீற்றர் தொலைவில் உள்ள பழைமையான நகரம் ஆயுத்தயா. பிரபலமான சுற்றுலாத் தலமான இந்த நகரத்தில் சாயோ ப்ரயா ஆறு ஓடுகிறது. இந்த ஆற்றில் படகு சவாரி செல்வது வழக்கம்.

நேற்று சுமார் 100 பேரை ஏற்றிக் கொண்டு படகு ஒன்று சென்று கொண்டிருந்தது.

அப்போது அந்தப் படகின் அருகில் மற்றொரு படகு சென்று கொண்டிருந்தது. அந்தப் படகின் மீது மோதிக் கொள்ளாமல் இருப்பதற்காக படகோட்டி படகை திருப்பினார். அப்போது படகு அருகில் இருந்த பாலத்தின் மீது எதிர்பாராத விதமாக மோதி மூழ்கியது.

இதில் 13 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். 33 பேர் காயமடைந்தனர்.(இ-7)

# புடினின் கட்சி அபார வெற்றி

ரஷ்யா நாட்டின் பாராளுமன்றத்துக்கு நடைபெற்ற தேர்தலில் ஆளும் ஐக்கிய ரஷ்ய கட்சி அபார வெற்றி பெற்று மூன்றில் இரண்டு பங்கு இடங்களை கைப்பற்றியுள்ளது.

ரஷ்யா நாட்டில் 450 உறுப்பினர்களைக் கொண்ட பாராளுமன்ற கீழ்சபை இயங்கி வருகிறது. 'டுமா' என்றழைக்கப்படும் இந்த கீழ்சபைக்கு நேற்று முன்தினம் தேர்தல் நடைபெற்றது.


2011 ஆம் ஆண்டு புடினுக்கு எதிராக தலைநகர் மொஸ்கோவில் மாபெரும் போராட்டங்கள் நடைபெற்ற பிறகு நடைபெற்ற முதல் சுதந்திரமான தேர்தல் இதுதான் என்ற நிலையில் சனிக்கிழமை இரவு 8 மணி முதல் ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணி வரை வாக்குப்பதிவு நடைபெற்றது. தலைநகர் மொஸ்கோவில் ஜனாதிபதி புடின் வாக்களித்தார்.

கடந்த 2011 ஆம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்ற தேர்தலில் சுமார் 60 சதவீத வாக்குகள் பதிவாகி இருந்த நிலையில் நேற்று முன்தினம் 47.5 சதவீத வாக்குகளே பதிவாகின.

குறிப்பாக, தலைநகர் மொஸ்கோவில் 20 சதவீதம் வாக்குகளும், செயின்ட் பீட்டர்ஸ்பர்க் நகரில் 16.12 சதவீத வாக்குகளும் மட்டுமே பதிவாகி இருந்தன.

வாக்குப்பதிவு முடிந்ததும் எண்ணிக்கை தொடங்கி சுமார் 50 சதவீதம் வாக்குகள் எண்ணப்பட்ட நிலையில் ஜனாதிபதி விளாடிமிர் புடின் சார்ந்திருக்கும் ஐக்கிய ரஷ்ய கட்சி 53 சதவீத வாக்குகளைப் பெற்று மொத்தம் உள்ள 450 தொகுதிகளில் 300 இடங்களில் முன்னிலை வகித்து வருகிறது.

அந்நாட்டின் வலதுசாரி இயக்கமான எல்.டி.பி.ஆர்.



14.3 சதவீத வாக்குகளையும், ரஷ்ய கம்யூனிஸ்ட் கட்சி 14.2 சதவீத வாக்குகளையும் பெற்றுள்ளன. மீதமுள்ள வாக்கு எண்ணிக்கையிலும் ஆளும் ஐக்கிய ரஷ்ய கட்சி பெரும்பான்மையான வெற்றியை பெறும் என அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டு வருகின்றன.

வாக்குப்பதிவுக்கு பிந்தைய கருத்து கணிப்பின்படி பிரதமர் டிமிட்ரி மெடடேவ் தலைமையிலான ஐக்கிய ரஷ்ய கட்சி 48.7 சதவீத வாக்குகளையும், ரஷ்ய கம்யூனிஸ்ட் கட்சி 16.3 சதவீத வாக்குகளையும், எல்.டி.பி.ஆர்.கட்சி 14.2 சதவீத வாக்குகளையும் பெறும் என்பது தெரியவந்துள்ளது.

வாக்கு எண்ணிக்கையில் தங்கள் கட்சி அதிக இடங்களில் வெற்றிமுகத்தில் இருப்பது தொடர்பான செய்திகள் வெளியாகிவரும் நிலையில், மொஸ்கோவில் உள்ள ஐக்கிய ரஷ்ய கட்சி அலுவலகத்துக்கு வந்த அஹ்டிபர் விளாடிமிர் புடின், பிரதமர் டிமிட்ரி மெட்வெடேவ் ஆகியோர் இந்த வெற்றிக்காக பாடுபட்ட கட்சித் தொண்டர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டனர்.

நாட்டில் நிலையான அரசு அமைய வேண்டும் என்று விரும்பிய மக்கள் தங்கள் கட்சிக்கு இந்த வெற்றியை பரிசாக அளித்துள்ளதாக தொண்டர்களிடையே பேசிய ஜனாதிபதி புடின் தெரிவித்தார். (இ-7)

# பெண்களின் அதிகாரத்தை ஏற்றுக்கொள்ள அமெரிக்க மக்கள் தயக்கம்; ஒபாமா பேட்டி

ஹிலாரி கிளின்டன் போன்ற பெண்கள் நாட்டின் அதிகாரம் மிக்க பதவிகளில் அமர்வதை ஏற்றுக்கொள்ள அமெரிக்க மக்கள் தயக்கம் காட்டி வருவதாக அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் எதிர்வரும் நவம்பர் 8 ஆம் திகதி நடக்கிறது. அதில் ஜனநாயகக் கட்சி வேட்பாளராக முன்னாள் வெளியுறவுத் துறை அமைச்சர் ஹிலாரி கிளின்டன் போட்டியிடுகிறார். அவரை எதிர்த்து குடியரசு கட்சி சார்பில் பிரபல தொழிலதிபரான டொனால்ட் டிரம்ப் மோதுகிறார்.

தனது ஆட்சியின்கீழ் வெளியுறவுத்துறை அமைச்சராக பணியாற்றிய ஹிலாரி கிளின்டன் அமெரிக்காவின் ஜனாதிபதி வருவதற்கு தற்போதைய ஜனாதிபதியான பராக் ஒபாமா வெளிப்படையாக ஆதரவு தெரிவித்து வருகிறார்.

இந்நிலையில், நியூயோர்க் நகரில் ஹிலாரி கிளின்டனுக்காக நிதி திரட்டும் நிகழ்ச்சியில் பேசிய ஜனாதிபதி ஒபாமா, ஹிலாரி கிளின்டன் போன்ற பெண்மணிகள் நாட்டின் அதிகாரம் மிக்க பதவிகளில் அமருவதை ஏற்றுக்கொள்ள அமெரிக்க மக்கள் தயக்கம்காட்டி வருவதாக தெரிவித்தார்.

அமெரிக்காவின் ஜனாதிபதியாக இதுவரை ஒரு பெண்மணிகூட பதவி வகிக்காதது தொடர்பாக இந்நிகழ்ச்சியில் தனது கருத்தினை பகிர்ந்து கொண்ட ஒபாமா, 'அதிகாரம் மிக்க பதவிகளில் பெண்கள் அமர்வதை ஏற்றுக்கொள்ள இயலாத மனநிலையில் உள்ள ஒரு சமூகத்தில் நாம் வாழ்ந்து வருகிறோம். அவர்கள் அதிகாரத்துக்கு வருவது, நமக்கு பலவகைகளில் இடையூறு என கருதுகிறோம். இத்தகைய நியாயமற்ற கருத்து பல வகைகளில் எதிரொலித்தும் வருகிறது' என்று தெரிவித்தார். (இ-7-10)

# சிறிய ரக விமானங்கள் நேருக்கு நேர் மோதல் நான்கு பேர் உயிரிழப்பு

(புத்தபெஸ்ட்)

ஹங்கேரி தலைநகர் புத்தபெஸ்ட்டில் இரண்டு சிறியரக விமானங்கள் நேருக்கு நேர் மோதிக்கொண்டது. இதில் நான்கு பேர் உயிரிழந்தனர்.

கிழக்கு புத்தபெஸ்ட்டுக்கு அருகில் உள்ள கொடோல்லோ அருகே பாரசூட்டில் இருந்து வீரர்கள் குதிக்கும் போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது. போட்டியில் எதிர்பாராத விதமாக இரண்டு சிறிய ரக விமானங்கள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானது.

இதுகுறித்து விமானப்போக்குவரத்து செய்தித்தொடர்பாளர் எரிகா பஜ்கோ கூறுகையில், "பராசூட் போட்டியின்போது விமானத்தில் இருந்து வீரர்கள் குதித்தவுடன் தரையில் இருந்து 600 மீற்றர் தூரத்தில் பறந்து கொண்டிருந்த விமானம் தனது கட்டுப்பாட்டை இழந்து எதிரில் வந்த விமானத்தின் மீது மோதியது. இதில் ஒரு குழந்தை உட்பட மொத்தம் நான்கு பேர் உயிரிழந்தனர்.

இந்த விபத்திற்கான காரணம் குறித்து விமான நிலைய அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்" என்றார். (இ-7)

# பாரிய மண்சரிவின் காரணமாக யூனான் மாநிலத்தில் 60 ரயில் சேவைகள் பாதிப்பு

சீனாவின் மேற்கு மாநிலமான யூனானின் yuanmou உள்ளூர் பகுதியில் இடம் பெற்ற பாரிய மண்சரிவின் காரணமாக ரயில் தண்டவாளம் சேதமடைந்தமையினால், சுமார் 60 ரயில் சேவைகள் பாதிப்படைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

யூனான் மாநிலத்தின் பல பகுதிகளிலும் தொடர் மழை பெய்து வருவதனால், அங்கு பல பகுதிகளிலும் வெள்ளம் ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் குன்மிங் நகரில் இருந்து செங்டு, சியான், ஊரம்கீ உட்பட பல நகர்களுக்கும் இடையிலான முக்கிய ரயில் பாதை அமைந்துள்ள yuanmou உள்ளூரில் பாரிய மண்சரிவொன்று ஏற்பட்டது.



இந்த மண்சரிவினால் ரயில் பாதையில் பாரிய பாதிப்புகள் ஏற்பட்டன. இதனால் அந்த பாதையினூடான ரயில் போக்குவரத்து முற்றாகப் பாதிப்படைந்தது. அதனைத் தொடர்ந்து உடன்டியாக ரயில் பாதையை சீரமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு, தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

குறித்த பணிகளில், அவசரப் பணிக் குழுவின் சுமார் 1,200 ஊழியர்கள் ஈடுபடுத்தப் பட்டுள்ளதாகவும், அவர்கள் மிக வேகமாக தமது பணியை மேற்கொண்டு வருவதாகவும் ரயில்வே துறையினர் கருத்து தெரிவித்திருந்தனர்.

எனினும் மண்சரிவு மிகவும் பெரிய அளவில் இடம் பெற்றுள்ளமையினால், சீரமைப்புப்பணிகளை மேற்கொள்வதில் பாரிய சிரமங்கள் நிலவுவதாகவும், எவ்வாறிருப்பினும் தாம் பணிகளை முடியுமான அளவு வேகமாக மேற்கொள்வதாகவும் அவசரப் பணிக்குழுவினர் தெரிவித்துள்ளனர். (இ-7-10)

# தமிழ் அரசியல் கைதிகள் மீண்டும் உண்ணாவிரதம்

(கொழும்பு)

**அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் நாளை 21ஆம் திகதி முதல் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபடப்போவதாக எச்சரிக்கை விடுத்துள்ளனர்.**

கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டும் என வலியுறுத்தியும், பல வருடங்களாக தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் மீதான வழக்குகள் தமிழ் பிரதேசங்களில் உள்ள நீதிமன்றங்களுக்கு மாற்றப்பட வேண்டும் என வலியுறுத்தியும் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபடப்போவதாக அறிவித்துள்ளனர்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள தமது விடுதலையை அரசாங்கம் தாமதப்படுத்தும் பட்சத்தில் மீண்டும் உண்ணாவிரத போராட்டத்தை ஆரம்பிக்கவுள்ளதாக கடந்த ஓகஸ்ட் மாதம் அநுராதபுரம் சிறைச்சாலைக்கு விஜயம் செய்த தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனிடம தமிழ் அரசியல் கைதிகள் தெரிவித்திருந்தனர்.

அத்துடன் தமது விடுதலை தொடர்பாக தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் ஜனாதிபதி மற்றும் பிரதமருடன் கலந்துரையாட வேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

சர்வதேசத்தையும் மக்களையும் ஏமாற்றும் வகையிலேயே தம்மை விடுதலை செய்வதற்காக அரசாங்கம் விசேட நீதிமன்றங்களை அமைக்கின்ற போதிலும் அது காலத்தை கடத்தும் செயற்பாடு எனவும் அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகள் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

# பலத்த பாதுகாப்பிற்கு மத்தியில் நியூயோர்க் நகரில் ஜனாதிபதி



ஐ.நா பொதுச்சபைக் கூட்டத்தில் பங்கேற்பதற்காக நேற்று முன்தினம் முற்பகல் கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து புறப்பட்ட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, நியூயோர்க் ஜோன் எவ் கெனடி விமான நிலையத்தைச் சென்றடைந்துள்ளார்.

நியூயோர்க்கின் மன்ஹாட்டன் பகுதியில் நேற்று முன்தினம் வெடிப்புச் சம்பவம் ஒன்றில் 29 பேர் காயமடைந்ததால், பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் ஜனாதிபதி உள்ளிட்ட வெளிநாட்டுத் தலைவர்கள், நியூயோர்க்கில் தங்கவைக்கப்பட்டனர்.

ஐ.நா.பொதுச்சபையின் 71 ஆவது கூட்டத்தொடரில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, உரையாற்றுவதற்கு நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்தப் பயணத்தின் போது, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பல்வேறு நாடுகளின் உயர்மட்டத் தலைவர்களுடன் இருதரப்பு பேச்சுக்களை நடத்தவுள்ளார்.

அவுஸ்திரேலியப் பிரதமர் மலகம் ரேன்புல், ஐ.நா பொதுச் செயலர் பான் கீ மூன், அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஜோன் கெரி, இந்தியாவின் வெளிவிவகார இணை அமைச்சர் எம்.ஜே.அக்பர், நேபாள பிரதமர் புஸ்பா கமல் தால், உள்ளிட்டோரை ஜனாதிபதி சந்திக்கவுள்ளார். (இ-7-10)

# மாணவர்களை சேர்க்கும் விடயத்தில் அமைச்சின் முடிவே இறுதியானது

## கல்வி அமைச்சர் தெரிவிப்பு



(கொழும்பு)

முதலாம் தரத்திற்கு மாணவர்களை சேர்த்துக் கொள்ளும விடயத்தில் கல்வி அமைச்சின்முடிவே இறுதியானது என்று கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

கடந்த வாரங்களில் அரச வைத்தியர்களின் பிள்ளைகளுக்கு பிரபல பாடசாலைகளில் அனுமதி வழங்குமாறு கோரி அரச வைத்திய அதிகாரிகள் கல்வி அமைச்சிற்குள் அத்துமீறி பிரவேசித்து ஆர்ப்பாட்டங்களை நடத்தியிருந்தனர்.

இந்தநிலையில் பிரபல பாடசாலைகளில் மாணவர்களை இணைத்துக் கொள்ளும் போது தமது பிள்ளைகளுக்கு அநீதி இழைக்கப்படுவதாக கல்வி சாரா ஊழியர் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

பிள்ளைகளை பாடசாலையில் சேர்த்துக் கொள்ளும் போது 5வீத ஒதுக்கீடு கல்விசாரா ஊழியர் சங்கத்தின் பிள்ளைகளுக்கு வழங்குமாறு கல்வி அமைச்சின் சுற்றுநிருபத்தில் வெளியிடப்பட்டுள்ள போதும் அந்த வாய்ப்பு தமது பிள்ளைகளுக்கு மறுக்கப்படுவதாக குற்றஞ் சுமத்தியுள்ளனர்.

அத்துடன் அரச வைத்தியர்கள் இடமாற்றம் பெறும் போது, அவர்கள் கோரும் பிரபல பாடசாலைகளை கல்வி அமைச்சு வழங்குமாயின் கல்விசாரா ஊழியர்கள் தமதுபிள்ளைகளுக்கு கோரும் பாடசாலையினை கல்வி அமைச்சு வழங்குவதில் தவறில்லை என்றும் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இந்த விடயங்கள் தொடர்பில் சிங்கள ஊடகம் ஒன்று கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசத்திடம் வினவிய போதே அவர் முதலாம் தரத்திற்கு மாணவர்களை சேர்த்துக் கொள்ளும் விடயத்தில் கல்வி அமைச்சின் முடிவே இறுதியானது எனத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

# இன்று ஒரு தகவல்

## இரகசியம் பேசும் போது ...

எத்தனையோ சந்தர்ப்பங்களில் நாம் பிறர் தெரிந்து கொள்ள வேண்டிய அவசியம் இல்லை என்று எண்ணிச் சில விடயங்களைப் பேச வேண்டியிருக்கிறது.

அப்படிப் பேசும் போது சில வழிமுறைகளைக் கடைப்பிடிக்காவிட்டால் அது வினையில் வந்து முடிகிறது.

செட்டி நாட்டில் இரு பழக்கம். கடல் போன்ற வீடுகளில் கண்ணுக்கெட்டிய தூரம் வரை ஆள் இல்லாவிட்டாலும் இருவர் இரகசியம் பேசினால் அதற்கென்று தனிக் குரல் வைத்திருப்பார்கள். மிகமிக மெதுவாகப் பேசுவார்கள்.

யாருமற்ற இவ்வளவு பெரிய வீட்டில் இப்படிப்பட்ட கிசுகிசுக் குரல் அவசியம்தானா என்று சிலர் நினைக்கக்கூடும். ஆனால், இந்தப் பழக்கம் இருக்கிறதே இது மக்கள் மிக நெருங்கி நிற்கும் அல்லது நெருங்கி வாழும் பரபரப்பான சூழ்நிலைகளில் மிக மிக உதவும்.

ஒருவரைப் பற்றி மற்றவரிடம் தவறாகவோ வித்தியாசமாகவோ பேசிக் கொண்டிருப்பார் இவர். யாரை இவர் அப்படிப் பேசினாரோ அவரே வந்துவிடுகிறார். சட்டென்று என்று வைத்துக் கொள்வோம்.

அவ்வளவுதான், இவருக்கு முகம் கறுத்தோ வெளுத்தோ போய்விடும். அல்லது கொஞ்சம் பக்குவப்பட்டவராக இருந்தால் பேச்சைச் சட்டென்று நிறுத்திவிடுவார்.

அவ்வளவுதான் , சட்டென்று வந்தவருக்குப் புரிந்துவிடும். இவர்கள் நம்மைப் பற்றித் தான் ஏதோ தவறாகப் பேசுகிறார்கள் என்பது தெரிந்துவிடும், அல்லது நமக்குத் தெரிய வேண்டாம் என்று நினைக்கும் விடயத்தைப் பேசினார்கள் – நாம் வந்ததும் நிறுத்தி விட்டார்கள் என்று உணர்ந்து கொள்வார்.

இதற்கு இரகசியம் பேசுபவர்கள் சிறிதும் இடம் கொடுக்கக்கூடாது.

எப்படி என்கிறீர்களா?

எந்த ஓர் இரகசியம் பேசு முன்னரும் சம்பந்தப்பட்டவரோ அல்லது வேறு யாரோ வந்துவிட்டால் சட்டென்று பேச்சை மாற்றுவது எப்படி என்கிற கலையைத் தெரிந்து வைத்திருக்க வேண்டும். யாரும் திடீரென வந்துவிட்டால் எதைப் பற்றிப் பேசிப் பேச்சின் திசையைத் திருப்புவது என்பதை முன்கூட்டியே முடிவு செய்து வைத்துக் கொள்ள வேண்டும்.

முகம் மாறாமல் கடைசியாக எந்த வார்த்தையில் விட்டோமோ அதே வார்த்தையைத் தொடர்ந்து புதிதாகச் சிந்தித்து வைத்திருக்கும் பொதுவான விடயத்தை எடுத்துவிட வேண்டும்.

மாறாக, திரு திரு என்று விழித்து மாட்டிக் கொள்ளக் கூடாது. அரண்டும் மிரண்டும் போய் விடக் கூடாது.

இந்தக் கலையெல்லாம் நமக்குக் கைவராது என்பவர்கள் முழுக்க முழுக்கப் பாதுகாப்பான இடம் என்று எண்ணும் இடத்தில் தான் பேச வேண்டும்.

இப்படிப்பட்ட இடத்திலும் கூட இவர்கள் காதில் இதைப் போடலாமா? அப்படிப் போடுவதனால் என்ன நன்மை? போடுவதால் நமக்குக் கெடுதல் ஒன்றும் வந்துவிடாதே? என்றெல்லாம் சிந்திக்க வேண்டும்.

எல்லாவற்றுக்கும் மேலாக அவர்களுடைய வாய் ஒலி பெருக்கி இல்லை என்பதையும் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

**லேனா தமிழ்வாணன்**

# க.பொ.த.(சா/த) பரீட்சை-2016 மாதிரிவினாத்தாள்

## தமிழ் மொழியும் இலக்கியமும்

ஆசிரியர் - இரா. நிஷாந்தன், கிளி/இராமநாதபுரம் ம.வி

பகுதி -I

♦ 1 தொடக்கம் 40 வரையான வினாக்களிற்கு மிகப் பொருத்தமான விடையினை தெரிவு செய்க.

♦ தடித்த எழுத்தில் அமைந்த சொல் பற்றிய வினாவுக்கு பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

1. பனிக்கூட்டம் விரட்டிவரும் பகலவனின் வீரம்.இங்கு பகலவன் என்பது.
1. சூரியன் 2. சந்திரன் 3. இந்திரன் 4. மன்மதன்

2. எழுமையும் தான்புக்கு அழுந்தும் அளறு.. இங்கு அளறு என்பதன் கருத்து.
1. சொர்க்கம் 2. நரகம் 3. ஆகாயம் 4.துன்பம்

3. துச்சாதனன் திரௌபதியின் சிகையை பற்றி இழுத்து வந்தான். இங்கு சிகை என்பதன் ஒத்தகருத்து.
1. கை 2. கூந்தல் 3. புடைவை 4. கழுத்து

4. புலவர்கள் பாதகம்இல்லாத பாடல்களையே அதிகம்பாடுவர். இங்கு பாதகம்என்பதன்எதிர்க்கருத்து.
1. நட்டம் 2. சாதகம் 3. இனிமை 4. நயம்

5. திணைப்புலத்தில் குறவன் காவல் செய்தான். குறவன் என்பதன் எதிர்பாற்சொல்
1. குறத்தி 2. குறமகள் 3. விறலி 4. குறவி

♦ பின்வரும் வினா ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

6. கல்விஅதிகாரிஒருவரை பத்திரிகை நிருபர்இன்ரர்வியு(interview) எடுத்தார். interview என்பதன் தமிழ்சொல்.
1. விவாதம் 2. நேர்காணல் 3. புகைப்படம் 4. அறிக்கை

7. கூட்டத்தை குறிக்கும் மரபுச் சொற்களில் பொருத்தமற்றது.
1. உடு- திரள் 2.மயில்- குழாம் 3.அறிஞர்- கூட்டம் 4. மா - சோலை

8. புராணக் கதைகளை சுவைபட பிரசங்கம் செய்பவர் எவ்வாறு அழைக்கப்படுவார்.
1. துறவி 2. குரு 3.பௌராணிகன் 4. அறிவிப்பாளர்

9. வண்டு, சிங்கம், விஸ்ணு எனும் பலபொருள் குறிக்கும் ஒருசொல்.
1. அளி 2. அரி 3. மால் 4. கேசரி

10. சொற்களுக்கு அகர வரிசைப்படி பொருள் கூறும் நூல் வடிவம்.
1. அகராதி 2. நிகண்டு 3. கலைக்களஞ்சியம் 4. அந்தாதி

11. யானைக்கு பிடி போல மானுக்கு.
1. கலை 2. பிணை 3. பிணா 4. பெடை

12. புலவர் ஒருவர் ஒரு நிகழ்வினை மிகவும் உயர்வாக ஏற்றிச் சொல்லுதல் எவ்வகை அணியாகும்.
1. உவமை 2. உருவகம் 3. உயர்வுநவிற்சி 4.தற்குறிப்பேற்றம்

13. "சிங்கத்தின் இளையது குஞ்சு" இங்கு இடம்பெற்றுள்ள வழு.
1. விடைவழு 2. காலவழு 3. பால்வழு 4. மரபுவழு

14. காது குத்தல் என்பதைக் குறிக்கும் மரபுத்தொடர்
1. தோடு குத்தல் 2. அவதானித்தல் 3. ஏமாற்றுதல் 4. துரோகம் செய்தல்

15. எடுத்த எடுப்பிலேயே கவி பாடும் ஆற்றல் படைத்தவர்
1. ஆசுகவி 2. வரகவி 3. விகடகவி 4.இறைகவி

16. சரியான வழிகாட்டி இல்லாத சமூகம் திசைமாறிச் செல்வதை குறிக்கும் உவமைத்தொடர்.
1. மீகாமன் இல்லாத மரக்கலம் போல
2. அம்மி துணையாக ஆற்றில் இறங்கியது போல
3. உறியில் வெண்ணெய் இருக்க ஊரெல்லாம் நெய்க்கு அலைதல் போல
4. ஊசியின் வழிச் செல்லும் நூல் போல

17. வல்லமையுள்ளவர் காரியம் சாதிப்பர் எனும் பொருள் தரும் பழமொழி.
1. வல்லான் பம்பரம் மணலிலும் ஆடும்
2. வல்லவனுக்கு புல்லும் ஆயுதம்
3. வல்லவனுக்கு வல்லவன் வையத்தில் உண்டு
4. அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு

18. பின்வருவனவற்றுள் வேறுபட்ட பொருளைக் கொண்ட பழமொழிச் சோடி.
1. உண்மை சொல்லி கெட்டாரில்லை
உண்மையே உயர் தந்திரம்
2. அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு
ஒன்று பட்டால் உண்டு வாழ்வு
3. வல்லவனுக்கு புல்லும் ஆயுதம்
வல்லான் பம்பரம் மணலிலும் ஆடும்
4. மனம் கொண்டது மாளிகை
மனம் உண்டானால் இடம் உண்டு

19. மற்றவர்களின் நலனில்அக்கறை கொண்டு செயலாற்றுபவன் என்பதனை விளக்க பொருத்தமான அருஞ்சொற்றொடர்.
1. தனக்கென வாழாப் பிறர்க்குரியவன்
2. தன்னுயிர் போல மன்னுயிர் போற்றி
3. கள்ளமற்ற உள்ளம்
4. ஒப்பாரும் மிக்காருமின்றி

20. கண்ணன் சூதுவாது தெரியாதவனாகி யசோதையிடம் வளர்ந்தான். இங்கு சூதுவாது என்பதை குறிக்கும் இணைமொழி.
1. ஏற்றத்தாழ்வு 2. ஏந்தியெடுத்து 3. கள்ளங்கபடம் 4. சந்துபொந்து

♦ பின்வரும் வினா ஒவ்வொன்றிற்கும் மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க.

21. பெயராகவும்,வினையாகவும் வழங்கக்கூடிய ஒரு சொல்
1. வால் 2.தாய் 3.உண் 4. பாய்

22. பன்மை விகுதி பெற்று வரக்கூடிய சொல்
1. நட்பு 2. தண்ணீர் 3.சந்தர்ப்பம் 4. பொறாமை

23. மாலை முன்றில் குறுங்கால் கட்டில் மனையோள் துணைவி. இங்கு முன்றில் என்பது.
1. இலக்கணப்போலி 2. இலக்கணமுடையது
3. எழுத்துப்போலி 4. மரூஉ

24. பூங்குழலாள் இனிமையாக பாடினாள். இங்கு பூங்குழல் என்பது
1. அன்மொழித் தொகை 2. உம்மைத் தொகை
3. வேற்றுமைத் தொகை 4. உவமைத் தொகை

25. அப்பா நாளைக்கு வருவார் என்று தம்பி சொன்னான். இது
1. தனிவாக்கியம் 2. தொடர் வாக்கியம்
3. கூட்டுவாக்கியம் 4. கலப்பு வாக்கியம்

26. கவிஞரும் போற்றிய மனிதர். இங்கு உம் இடைச்சொல் உணர்த்தும் பொருள்.
1. இழிவு சிறப்பு 2. உயர்வு சிறப்பு 3. ஐயம் 4. முற்று

27. இம்முறை போதுமான மழை பெய்தது.
நெல் விளைச்சல் அதிகரிக்கவில்லை.
மேற்படி இருவாக்கியங்களையும் இதே ஒழுங்கில் இணைப்பதற்குப் பொருத்தமான இணைப்பிடைச் சொல்.
1. ஆகவே 2. ஆயினும்
3. அத்துடன் 4. எனவே

28. அறிவாளி எனும் ஆக்கப்பெயரின் விகுதி
1. வாளி 2. ளி 3. அறிவு 4. ஆளி

29. மாணவரது வரவு இன்று குறைவாகக் காணப்படுகின்றது. மாணவரது வரவு என்பது.
1. நான்காம் வேற்றுமை 2. ஐந்தாம் வேற்றுமை
3. ஆறாம் வேற்றுமை 4. ஏழாம் வேற்றுமை

30. பின்வருவனவற்றுள் பொருத்தமற்ற தொகுதியைத் தெரிவு செய்க.
1. கூட்டுப் பெயர் - வானொலி, குதிரைப்படை, கண்காட்சி
2. ஆக்கப் பெயர் - கொடையாளி, புத்திசாலி, முயற்சி
3. கூட்டு வினை - காட்டிக்கொடு, தந்தியடி, சுட்டிக்காட்டு
4. தெரிநிலை வினைமுற்று - செய்தேன், படித்தானை, படித்தான்

♦ புள்ளிக் கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான விடையை தெரிவு செய்க.

31. சிறந்த பாடகர்களை தெரிவு செய்வதற்காக நடுவர்களால் நேர்முகத் தேர்வு------------------
1. நடாத்தப்பட்டது 2. நடைபெறும்
3. நடாத்தப்படுகின்றது 4. நடைபெறுகின்றது.

32. அர்ச்சுனன் தனக்கு வித்தை கற்பித்த குருவிற்கு ----------------. வழங்கினான்.
1. அன்பளிப்பு 2. குருதட்சணை
3. சன்மானம் 4. விருந்து

33. ஆலய மகோற்சவத்திற்கான ......................... பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டது.
1. அறிவித்தல் 2. வர்த்தமானி
3. விஞ்ஞாபனம் 4. கையேடு

34. இன்றைய சமுதாயத்தில் ...................... சீர்கேடுகள் அதிகரித்துள்ளன.
1. களாச்சார 2. கலாசார 3. கழாச்சார 4. கலாச்சார

35. நாட்டில் தனியார் பல்கலைகழகங்களை நிறுவது தொடர்பான ................ ஒன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.
1. உடன்படிக்கை 2. பிரேரணை
3. மனு 4. வெள்ளையறிக்கை

♦ வாக்கியங்களில் முற்பகுதிக்கு பொருத்தமான முடிக்கும் பகுதியைத் தெரிவு செய்க.

36. நகைச்சுவைக் காட்சியை தொலைக்காட்சியில் பார்த்துக்கொண்டிருந்த கலைவாணன்..........
1. படபடவென்றுசிரித்தான் 2. கலகலவென்று சிரித்தான்
3. கடகடவென்று சிரித்தான் 4. குளுகுளுவென்று சிரித்தான்

37. அயராது முயற்சி செய்பவர்களாலேயே வாழ்க்கையில் முன்னேற்றம் ..........................
1. காணமுடியும் 2. காண்பார்கள்
3. காணமுடியாது 4. கண்டார்கள்

♦ தரப்பட்ட பாடலை அடிப்படையாக கொண்டு பின்வரும் வினாக்களிற்கு விடை தருக.

சுட்டும் விழிச் சுடர் தான் கண்ணம்மா - சூரிய சந்திரரோ
வட்டக் கரிய விழி கண்ணம்மா வானக் கருமை கொள்ளோ
சோலை மலரொளியோ உனது சுந்தரப் புன்னகை தான்
நீலக் கடலலையோ உனது நெஞ்சின் அலைகளடி
கோலக் குயிலோசை உனது குரலின் இனிமையடி
வாழைக் குமரியடி கண்ணம்மா மருவக் காதல் கொண்டேன்

38. இப்பாடலினூடாக கவிஞர் சொல்ல வந்த கருத்து யாது?
1. கண்ணம்மாவின் அழகு 2. இயற்கையின் சிறப்பு
2. வானத்தின் அழகு 4. உள்ளத்து ஆசைகள்

39. சுந்தரப் புன்னகை என்பதில் வந்துள்ள அணி
1. உவமை 2. சிலேடை 3. உருவகம் 4. உயர்வுநவிற்சி

♦ கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்குபெற வைத்தால் கட்டுக்கோப்பான பந்தியொன்று அமையும். அவ்வாறு பந்தியமைப்பதற்கு மிகப்பொருத்தமான வைப்பு முறையை தெரிவு செய்க.

40. அ. தேவர்கள் சுயம்வரத்திற்கு நளனுருவிலே வந்திருந்தனர்.
ஆ. நிடதநாட்டு மன்னன் வீமன் மகள் தமயந்தி
இ. உண்மையான நளனை அறிந்து அவனுக்கே மாலை சூட்டினாள் தமயந்தி
ஈ. தமயந்தியின் சுயம்வரத்திற்கு தேவர்களும் வந்திருந்தனர்
உ. நளனுருவில் தேவர்களை கண்ட தமயந்தி தடுமாற்றமடைந்தாள்.
1. ஆ,அ, ஈ, உ, இ 2. ஆ, ஈ, உ, அ, இ
3. ஆ, ஈ,அ, உ, இ 4. ஈ, அ, இ, ஆ, உ

♦♦♦

16 ஆம் பக்கம் பார்க்க....

## தமிழ் மொழியும் இலக்கியமும் தொடர்ச்சி....

### பகுதி II

01 . சுருக்கமான விடை தருக.

1. பின்வரும் தொடரைச் சந்தி பிரித்து எழுதுக.

"தேனருவி திரையெழும்பி வானின்வழி யொழுகும்"

2. அமர் எனும் சொல் பெயராகவும் வினையாகவும் வரத்தக்கதாகத் தனித்தனி வாக்கியங்கள் எழுதுக.

3. பின்வரும் பேச்சுவழக்குத் தொடரை எழுத்துவழக்குத் தொடராக மாற்றி எழுதுக.

"ஆட்டைக் கடிச்சு மாட்டைக் கடிச்சு இப்ப மனுசனைக் கடிக்க வந்தாச்சி"

4. நுகர்வோர் எனும் சொல் புலப்படுமாறு அதனை ஒரு வாக்கியத்தில் அமைத்துக் காட்டுக.

5. அர்ச்சுனன் வில் ஏந்தினான். இதனை செயற்பாட்டு வினை வாக்கியமாக மாற்றி எழுதுக.

6. பின்வரும் வாக்கியத்தில் உள்ள வழுவை சுட்டிக்காட்டுக.

"கவரிமான்கள் மயிர் நீப்பின் கணப்பொழுதும் உயிர் வழாது"

7. விரிகுழல், பைந்தொடி என்பன எவ்வகை தொகைகளாகும்.

8. புணர்த்தி எழுதுக.

கருமை + குழல்
நீர் + ஓடை

9. ஒருவரின் கண்மலரில் கை படுவது குற்றமன்று. இங்கு இடம்பெற்றுள்ள அணியினை குறிப்பிட்டு விளக்குக.

10. தருமர் அறத்தையே இலட்சியமாக கொண்டு வாழ்ந்தவர். இங்கு எழுவாய், பயனிலை என்பவற்றை குறிப்பிடுக.

02. பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து, ஏறத்தாழ 250 சொற்களில் அமையுமாறு விடை எழுதுக. நீங்கள் தெரிவு செய்த விடயத்திக்கு பொருத்தமான தலையங்கம் இடுக.

i. இலக்கியம் என்பது வாழ்வைப் பிரதிபலிக்கும் கண்ணாடி தமிழில் பல்வேறு இலக்கியங்கள் பண்டுதொட்டு வளர்ந்து வந்துள்ளன. இன்றும் சிறுகதை, நாவல், கவிதை, எனப் பல்வகைப்பட்ட இலக்கியங்கள் வெளிவருகின்றன. இவை கலை அனுபவத்தையும், இலக்கிய இரசனையையும், வாழ்க்கை அனுபவத்தையும் தரவல்லன. இலக்கிய ஈடுபாட்டினால் ஒருவர் அடையக்கூடிய நன்மைகள் பற்றி ஒரு விளக்கக் கட்டுரை.

ii. பெண்கள் பெருமைக்குரியவர்கள். இவர்கள் குடும்ப நிலையிலும் சமூக நிலையிலும் பல்வேறு வகைகளில் முக்கியமானவர்களாக திகழ்கின்றனர். இலக்கியங்களே பெண்களின் சிறப்புக்களை உயர்வுபடுத்திக் கூறியுள்ளன. மொழி, கலாசாரம் என்பன என்பவை இவர்களாலே பேணப்படுகின்றன. இன்று பெண்கள் கல்வி, தொழில், சமூகத்தொண்டு முதலான துறைகளில் ஆற்றலுடன் செயலாற்றுகின்றனர். பெண்களை போற்றுதல் வேண்டும் எனும் கருத்துப்பட சர்வதேச மகளிர் தினத்தையொட்டி நீர் நிகழ்த்தும் மேடைப்பேச்சு

iii. சிறுவர்கள் பாதுகாக்கப்பட வேண்டியவர்கள். குறிப்பாக அவர்களது உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டும். சிறுவர் மீதான துஷ்பிரயோகங்கள் தவிர்க்கப்பட வேண்டும். சிறந்த உடல், உள மனவெழுச்சியுடன் கூடிய சிறுவர்களே சிறந்த குணப்பண்புகள் மிக்க நாளைய சமுதாயத்தைக் கட்டியெழுப்பக்கூடியவர்கள் எனும் தொனிப்பொருளில் நண்பர்கள் இருவரிடையே இடம்பெறும் ஓர் உரையாடல்

iv. அதிக இலாபம் ஈட்டும் பெரிய வணிக நிறுவனமொன்றின் தலைவராக இருக்கின்ற தந்தையொருவர் தனது மகனையும் அத்துறையில் ஈடுபடுத்த விரும்புகிறார். ஆனால் மகனோ இசைக் கலைஞனாக வர விரும்புகின்றான். தந்தைக்கும் மகனுக்கும் இடையே உள்ள கருத்து முரண்பாட்டை வெளிக்கொணரும் வகையில் ஒரு சிறுகதை

03. கீழே தரப்பட்டுள்ள உரைப்பகுதியின் சுருக்கத்தை 40 - 45 சொற்களில் அமையக் கூடியவாறு எழுதுக. (சொற்களின் எண்ணிக்கையை குறிப்பிடுக.)

கல்வி பயிலும் பருவம் இளமைப் பருவம் என்று சொல்லப்படுகின்றது. கலைகள் பயிலுவதற்கு இளமைப் பருவமே சாலச் சிறந்தது. அதனாலேதான் / இளமையில் கல்/ என்றும் ஆணை பிறந்தது. மானுடராய்ப் பிறந்தவர் எல்லோருக்கும் இது பொதுவான நெறி. இதன்படி ஒழுக எல்லோரும் கடமைப்பட்டிருக்கின்றனர். பிள்ளைப்பருவம் புதிதாக வனைந்த சட்டி போன்றது. அப்போது அதன் மீது பதிப்பிக்கப்படும் உயர்ந்த எண்ணங்களும் சீரிய இயல்புகளும் என்றைக்கும் மாறா. மாணாக்கர்களுக்கு தொழிற்கல்வி இன்றியமையாதது என்று இக்காலத்தில் உலகெங்கும் உள்ள அறிஞர்கள் வற்புறுத்தி வருகின்றனர். இந்தியாவும் இந்த இயக்கத்தில் ஈடுபட்டிருக்கிறது. உடல் உழைப்பை ஒட்டிய தொழில் ஆடவர், மகளிர் ஆகிய இருபாலாருக்கும் வேண்டப்படுவது என்பதும் அப்பயிற்சி இளம்பிராயத்திலேயே அளிக்கப்பட வேண்டும் என்பதும் பலர் கருத்து. ஆனால் நம் நாட்டின் முன்பு ஒரு காலத்தில் இருந்த, இதைவிட முக்கியமான பயிற்சி ஒன்றை மறந்துவிடலாகாது. அக்காலத்தை விட இக்காலத்தில் அது பெரிதும் வேண்டப்படுகின்றது. மானுட வாழ்க்கையானது பரஸ்பர உதவியை அடிப்படையாக கொண்டது எனும் கோட்பாடு இந்நாளில் அறவே மறைந்து போய் விட்டது. எங்கும் போட்டி மயம் போர்க்களத்தின் காட்சியே யாண்டும் தென்படுகின்றது. பகுத்தளித்தல் என்னும் பண்புக்கு பதிலாக பறித்து பிடுங்குதல் என்னும் பாதகமே பார்க்கும் இடமெல்லாம் காட்சி கொடுக்கிறது. நவீன படிப்பு முறையே இத்தகைய துல்லிய நோக்கத்துடன் அமைக்கப்பட்டிருக்கிறது. கல்வியானது கைங்கரியமாய் இருந்தது போய் இப்போது போட்டிமயமாய் மாறியிருக்கிறது. என்னென்ன முறைகளில் பிறரை விடத் தாம் மேலாம் அந்தஸ்து வைக்க முடியும் என்பதுவே இக்காலத்தவர் பெறும் பயிற்சியாகும். துவேஷமும் துயரமும் அதிகரிப்பது இதனாலேயேயாம்.

04. பின்வரும் பாடலை வாசித்து அதன்கீழ்த் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.

கொட்டிடுவாய் மழையே - நாங்கள்
குதூகலம் எய்திடவே
சொட்டுச் சொட்டாய் தொடங்கி - மழையே
சோவெனப் பெய்திடுவாய்
வளைவு கட்டி வைத்தே - பெரியார்
வருகை நோக்குதல் போல்
வளைந்த வானவில்லும் - உடனே
வருகை காட்டிடுமே
நெற்றியில் நீர் சொரிய - உழவர்
நிலம் உழுத பின்பும்
வற்றிய குட்டை கண்டால் - உடனே
மாமழை பெய்திடுவாய்.

வாரிப் பொருளையெலாம் - நன்கு
வழங்கி நிற்போரை
மாரிபோலப் பொழிவார் - என்றே
வாழ்த்தும் மனித குலம்.

அ. மழை நன்றாகப் பெய்தல் வேண்டும் என்பதைக் குறிக்க கவிஞர் பயன்படுத்தும் இரண்டு தொடர்களை எழுதுக.

ஆ. வானவில் பற்றி இங்கு கவிஞர் என்ன கூறுகிறார்?

இ. உழவனுக்கும் மழைக்குமிடையே உள்ள தொடர்பு யாது?

ஈ. வாரிப் பொருளையெல்லாம்எனத் தொடங்கும் கடைசிப் பாடலில் கையாளப்பட்டுள்ள அணி யாது?

உ. பொருள் தருக.

அ. குதூகலம் ஆ. குட்டை

05. இன்றைய சமுதாயத்தில் மாணவர் கல்வியில் அறநெறிக்கல்வியும் முக்கியமான ஒன்றாக உள்ளது. ஆயினும் அறநெறிப்பாடசாலைகளுக்கு செல்லும் மாணவர் எண்ணிக்கை மிகமிகக் குறைவாகவே உள்ளது. எனவே அறநெறிக்கல்வியின் முக்கியத்துவம், அதனை கற்க வேண்டியதன் அவசியம் என்பவற்றை வலியுறுத்தி மாணவர் பயன்பெறும் வகையில் பத்திரிகைக்கு 100 சொற்களில் ஓர் கடிதம் எழுதுக.

அல்லது

புதிதாக பால்மா ஒன்றினை உற்பத்தி செய்த நிறுவனம் ஒன்று தனது உற்பத்தியை அறிமுகம் செய்வதையும் விற்பனையை அதிகரிப்பதையும் நோக்கமாக கொண்டு வெளியிட உத்தேசித்துள்ள விளம்பரம் ஒன்றினை 100 சொற்களில் அமையுமாறு எழுதுக.

♦♦♦

### பகுதி III

✦ ஐந்து வினாக்களிற்கு மாத்திரம் விடை எழுதுக.

✦ 1,2,3,4 ஆகிய வினாக்களிற்கும் 5,6,7 ஆம் வினாக்களில் யாதேனும் ஒரு வினாவுக்கும் விடை எழுதுக.

01 . சுருக்கமான விடை எழுதுக.

1. " கூனலிளம்பிறை முடித்த வேணியலங்காரர் குற்றால திரிகூட மலையெங்கள் நாடே.. "

அ. இங்கு வேணியலங்காரர் எனக் குறிக்கப்படும் கடவுள் யார்?

ஆ. கூனலிளம் பிறை என்பதன் விளக்கம் யாது?

2. " கோக்கள் வைகும் முற்றத்தான் முதல்தேவி... "

அ. இங்கு கோக்கள் வைகும் முற்றத்தை உடையவன் யார்?

ஆ. மேற்படி பாத்திரத்துடன் தொடர்புடைய இதிகாசம் எது?

3." ஐவராம் அவனி பார்க்கும் நினைவு ஏது என்று அருள் புரிந்தான் அமரர் கோமான் "

அ. இங்கு ஐவர் எனக் குறிப்பிடப்படுவோர் யாவர்?

ஆ. அமரர் கோமான் என குறிப்பிடுவது யாரை?

4. "அது மனை நம்மட ஊருக்க குடும்பத்துக்க, யாராவது மவுத்தாப் போறதுக்கு அடையாளம்.

அ. இக் கூற்று யாரால் யாருக்கு கூறப்பட்டது?

ஆ. மவுத்து என்பதன் கருத்து யாது?

5. " கழா அக்கால் பள்ளியள் வைத்தற்றால் சான்றோர்
குழாஅத்துப் பேதை புகல். "

அ. இக் குறள் இடம் பெற்றுள்ள அதிகாரம் யாது?

ஆ. இங்கு இடம் பெற்றுள்ள அணி யாது.?

6. " உயிருடன் சென்ற ஒருமகள் தன்னினுஞ்
செயிருடன் வந்தவிச் சேயிலை தன்னினும்.. "

அ. இங்கு செயிருடன் வந்த சேயிலை யார்?

ஆ. இக் கூற்று யாரால் யாரிடம் வினவப்பட்டது?

7. ."அற்றைத் திங்கள் அவ்வெண் நிலவில் எந்தையும் உடையோம் யாமே"

அ. இங்கு அற்றைத் திங்கள் குறித்து நிற்கும் பொருள் யாது?

ஆ. அற்றைத் திங்கள் எனும் நாடகத்தின் ஆசிரியர் யார்?

8." வெங்கட் பிறைக்கும் கரும்பிறைக்கும்
மெலிந்தம் பிறைக்கும் விழிவேலே."

அ. இங்கு வெங்கட் பிறை, கரும்பிறை எனக் குறிப்பிடப்படுபவை?

ஆ. இப் பாடலில் இடம்பெற்றுள்ள அணியினை குறிப்பிடுக.?

9. " செங்கமல வாள் விழியாள் சேர்க்க கருதுமுவன்.. "

அ. இப்பாடல் இடம்பெற்றுள்ள இலக்கியம் யாது?

ஆ. வாள்விழியாள் என்பதில் வந்துள்ள அணி யாது?

10. " பூத்த ஜோதி வதனம் திரும்புமேல் புலனழிந்தொரு புத்துயிர் எய்துவேன்.."

அ. இங்கு வதனம் என்பதன் பொருள்?

ஆ. இப் பாடலைப் பாடியவர்?

02. பின்வரும் செய்யுள்பகுதிகளையும் உரைநடைப்பகுதிகளையும் வாசித்து அவற்றின் கீழே தரப்பட்டுள்ள வினாக்களிற்கு விடை எழுதுக.

i. சுடு மயானத்திடை தன் துணை ஏக
தோன்றல் துயர்க் கடலில் ஏக
கடுமை ஆர் கானகத்துக் கருணை ஆர்கலி
ஏக, கழல்கால் மாயன்
நெடுமையால் அன்று அளந்த உலகு எல்லாம்
தன் மனத்தே நினைந்து செய்யும்
கொடுமையால், அளந்தாளை, "ஆர் இவர்?
என்று உரை" என்ன, குரசில் கூறும்

அ. இப்பாடல் இடம்பெறும் சந்தர்ப்பத்தினை விளக்குக.

ஆ. துயர்க் கடல், கருணை ஆர்கலி என்பவற்றில் உள்ள அணியை குறிப்பிட்டு விளக்குக.

ii. தண்டாமரையுடன் உடன்பிறந்தும்
தண்டேன் நுகரா மண்டூகம்
வண்டோ கானத் திடையிருந்து
வந்தே கமல மதுவுண்ணும்
பண்டே பழகி இருந்தாலும்
அறியார் புல்லர் நல்லோரைக்
கண்டே களித்தங் குறவாடித்
தம்மில் கலப்பார் கற்றோரே.

அ. அறிவுடையயோரதும், அறிவற்றவரதும் செயல் எவ்வாறு ஒப்பிடப்படுகிறது.

ஆ. மண்டூகம், புல்லர் என்பவற்றின் பொருள் யாது.

iii. மூத்தோன் இவை மற்று உரைப்ப இளையோன்
வெஞ்சினம் மனத்தில் மூளமூள
நாத்தோம் இல் உரை பதறக் கதுமென உற்று
எழுந்து இறைஞ்சி, ஞாலம் எல்லாம்
பூத்தோனே, பூந்தவிசில் பூவை புணர்
மணிமார்பா, புன்மை யாவும்
தீர்த்தோனே, ஊனம் இலான் மானம் இலாது
உரைப்பதற்கு என் செய்வது என்றான்.

அ. இப்பாடலில் கண்ணனின் பெருமைகள் எவ்வாறு வெளிப்படுகின்றன.

ஆ. வீமனது கோபம் வெளிப்படும் சந்தர்ப்பங்கள் எவை.

(மிகுதி நாளை தொடரும்)

# பொலிஸ் நிலையத்தில் தற்கொலை செய்து கொண்ட இளைஞனின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைப்பு

## போராட்டங்களுக்குத் தடை

(கொழும்பு)

**புசல்லாவ பொலிஸ் நிலையத்தில் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்ட இளைஞனின் சடலம் பிரேத பரிசோதனைகளின் பின்னர் உறவினர்களிடம் நேற்று ஒப்படைக்கப்பட்டுள்ளது.**

புசல்லாவ ரொத்சைல்ட் தோட்டத்தைச் சேர்ந்த 28 வயதுடைய நடராஜா ரவிச்சந்திரன் நீதிமன்ற பிடியாணையின் கீழ் புசல்லாவ பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்திருந்த போது கடந்த சனிக்கிழமை தற்கொலை செய்துகொண்டார்.

குறித்த நபர் தான் அடைக்கப்பட்டிருந்த கூண்டில் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டதாகவும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து பொலிஸ் நிலையத்தை சுற்றி வளைத்த பொதுமக்கள் தமது எதிர்ப்பை வெளியிட்டதால் நேற்று முன்தினம் அங்கு பதற்ற நிலை நீடித்தது.

இதனையடுத்து உடனடியாக இரு பொலிஸார் பணி நீக்கம் செய்யப்பட்டனர். எனினும் புசல்லாவ பொலிஸ் நிலையத்தில் உள்ள அனைத்து பொலிஸாரையும் இடமாற்ற வேண்டும் என பொது மக்கள் நேற்றுமுன்தினம் மாலை 3 மணிவரை கண்டி-நுவரெலியா வீதியில் புசல்லாவ பகுதியில் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

பிரேத பரிசோதனைக்கு பின்னர் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளதோடு உடல் நல்லடக்கம் செய்யும் முன்னரோ அல்லது அதற்கு பின்னரோ போராட்டங்கள் நடத்த முடியாது என நீதிமன்றத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (இ-7-10)

# அதிக இணையப் பயன்பாடு; இலங்கைக்கு 86வது இடம்

(கொழும்பு)

உலகளாவிய ரீதியில் இணையத்தைப் பயன்படுத்தும் நாடுகளின் பட்டியலில் இலங்கை முன்னேற்றம் கண்டுள்ளது.

உலக நாடுகளில் இணையம் பயன்படுத்துபவர்கள் தொடர்பில் வெளியான புதிய ஆய்வினை ஒப்பிடும் போதும, அதிக இணையப் பயன்பாட்டாளர்களை கொண்ட நாடுகளில் 86ஆவது இடம் இலங்கைக்கு கிடைத்துள்ளது. 196 நாடுகளிலேயே இலங்கைக்கு 86ஆவது இடம் கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நாட்டில் இணையத்துடன் இணைந்துள்ள நபர்களின் எண்ணிக்கை 19 வீதமாகும் கையடக்கத் தொலைபேசிகளில் இணையத்தை பயன்படுத்துபவர்களும் இந்த பட்டியலுக்குள் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

உலகின் நிலையான வீட்டு இணைய இணைப்புக்கள் உள்ள நாடுகளின் பட்டியலில இலங்கைக்கு 115ஆவது இடம கிடைத்துள்ளது.

இலங்கையிலுள்ள மக்கள் தொகையில் நூற்றுக்கு 3.1 வீதமானோர் நிலையான இணைய இணைப்பினை கொண்டுள்ள நிலையில் இந்த தகவல் வெளியாகியுள்ளது.

தொலைபேசி மூலம் இணையத்தளம் பயன்படுத்தும் எண்ணிக்கை 16 வீதமாகும். இதில் இலங்கைக்கு 135ஆவது இடம் கிடைத்துள்ளது.

உலகின் அதிகமாக இணையம் பயன்படுத்தும் நாடுகளில் முதல் இடத்தை தென்கொரியா பிடித்துள்ளது.

அங்கு 98 வீதம் இணையப்பயன்பாடு உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.(இ-7-10)

## ரூ.4கோடி பெறுமதியான தங்கம் நூதனமான முறையில் அபகரிப்பு

சுமார் 4 கோடி ரூபாய் பெறுமதியான தங்கத்தை மிகவும் சூட்சுமமான முறையில் அபகரித்து செல்லப்பட்ட சம்பவமொன்று புறக்கோட்டையில் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

புறக்கோட்டையில் உள்ள தங்க ஆபரணங்களை உற்பத்தி செய்யும் நிறுவனத்திலேயே இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

வெளிவிவகார அமைச்சின் பரிசோதகர்கள் என்று தங்களை இனங்காட்டிக் கொண்ட நால்வர் அங்கு வேலை செய்தவர்களின் கைகளுக்கு போலியான முறையில் கைவிலங்கிட்டு, தங்கத்தை அபகரித்து சென்றுள்ளனர்.

அவ்வாறு அபகரித்தவர்கள் தொடர்பில் மிகவும் முக்கியமான தகவல்கள் கிடைத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அதுமட்டுமன்றி அவர்களிடமிருந்து சுமார் ஒரு இலட்சம் ரூபாயையும் கடவுச்சீட்டுகளையும் அக்குழுவினர் அபகரித்துச்சென்றுள்ளனர்.

இந்தத் தங்க நகை ஆபரண பட்டறையில் வேலை செய்வோரில் பலர், இந்தியப் பிரஜைகள் என்று அறிய முடிகின்றது. (இ-7-10)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 838

f Search for people, places and things — Nagendram Home

சர்மி சர்மி




அகில்



கதிர்





உஷாந்தன்




ஜிவி




றொகான்



நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# புரட்டாதி மாத இராசிபலன்கள்

## 17.09.2016-16.10.2016

## பணப்புழக்கம் அதிகரிக்கும் நேரம்!



*கொள்கைப் பிடிப்போடு மட்டுமல்லாமல் கூடியிருப்பவர்களை தன்வசமாக்கிக் கொள்ளும் ஆற்றலைப் பெற்ற சிம்ம ராசி நேயர்களே!*

புரட்டாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்திலேயே உங்கள் ராசிநாதன் சூரியன் தன ஸ்தானத்திலும் தனாதிபதி புதன் உங்கள் ராசியிலும் சஞ்சரிக்க பரிவர்த்தனை யோகம் ஏற்படுகின்றது. யோகங்களில் மிகச் சிறந்த யோகம் பரிவர்த்தனை யோகமாகும். அந்த அடிப்படையில் இந்த மாதம் அற்புதமான பலன்களை அள்ளி வழங்கும் மாதமாகும். அதுமட்டுமல்லாமல் உங்கள் ராசிநாதனோடு குரு இணைந்து சஞ்சரிப்பதும் ஒரு யோகம் தான்.

சென்ற மாதத்தைக் காட்டிலும் இந்த மாதம் சிறப்பான மாதமாக அமையப் போகின்றது. செல்வநிலை உயரும். ஒரு தொழில் செய்வோர், இருதொழில் செய்யும் வாய்ப்பு உருவாகும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு அதிகாரிகளின் அனுகூலம் கிடைக்கும். வாகனங்களை வாங்கும் அமைப்பு உண்டு.

அர்த்தாஷ்டமச் சனியின் ஆதிக்கம் இருப்பதால் ஆரோக்கியத் தொல்லை மட்டும் அடிக்கடி ஏற்படலாம். பழைய மருத்துவத்தை மாற்றிப் புதிய மருத்துவத்தைப் பார்ப்பதன் மூலம் உடல் நலன் சீராகும். தாய் வழி ஆதரவு குறையலாம். பூர்வீக சொத்துக்களில் பலமுறை பஞ்சாயத்துக்கள் வைத்தும் முடிவடையாத சூழ்நிலை ஏற்படலாம். ஜென்ம ராசியில் ராகுவும் சப்தம ஸ்தானத்தில் கேதுவும் சஞ்சரிப்பதால் நாக சாந்திப் பரிகாரங்களை யோகபலம் பெற்ற நாளில் செய்வது நல்லது.

மாதத் தொடக்கத்தில் குடும்ப ஸ்தானத்தில் 3 கிரகங்கள் முற்றுகையிட்டு இருக்கின்றன. இதுபோன்ற காலங்களில் பெண் தெய்வ வழிபாட்டில் அக்கறை செலுத்துவது நல்லது. இந்த மாதம் நவராத்திரி விழா வருகின்றது. 9 நாட்களும் உங்கள் முன்னேற்றத்திற்கு உறுதுணையாக இருக்கும் அம்பிகையை வழிபாடு செய்வது நல்லது. உத்தியோகத்தில் உள்ளவர்கள் வி.ஆர்.எஸ் பெற்றுக் கொண்டு சுயதொழில் செய்யும் சூழ்நிலை அமையலாம்.

**சுகம் தரும் சுக்ரப் பெயர்ச்சி!**

செப்டெம்பர் 19ஆம் திகதி துலாம் ராசிக்கு சுக்ரன் செல்கின்றார். சகாய ஸ்தானாதிபதி சகாய ஸ்தானத்திற்குச் செல்வது யோகம் தான். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். சகோதர வர்க்கத்தினரால் ஏற்பட்ட சண்டை சச்சரவுகள் அகலும். தங்கம், வெள்ளி, ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு. பெண்களின் சுபச்சடங்குகள் இல்லத்தில் நடைபெறலாம். பணி நீக்கத்தில் உள்ளவர்களுக்கு மீண்டும் பணி கிடைக்கலாம்.

**உச்ச புதனின் சஞ்சாரம்!**

ஒக்டோபர் 4ஆம் திகதி கன்னி ராசியில் புதன் உச்சம் பெறுகின்றார். தனாதிபதி தனஸ்தானத்தில் உச்சம் பெறும் பொழுது பணபபுழக்கம் அதிகரிக்கும். உத்தியோகம் பார்ப்பவர்களுக்கு ஊதிய உயர்வும் உதிரி வருமானங்களும் கிடைக்கும்.




தொழில் செய்பவர்களுக்கு கிளைத்தொழில் தொடங்கும் வாய்ப்பும், இருமடங்கு லாபமும் வந்து சேரும். மாமன், மைத்துனர் வழியில் உறவுகள் புதுப்பிக்கப்பெறும். கல்யாண யோகம் கைகூடும். நீண்ட நாள் வழக்குகள் சாதகமாக முடியும்.

**விருச்சிக சுக்ரனின் சஞ்சாரம்!**

ஒக்டோபர் 14ஆம் திகதி விருச்சிக ராசிக்குச் சுக்ரன் செல்கின்றார். 3, 10இறகு அதிபதி சுக ஸ்தானத்திற்கு செல்லும் பொழுது விடா முயற்சிக்கு வெற்றி கிடைக்கும். சொத்துக்களால் லாபம் உண்டு. புதிய வாக னங்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். தொழில் நிலையத்தை விரிவுபடுத்தி கட்டும் எண்ணம் நிறைவேறும். தூர தேசத்திலிருந்து நல்ல தகவல் வந்து சேரும். ஆரோக்கியத் தொல்லை அகலும். ஆதாயம் அதிகரிக்கும் நேரமிது. இம்மாதம் ஜென் மத்தில் ராகுவும், 7இல் கேதுவும் இருப்பதால் ராகு-கேது வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். சனிக்கிழமை விரதமும் அனுமன் வழிபாடும் சந் தோஷத்தை வழங்கும்.

**பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!**

இம்மாதம் குருச்சந்திர யோகத்தோடு மாதம் பிறப்பதால் குடும்ப முன்னேற்றம் கூடும். கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும். குழந்தைகளுக்கான மங்கள நிகழ்ச்சிகள் நடத்துவதில் இருந்த தடை அகலும். கணவன் - மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். பிள்ளைகளின் எதிர்கால நலன் கருதி எடுத்த முயற்சியில் அனுகூலங்கள் உண்டு. சுக்ரப் பெயர்ச்சிக்குப் பிறகு ஆபரணங்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். சொதது்க்கள் வாங்க, விற்க உகந்த நேரமிது.

அரசியல் மற்றும் பொதுநலத்தில் இருப்பவர்களுக்கு நல்ல பொறுப்புகள் கிடைக்கும். பராசக்தி வழிபாடு பண வரவைப் பெருக்கும்.

பணத்தேவையைப் பூர்த்தி
செய்யும் நாட்கள் :
செப்டெம்பர்: 19, 20, 24, 25, 30
ஒக்டோபர்: 1, 5, 6, 7

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்

## மாற்றங்களால் ஏற்றம் பெறும் நேரம்!



*எதிலும் ஒரு புதுமையைக் கையாள வேண்டுமென்று நினைக்கும் கன்னி ராசி நேயர்களே!*

புரட்டாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது உங்கள் ராசிநாதன் புதன் விரய ஸ்தானத்தில் ராகுவோடு இணைந்திருக்கின்றார். எனவே, எண்ணற்ற மாற்றங்கள் இம்மாதம் வரப்போகின்றது. ஒரு சிலருக்குத் தானாக வரும் இடமாற்றம் திருப்தி அளிக்காமல் போகலாம். வீணான செலவு செய்து விட்டோமே என்று கவலைப் படுவீர்கள்.

எல்லாவற்றிற்கும் ஜென்ம குருதான் காரணமாக விளங்குகின்றது. 4, 7 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் குரு பகவான். வாகனம், தாய், சுகம், வீடு, களஸ்திரம் ஆகியவற்றைக் குறிக்கும் இடங்களுக்கு அதிபதியானவர் குரு. அவர் வலிமை இழந்திருக்கும் நேரமிது. எனவே தாய்வழி ஆதரவு குறையும். விரோதங்கள் வளரலாம். பெற்றோர்களின் உடல் நலம் கருதி ஒரு தொகையைச் செலவிடுவீர்கள். வாகனப் பழுதுகள் அதிகரிக்கலாம்.

இப்படிப்பட்ட சூழ்நிலையை உருவாக்கும் விதத்தில் கிரகங்களின் சஞ்சாரம் அமைய இம்மாதம் பிறப்பதால் குலதெய்வ வழிபாடு முதல் குரு வழிபாடு வரை முறையாக வழிபட்டு முன்னேற்றத்தை வரவழைத்துக் கொள்ள வேண்டிய நேரமிது. திடீர் இடமாற்றம், வீடு மாற்றம், நாடு மாற்றங்கள் கூட ஒரு சிலருக்கு உருவாகலாம். வரும் மாற்றங்கள் ஏற்றம் தரும் விதத்தில் அமையும் என்றாலும் திசா புத்தி பலமிழந்திருப்பவர்களுக்கு ஏமாற்றம் தரும் விதத்திலும் அமையலாம்.

தனாதிபதி சுக்ரனோடு மாதத் தொடக்கத்தில் நீச்சம் பெற்றுவிட்டார். எனவே பண நெருக்கடியும் கூடுதலாகவே இருக்கும். ஒருதொகை செலவழிந்த பிறகே அடுத்த தொகை கரங்களில் புரளும். எனவே, இம்மாதம் பெண் தெய்வ வழிபாட்டில் கவனம் செலுத்துங்கள்.

**சுகம் தரும் சுக்ரப் பெயர்ச்சி!**

செப்டெம்பர் 19ஆம் திகதி துலாம் ராசிக்கு சுக்ரன் செல்கின்றார். சுக்ரன் தன் சொந்த வீட்டில் பலம்பெறும் நேரம் ஒரு யோகமான நேரமாகும். 2, 9இற்கு அதிபதியானவர் பலம்பெறும் பொழுது, எண்ணங்கள் நிறைவேறும். இல்லம் கட்டிக் குடியேறும் ஆசை உருவாகும். வள்ளல்களின் ஒத்துழைப்போடு வருங்காலத்தை அமைத்துக் கொள்வீர்கள். இல்லை என்று சொல்பவர்களுக்கு கொடுத்து உதவும் குணம் பிறக்கும். நல்ல மனிதர்களின் தொடர்பால் நகையும் வாங்குவீர்கள். தொகையும் திருப்திகரமாக வந்து சேரும்.

**பொன்னான புதனின் பெயர்ச்சி!**

ஒக்டோபர் 4ஆம் திகதி புதன் உச்சம் பெறப்போகின்றார். புதன் உங்கள் ராசியிலேயே உச்சம் பெறுவது யோகம் தான். கடன் சுமை குறையும். கவலைகள் தீரும்.




மாமன், மைத்துனர் வழியில் ஏற்பட்ட மனக்கலக்கம் அகலும். சேமிப்புகள் உயரும். பூமி வாங்கும் யோகம் முதல் புதிய வாகனம் வாங்கும் யோகம் வரை சிந்திப்பீர்கள். புதன் சூரியனுடன் இணைந்திருப்பதால் அரசியலில் உள்ளவர்களுக்கு புதிய பொறுப்புகள் கிடைக்கும்.

**விருச்சிக சுக்ரனின் சஞ்சாரம்!**

விருச்சிக ராசிக்கு ஒக்டோபர் 16ஆம் திகதி சுக்ரன் செல்லவிருக்கின்றார். தனாதிபதி சகாய ஸ்தானத்திற்கு செல்லும் நேரம் நல்ல நேரம்தான். பணத்தட்டுப்பாடுகள் அகலும். பாக்கிகள் வசூலாகிப் பரவசப்படுத்தும். ஓங்கிக் குரல்கொடுத்த உடன்பிறப்புகள் இனி தேன்போல பேசி ஒற்றுமைக்கு வித்திடுவர். சகோதர வர்க்கத்தினரின் இல்லங்களில் நடைபெறும் மங்கள நிகழ்வுகளை முன்னின்று நடத்துவீர்கள். வழக்குகள் சாதகமாக முடியும். பழைய ஆபரணங்களை கொடுத்து விட்டுப் புதிய ஆபரணங்களை வாங்க முற்படுவீர்கள். இம்மாதம் சனிக்கிழமை தோறும் விரதமிருந்து ஆதியந்தப் பிரபுவை வழிபட்டு வருவது நல்லது.

**பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!**

வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும் மாதமாகும். விரயங்கள் கூடுதலாக இருக்கும் என்பதால் சுபவிரயங்களை மேற்கொள்ளுங்கள். வீட்டிற்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களை வாங்கலாம், குழந்தைகளின் கல்யாண சீர்வரிசைப் பொருட்களையும் வாங்குவது நல்லது. கணவன்-மனைவிக்குள் நெருக்கம் அதிகரிக்கும். விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்து சேருவர். பிள்ளைகளின் பாசமழையில் நனைவீர்கள். அவர்களின் பணி நிரந்தரம் பற்றிய மகிழ்ச்சி தரும் தகவல் வரும்.

உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு ஊதிய உயர்வு கிடைக்கும். புரட்டாதி சனிக்கிழமை விரதமிருந்து வணங்குங்கள். அன்னை பராசக்தி வழிபாடு அனைத்து நலன்களையும் கொடுக்கும்.

பணத்தேவையைப் பூர்த்தி
செய்யும் நாட்கள் :
செப்டெம்பர்: 22, 23, 26, 27
ஒக்டோபர்: 2, 3, 8, 9

(தொடரும்)

# இடம்பெயர்ந்த அனைவரும் வாக்காளர்களாக இணைவர்

## மகிந்த தேசப்பிரிய தெரிவிப்பு



(கொழும்பு)

**வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சொந்த இடங்களில் இருந்து இடம்பெயர்ந்து முகாம்களில் வாழ்ந்து வரும் அனைவரும் வாக்காளர் இடாப்பில் சேர்த்துக் கொள்ளப்படுவர் என்று தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.**

இடம்பெயர்ந்த மக்களுக்கு வாக்குரிமை மறுக்கப்பட்டுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சுமத்திய குற்றச்சாட்டு தொடர்பாக, கருத்து வெளியிட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

போர் காரணமாக பாதிக்கப்பட்டு வடக்கு, கிழக்கு மாகாணங்களின் இடம்பெயர்ந்தோர் முகாம்களில் தங்கியிருக்கும் அனைவரும் வாக்காளர் இடாப்பில் உள்ளடக்கப்படுவர்.

தகுதி உடைய அனைவரினதும் வாக்குரிமையை உறுதி செய்ய வேண்டியது தேர்தல் ஆணைக்குழுவின் கடமையாகும்.

மத்திய மலைநாட்டின் பெருந்தோட்டப் பகுதிகளில் வாழ்ந்து வரும் மக்கள், குறவர்கள் மற்றும் வீதிகளில் வாழ்ந்து வரும் தரப்பினர் ஆகியோருக்கும் வாக்குரிமையை உறுதிசெய்ய விசேட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

ஆதிவாசிகள் பலரின் பெயர்கள் வாக்காளர் இடாப்பில் உள்ளடக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டு குறித்து விசாரணை நடத்தப்பட்டு, உள்ளடக்கப்படாத பெயர்களை சேர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என மகிந்த தேசப்பிரிய மேலும் தெரிவித்துள்ளார். (இ-7-10)

# இராணுவ மேஜரைக் காப்பாற்ற போதியளவு நிதி கிடைக்கவில்லை

## மகிந்த அணி வருத்தம்

பருத்தித்துறையில் விடுதலைப் புலிகள் இயக்க சந்தேக நபர் ஒருவரைச் சுட்டுக் கொன்ற வழக்கில் தண்டனை விதிக்கப்பட்ட மேஜர் விமல் விக்ரமகேவை காப்பாற்றும் நோக்கில், கூட்டு எதிரணி ஆரம்பித்த நிதியத்துக்கு போதிய நிதி கிடைக்கவில்லை என்பதை முன்னாள் அமைச்சர் பந்துல குணவர்த்தன உறுதிப்படுத்தியுள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலி உறுப்பினர் ஒருவரை சுட்டுக் கொன்றமைக்காக மேஜர் விமல்விக்ரமகேவிற்கு அண்மையில் ஒத்தி வைக்கப்பட்ட சிறைத்தண்டனையும் உயிரிழந்தவரின் குடும்பத்திற்கு இருபது இலட்சம் ரூபா நட்டஈடும் வழங்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

நட்டஈட்டை செலுத்தத் தவறினால் சிறைத் தண்டனை விதிக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து குறித்த படைவீரரை பாதுகாக்கும் நோக்கில் கூட்டு எதிர்க் கட்சியினர் மேஜர் விமல் விக்ரமகே என்ற பெயரிலேயே நிதியம் ஒன்றை ஆரம்பித்து பணம் திரட்டினர்.

இருபது இலட்சம் ரூபா நிதி திரட்டும் நோக்கில் இந்த நிதியம் ஆரம்பிக்கப்பட்டது.



இந்த நிதியம் ஆரம்பிக்கப்பட்டு ஒருவாரத்துக்கு மேலாகியும், 10 இலட்சம் ரூபா நிதியே திரட்டப்பட்டுள்ளதாக கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

அடுத்த இரண்டு வாரங்களில் மிகுதி பத்து இலட்சம் ரூபாவினை திரட்ட முடியும் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இதற்காக கொடை வழங்குவதில் பொதுமக்களுக்கு மிகுந்த ஆர்வம் காணப்படுகின்றது எனவும், கொழும்பைத் தவிர வேறு மாவட்டங்களிலும் ஜப்பான், கொரியா போன்ற நாடுகளில் வாழும் இலங்கையர்களும் இந்த நிதியத்திற்கு உதவி வழங்க முன்வந்துள்ளனர் எனவும் அவர் ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார். (இ-7-10)

# புகையிரத அனுமதிச்சீட்டுகளுக்கு பதிலாக இலத்திரனியல் அனுமதிச்சீட்டு விரைவில்

தற்போது நடைமுறையிலுள்ள புகையிரத அனுமதிச்சீட்டுகளுக்குப் பதிலாக இலத்திரனியல் அனுமதிச்சீட்டினை அறிமுகப்படுத்த இலங்கை புகையிரத திணைக்களம் தயாராகி வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் புகையிரத நிலையங்களின் சேவைகளை இலகுவாக்க முடியும் என புகையிரத பொது நிர்வாக அதிகாரி ஏ.பீ.ஆரியரத்ன தெரிவித்துள்ளார்.

குறித்த இலத்திரனியல் அனுமதிச் சீட்டுகளின் நிமித்தம் புகையிரத நிலையங்களுக்கு இரண்டு இயந்திரங்கள் வீதம் வழங்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இதன் ஒரு இயந்திரம் புகையிரத நிலையங்களின் அலுவலகங்கள் ஊடாக பயணிகளுக்கு அனுமதிச் சீட்டுகளை வழங்கவும் மற்றைய இயந்திரம் பயணிகள் தாமாகவே பணத்தினை செலுத்தி அனுமதிச்சீட்டுகளைப் பெறுவதற்காக வழங்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இன்னும் 6 மாதங்களுக்குள் இந்த புதிய திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை தற்போது நடைமுறையிலுள்ள அனுமதிச் சீட்டுகளினால் புகையிரத நிலையங்களுக்கு கிடைக்கும் வருமானங்களை கணக்கிடுவதற்கு ஒரு மாதத்திற்கு மேலான காலம் எடுப்பதாகவும், குறித்த இலத்திரனியல் இயந்திரப் பாவனையால் அது இலகுவாக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# ரத்துகுல ஆதிவாசிகளின் கடவுள் மகிந்த

தமது ஆதிவாசிகள் இனத்திற்கு மகிந்த செய்த உதவியின் காரணமாக அவர் தமது இனத்திற்கு கடவுள் என ரத்துகுல ஆதிவாசிகளின் தலைவர் சுதா வன்னியல எத்தோ தெரிவித்துள்ளார்.

தமது ஆதிவாசிகள் இனத்திற்கு எந்தப் பிரச்சினைகள் இருந்தாலும் மகிந்தவை சந்தித்துகதைத்தால் அதற்கு அவர் உடனடித் தீர்வைப் பெற்றுத் தந்ததாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

ஆனால் தற்போதுள்ள ஆட்சியாளர்களை சந்திப்பதற்கோ அல்லது தமது ஆதிவாசிகளின் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்வதற்கோ எவரும் இல்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

நாம் இருக்க வீடு இன்றி, மின்சாரம் இன்றி வாழ்ந்த போது கடவுளாக வந்தவரே முன்னாள் ஜனாதிபதி மகிந்த என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் தற்போதைய பிரதமர், ஜனாதிபதியாரென்றே தமது இனத்திற்கு தெரியாதுள்ளதாகவும், வெறுமனே அவர்களுடைய பெயர்களை மாத்திரமே கேட்டுள்ளதாகவும், தமது பிரச்சினைகள் தொடர்பில் அவர்களை சந்திக்க தமக்கு அனுமதி வழங்கப்படுவதில்லை என்றும் ரத்துகுல ஆதிவாசிகளின் தலைவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7-10)

# மென்பானங்களால் சிறுவர்களுக்கு நீரிழிவு நோய் ஏற்படும் அபாயம்

(கொழும்பு)

மென்பானங்களால் சிறுவர்களுக்கு நீரிழிவு நோய் அதிகரிக்கும் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

சிறு குழந்தைகளுக்கு தேவையான சீனியின் அளவை விட இரண்டு மடங்கு சீனியின் அளவு குறித்த மென்பானங்களில் அடங்கியுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே தினமும் இந்த மென்பானங்களை அருந்தும் சிறுவர்கள் மிக விரைவில் நீரிழிவு நோய்க்கு உள்ளாவதாக சுகாதார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

மேலும் குழந்தை ஒன்றுக்கு ஒரு நாளைக்கு 4 தேக்கரண்டி சீனியின் அளவு தேவைப்படும் நிலையில் குறித்த மென்பானங்களில் 9 தேக்கரண்டி சீனி உள்ளடக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

எனவே இந்த நிலையினை கருத்திற் கொண்டே நீரிழிவு நோயாளிகளின் எண்ணிக்கையினை குறைப்பதன் நிமித்தம் கடந்த மாதம் முதலாம் திகதி முதல் மென்பானங்களில் அடங்கியுள்ள சீனியின் அளவைக் குறிக்கும் வகையில் மென்பான போத்தல்களின் நிறங்களை காட்சிப்படுத்தும் முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய மென்பானங்களை கொள்வனவு செய்பவர்கள் சீனியின் அளவு தொடர்பாக தெளிவினைப் பெற்றுக்கொள்வதாகவும் அவர் தெரிவித்தார். (இ-7-10)

# மீனவ சங்கப் பிரதிநிதிகள் நேற்று தென்மராட்சியில் ஆர்ப்பாட்டம்



(யாழ்ப்பாணம்)

யாழ்.தென்மராட்சி பிரதேச செயலகத்தில் ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம். நேற்று 19 ஆம் திகதி நடைபெற்ற வேளை தென்மராட்சி மீனவ சங்கப் பிரதிநிதிகள் கூட்ட மண்டபத்திற்கு வெளியே ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தென்மராட்சி பிரதேசத்துக்குட்பட்ட அறுகுவெளியில் அமைக்கப்பட உள்ள உப்பளத் திட்டத்தினால் தமது மீன்வளம் பாதிக்கப்படுமென சம்பந்தப்பட்ட பல்வேறு தரப்பினருடனும் கலந்துரையாடல்கள் நடைபெற்ற பின்னரும் உப்பளம் அமைப்பதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் நடைபெற்றதாகவும் தாம் அதனை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்ததாகவும் சாவகச்சேரி மீனவர் சங்கத்தலைவர் தெரிவித்தார். இதேவேளை தென்மராட்சி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் அறுகுவெளி உப்பளத்திட்டம் ஒரு வாரத்திற்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (இ-89)

# பொலிஸ் நிலையங்களுக்கும் சிறைச்சாலைகளுக்கும் கமரா

அடுத்த வருடம் முதல் அனைத்து சிறைச்சாலைகளிலும் சீ.சீ.ரி.வி. கமரா பொருத்தப்படவுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

குறித்த சீ.சீ.ரி.வி. கமராக்கள் மஹர மற்றும் களுத்துறை சிறைச்சாலைகளிலேயே முதன்முதல் பொருத்தப்படவுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்கள ஆணையாளர் ஜெனரல் நிசான் தனசிங்க தெரிவித்துள்ளார்.

மேலும் நாட்டில் உள்ள அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் சீ.சீ.ரி.வி. கமரா பொருத்த திட்டமிட்டுள்ளதாகவும் இது தொடர்பில் பொலிஸ்மா அதிபருக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளதாகவும் சட்ட ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்நாயக்க தெரிவித்துள்ளார். (இ-7-10)

# மாணிக்கக் கல் அகழ்ந்த அறுவர் கைது

பொகவந்தலாவ பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மாவெலி காட்டுப் பகுதியில் சட்டவிரோதமான முறையில் மாணிக்கக் கல் அகழ்ந்து கொண்டிருந்த அறுவர் கைது செய்யப்பட்டுள்ளனர். கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலின்படி நேற்று முன்தினம் இரவு பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்புக்களின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து மாணிக்கக்கல் அகழ்விற்கு பயன்படுத்திய பல உபகரணங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன. (இ-7-10)

# எத்தகைய தாக்குதலையும் சந்திக்கத் தயார்-வடகொரியா




வடகொரியாவுக்கு எதிராக எதிரிகள் மேற்கொள்ளும் எந்தவித தாக்குதல்களையும் எதிர்கொள்வதற்கு தாம் தயாராக இருப்பதாக வடகொரிய மக்கள் சபைத் தலைவர் கிம்யாங் உன் சவால்விட்டுள்ளார். வெனிசூலாவின் ஜலா மார்கரிட்டாவில் இடம்பெற்ற 17ஆவது அணிசேரா உச்சிமா நாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும் பொழுதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் அங்கு மேலும் குறிப்பிடுகையில், 'வடகொரியா குறித்த தனது கொள்கைகளை அமெரிக்கா மாற்றிக்கொள்ள வேண்டும் என்று மீண்டும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சமாதான உடன்படிக்கை மூலம் வடகொரியாவை கட்டுப்படுத்துவதற்கு அமெரிக்காவால் முடியாமல் போனது. எனவே. அவர்கள் அதிகாரத்தின்மூலம் எம்மை அடக்குவதற்கு முயற்சிக்கின்றனர். என்னும், எமது எதிரிகளின் தாக்குதல்களை எதிர்த்து செயற்படுவதற்கு வடகொரியா தயாராகவே உள்ளது' என்று அவர் தெரிவித்தார்.

வடகொரியா கடந்த வாரம் சக்தி வாய்ந்த அணுகுண்டு சோதனையை நடத்தியிருந்தது. இதற்கு அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் கண்டனம் தெரிவித்திருந்தன. இதைத் தொடர்ந்து வடகொரியாவை அச்சுறுத்தும் விதத்தில் அந்நாட்டிற்கருகில் அமெரிக்க போர் விமானங்கள் பறந்தன. இந்நிலையிலேயே கிம் யாங் உன் இந்த தகவலை தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

## 09.2016 20 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1187 - சலாதின் ஜெருசலேம் மீதான தாக்குதலை ஆரம்பித்தான்.
- 1519 - பேர்டினண்ட் மகலன் 270 பேருடன் ஸ்பெயின் நாட்டின் சான்லூகர் டி பரமேடா என்ற இடத்தில் இருந்து உலகைச் சுற்றி வரப் புறப்பட்டார்.
- 1633 - சூரியனைப் பூமியைச் சுற்றுவதாகத் தெரிவித்த கலிலியோ கலிலி கத்தோலிக்க மதகுரு மாடத்தின் முன்னால் விசாரிக்கப்பட்டார்.
- 1697 - ஒன்பதாண்டுப் போரை (1688-1697) முடிவுக்குக் கொண்டுவரும் பொருட்டு பிரான்ஸ், இங்கிலாந்து, ஸ்பெயின், புனித ரோமப் பேரரசு டச்சுக் குடியரசு ஆகியவற்றிற்கிடையில் அமைதி உடன்பாடு எட்டப்பட்டது.
- 1847 - நீலப் பென்னி அஞ்சல் தலையை பிரித்தானியா மொரீசியசில் வெளியிட்டது.
- 1854 - பிரித்தானியா மற்றும் பிரெஞ்சுப் படையினர் கிரிமியாவில் இடம்பெற்ற போரில் ரஷ்யர்களைத் தோற்கடித்தனர்.
- 1857 - கிழக்கிந்தியக் கம்பனிக்கு விசுவாசமான படைகள் டெல்லியைக் கைபபற்றினர். சிப்பாய் எழுச்சி முடிவுக்கு வந்தது.
- 1878 - த ஹிண்டு இதழ் வெளியிட ஆரமபிக்கப்பட்டது.
- 1932 - மகாத்மா காந்தி பூனே சிறையில் உண்ணாநோன்பை ஆரம்பித்தார்.
- 1942 - உக்ரேனில் நாசி ஜேர்மனியர்கள் இரண்டு நாட்களில் மொத்தம் 3,000 யூதர்களைக் கொன்றனர்.
- 1945 - மகாத்மா காந்தியும் ஜவகர்லால் நேருவும் பிரித்தானியப் படைகளை வெளியேறக் கோரினர்.
- 1966 - சேர்வெயர் 2 விண்கலம் சந்திரனை நோக்கிச் செலுத்தப்பட்டது.
- 1976 - துருக்கியில் விமானம் ஒன்று வீழ்ந்ததில் அதில் பயணம் செய்த அனைத்து 155 பேரும் கொல்லப்பட்டனர்.
- 1977 - வடக்கு வியட்நாம் ஐநாவில் இணைந.தது.
- 1979 - மத்திய ஆபிரிக்கக் குடியரசில் இடம்பெற்ற இராணுவப் புரட்சியை அடுத்து பேரரசன் முதலாம் பொக்காசா பதவியில் இருந்து அகற்றப்பட்டார்.
- 1984 - லெபனானில் பெய்ரூட் நகரில் அமெரிக்க தூதரகத்தின் மீது நடத்தப்பட்ட தானுந்துத் தற்கொலைத் தாக்குதலில் 22 பேர் கொல்லப்பட்டனர்.
- 1990 - தெற்கு ஒசேத்தியா ஜோர்ஜியாவிடம் இருந்து விடுதலையை அறிவித்தது. எந்த நாடும் அங்கீகரிக்கவில்லை.
- 1993 - துருவ செயற்கைக்கோள் ஏவுகணையை இந்தியா ஏவியது.

பிறப்புக்கள்

- 1924 - அ. நாகேஸ்வர ராவ், தென்னிந்தியத் திரைப்பட நடிகர் (இ. 2014)
- 1940 - டாரோ ஆசோ, சப்பானிய அரசியலவாதி
- 1946 - மார்க்கண்டேய கட்சு, இந்திய நீதிபதி
- 1948 - ஜார்ஜ் ஆர். ஆர். மார்ட்டின், அமெரிக்கத் திரைப்படத் தயாரிப்பாளர், எழுத்தாளர்

இறப்புகள

- 1933 - அன்னி பெசண்ட், பெண் விடுதலைக்குப் போராடியவர். (பி. 1847)
- 1996 - பால் ஏர்டோசு, அங்கேரி நாட்டுக் கணிதவியலாளர் . (பி. 1913)
- 2011 - புர்ஹானுத்தீன் ரப்பானி, ஆப்கானித்தானின் 10வது அரசுத்தலைவர். (பி. 1940)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 50 | 55 | 60 | 50 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 95 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 80 | 100 | 100 | 100 | 100 |
| தக்காளி | 50 | 50 | 40 | 50 | 50 |
| மரவள்ளிக்கிழங்கு | 70 | 50 | 70 | 80 | 80 |
| கோவா | 80 | 50 | 55 | 80 | 80 |
| கரட் | 80 | 50 | 70 | 110 | 100 |
| பூசணி | 40 | 20 | 25 | 40 | 40 |
| புபோல் | 50 | 20 | 30 | 40 | 50 |
| வாழைக்காய் | 100 | 50 | 60 | 80 | 70 |
| சின்ன வெங்காயம் | 80 | 100 | 90 | 100 | 80 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 80 | 100 | 100 |
| பாகற்காய் | 80 | 100 | 60 | 120 | 100 |
| வெண்டிக்காய் | 100 | 40 | 40 | 80 | 80 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | – | 120 | 100 |
| பயற்றங்காய் | 50 | 20 | 20 | 50 | 50 |
| லீக்ஸ் | 140 | 100 | 85 | 120 | 120 |
| பீற்றூட் | 50 | 20 | 30 | 50 | 40 |
| கறிமிளகாய் | 120 | 100 | 90 | 120 | 100 |
| முருங்கைக்காய் | 100 | 200 | 130 | 160 | 180 |
| போஞ்சி | 160 | 200 | 140 | 180 | 160 |
| கத்தரிதம்புள்ள | 30 | 20 | 30 | 50 | 50 |
| கீரை - 1பிடி | 40 | 10 | 25 | 30 | 30 |
| தேசிக்காய் | 260 | 300 | 200 | 240 | 180 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 50 | 15-30 | 40 | 40 |
| இராசவள்ளி | – | – | – | – | 160 |
| வெங்காயப்பூ | 60 | – | – | 140 | 180 |
| முள்ளங்கி | 60 | – | 25 | 40 | 50 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 10 | 30 | 25 |
| வல்லாரை | 10 | 20 | 10 | 10 | 15 |
| ஈரப்பலா | 50 | 60 | 30 | – | – |

# தமிழ் சினிமா வரலாறு

## சொந்தப்படம் தயாரித்ததால் தகராறு; ஜெமினியைப் பிரிந்தார் சாவித்திரி!

254

டைரக்ஷனில் வெற்றி பெற வேண்டும் சுப்பர் கிட் படத்தை கொடுக்க வேண்டும் என்ற வெறி சாவித்திரிக்கு ஏற்பட்டது.

பிராப்தம்

தமிழில் குமுதம், எல்லாம் உனக்காக ஆகிய படங்களை டைரக்ட் செய்த ஏ.சுப்பாராவ், தெலுங்கில் மிகப்பெரிய டைரக்டராக விளங்கினார். அவர் டைரக்ட் செய்த "மூக மனசுல" (ஊமை உள்ளங்கள்) என்ற தெலுங்குப்படம் ஆந்திராவில் 25 வாரங்களுக்கு மேல் ஓடி மகத்தான வெற்றி பெற்றது. இது பூர்வ ஜென்மம் பற்றிய கதை. நாகேஸ்வரராவ் கதாநாயகனாவும் சாவித்திரி கதாநாயகியாகவும் நடித்தனர்.

இதைத் தமிழில் தயாரிக்க சாவித்திரி விரும்பினார். அதற்கான உரிமையைப் பெற்றார்.

தமிழ்ப்பதிப்பில் தானும் ஜெமினிகணேசனும் ஜோடியாக நடிக்க வேண்டும் என்பது சாவித்திரியின் விருப்பம். அதன் பேரில் "மூக மனசுல" படத்தை ஜெமினி கணேசன் பார்த்தார்.

பூர்வ ஜென்மத்தில் காதல் நிறைவேறாமல் இறந்து போகும் ஒரு இளைஞன் மறு ஜென்மத்தில் கோதாவரி ஆற்றில் படகோட்டிப் பிழைக்கும் ஏழையாக பிறக்கின்றான். போன ஜென்மக்காதலி இந்த ஜென்மத்தில் ஜமீந்தார் வீட்டுப்பெண்ணாக பிறக்கிறாள் அவள். அந்தப் படகில் பயணம் செய்வது வழக்கம்.

ஆரம்பத்தில் "டேய், வாடா, போடா "என்று படகோட்டியை அழைத்தாலும் நாட்கள் செல்லச் செல்ல அவனிடம் மனதை பறி கொடுக்கிறாள்.

இப்படிச் சொல்லும் மூகமனசுல கதை ஜெமினிகணேசனைக் கவரவில்லை. "இந்தப் படம் தெலுங்கில் வெற்றிகரமாக ஓடினாலும் தழிழில் ஓடாது. நீ என்னைப் பார்த்து டேய் போடா வாடா என்று கூறினால் ர்சிகர்கள் ஏற்கமாட்டார்கள். எனவே இந்தப் படத்தை சொந்தமாகத் தயாரிக்க வேண்டாம். விஷப்பரீட்சை" என்றார்.

ஆனால் ஜெமினி சொன்னதை சாவித்திரி ஏற்கவில்லை. விதி அவர் கண்ணை மறைத்தது. "மூகமனசுல" கதையை "பிராப்தம்" என்ற பெயரில் சொந்தமாக தயாரிப்பது என்றும் அதைத்தானே டைரக்ட் செய்வது என்று முடிவு செய்தார்.

சிவாஜி கணேசனுக்கு போன் செய்தார். "அண்ணே பிராப்தம் என்ற பெயரில் படம் எடுக்கப் போகின்றேன். நீங்கள் தான் ஹீரோவாக நடிக்கவேண்டும் "என்று கேட்டுக்கோண்டார். சாவித்திரி படம் எடுப்பதை ஜெமினி விரும்பவில்லை என்பது சிவாஜிக்கு அப்போது தெரியாது. எனவே நடிப்பதற்கு ஒப்புக் கொண்டார்

தெலுங்குப்படம் தயாரிக்கப்பட்ட அதே கோதாவரிக் கரையில் தமிழ்ப்படத்தையும் தயாரிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தார் சாவித்திரி.

"வெளியே போ"

ஜெமினிக்கும் சாவித்திரிக்கும் ஏற்பட்ட மனஸ்தாபம் பெரிய மோதலாக மாறியது. அமைதியாகச் சென்று கொண்டிருந்த அவர்கள் வாழ்க்கையில் புயல் வீசியது.



உயிருக்கு உயிராய் நேசித்த காலத்தில் ஜெமினி – சாவித்திரி.

ஒருநாள் இருவருக்கும் இடையே ஏற்பட்ட வாக்குவாதம் முற்றியபோது சாவித்திரி நிதானம் இழந்தார். வீட்டை விட்டு வெளியேறும் படி கூக்குரலிட்டார். சிலையாகி நின்ற ஜெமினி கண்ணீருடன் வீட்டை விட்டு வெளியேறினார்.

தெய்வீகக் காதலர்கள் போல் வாழ்ந்தவர்கள் பிரிந்தனர்.

இந்தச் சம்பவம் 1970 மத்தியில் நடந்தது. 1971 ஏப்ரல் 17ம் திகதி "பிராப்தம்" ரிலீஷ் ஆகியது. படம் தோல்வியை தழுவியது. சாவித்திரி மனம் உடைந்தார். அவர் இதயம் சுக்கல் சுக்கலாக நொறுங்கியது.

சாவித்திரியை பிரிய நேரிட்ட சம்பவம் பற்றி தன் வாழ்க்கை வரலாற்றில் ஜெமினிகணேசன் எழுதியிருந்ததாவது, நான் உயிருக்கு மேலாகக் காதலித்து மணமும் புரிந்து கொண்ட சாவித்திரியை சில நண்பர்கள் சொந்தமாக படம் எடுக்க தூண்டினர்.

(தொடரும்)

கேளுங்கள் தரப்படும்; தட்டுங்கள் திறக்கப்படும்; தேடுங்கள் கிடைக்கும்.

- இயேசுநாதர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தமிழ் மக்கள் பேரணி நடத்துவது தீர்வை வலியுறுத்த உதவும்

போருக்குப் பின்பான ஆட்சி மாற்றம் என்பதில் தமிழ் மக்களின் வகிபங்கு காத்திரமானது என்பதை எவரும் மறுத்துவிட முடியாது.

ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேனவுக்கு தமிழ் மக்கள் வாக்களிக்காமல் விட்டிருந்தால் அவரின் இன்றையநிலை என்னவாக இருக்கும் என்பதை அவரே பதிவு செய்துள்ளார்.

அந்த வகையில் இப்போது இந்த நாட்டில் நடப்பது நல்லாட்சி என்றால், அந்த நல்லாட்சியை ஏற்படுத்தியவர்கள் தமிழ் மக்கள் என்பதை எவரும் மறுத்துவிட முடியாது.

இருந்தும் நல்லாட்சி இன்னமும் தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் கரிசனை கொள்வதாகத் தெரியவில்லை.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்குக் கால அவகாசம் தேவையென்றால் அதில் நியாயம் உண்டு என்பதில் மறுகருத்துக்கு இடமில்லை.

அதேநேரம் தமிழ் மக்களின் வாழ்விடங்களில் இருக்கக்கூடிய இராணுவத்தை வெளியேற்றுவது; சிறைகளில் வாடுகின்ற தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்வது; காணாமல் போனவர்கள் தொடர்பில் ஒரு தீர்க்கமான முடிவுக்கு வருவது; வன்னிப் பெருநிலப்பரப்பில் நடந்த போர்க்குற்றம் தொடர்பில் சர்வதேச விசாரணையை மேற்கொள்வது என்ற விடயங்களில் எந்த இடைஞ்சல்களும் இருக்க முடியாது.

மாறாக இவற்றைச் செய்வதற்கும் தென்பகுதிப் பேரினவாதிகள் எதிர்ப்புத் தெரிவிப்பர் என்று நல்லாட்சியினர் காரணம் சொல்வார்களாயின் தமிழ் மக்களின் வாக்குகளை அவர்கள் கோராமல் இருந்திருக்க வேண்டும்.

ஆட்சியில் இருப்பவரால் நாட்டில் நிலவும் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண முடியவில்லை என்றால், ஆட்சியில் இருப்பவர்களுக்கும் தோற்றவர்களுக்கும் என்ன வித்தியாசம் என்ற கேள்வி எழுவது நியாயமே. ஆக, காலம் கடத்துதல் என்பது மட்டுமே இன்றைய நல்லாட்சியிலும் கடைப்பிடிக்கப்படும் விடயமாகவுள்ளது.

ஆகையால் அதற்கொரு முடிவுகட்டாமல் எங்கள் பிரச்சினைகளுக்கு தீர்வு காணுங்கள் என்று அவர்களை அவசரப்படுத்தாமல் – பேசாமல் இருந்தால் எதுவும் நடக்காதென்பதே உண்மை.

தமிழ் மக்கள் தங்கள் நியாயபூர்வமான கோரிக்கைகளை முன்வைத்து பேரணி நடத்தினால் அது அரசு முன்னெடுக்கும் தீர்வு விடயங்களை பாதிக்கும் என்று கருத்துரைப்போர் அரசின் விசுவாசிகள் மட்டுமன்றி தமிழினத்தின் விரோதிகள் என்பதையும் கூறித்தானாக வேண்டும்.

ஏனெனில் இத்தகைய கருத்தைக் கூறுவோர் நிச்சயமாக சிறைகளில் வாடும் நம் பிள்ளைகளின் அவலநிலையையோ அல்லது காணாமல் போனவர்கள் துன்பநிலையையோ அல்லது முகாம்களில் வாடுகின்ற மக்களின் பரிதாப நிலையையோ உணராதவர்கள் என்றே கூறவேண்டும்.

தங்கள் குடும்பத்துத்துப் பிள்ளைகள் காணாமல் போயிருந்தால் அல்லது வன்னி பெருநிலப்பரப்பில் இறந்திருந்தால், அகதி முகாம்களில் வாழ்ந்திருந்தால் மேற்போந்த கருத்துக்களை அவர்கள் ஒருபோதும் முன் வைக்கமாட்டார்கள் என்பது உண்மை.

அதேநேரம் எங்கள் பிரச்சினைகளை முன்வைத்து அகிம்சை வழியில் நாம் பேரணி நடத்தும் போது, அந்தப் பேரணியானது தமிழ் மக்களின் அவலத்தை வெளிப்படுத்தும். தமிழ் மக்களின் பிரச்சினைகளை ஆறப்போடாமல் உடனடியாகத் தீர்த்து வைக்க வேண்டும் என்ற ஒரு நினைப்பை அரசிடம் ஏற்படுத்தும்.

**அதிலும் நல்லாட்சியை ஆட்சி பீடத்தில் அமர்த்திய தமிழ் மக்கள் தங்கள் கோரிக்கையை திரண்டெழுந்து அரசிடம் முன்வைப்பது; சர்வதேச சமூகத்திடம் தெரிவிப்பதில் எந்தத் தவறும் இல்லை என்பதே நம் தாழ்மையான கருத்து.**

## தேசிய ஊடக நிலையத்தின் தலைவராக இம்தியாஸ் பாக்கீர் நேற்று பதவியேற்பு

தேசிய ஊடக நிலையத்தின் தலைவராக முன்னாள் ஊடக அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் பதவியைப் பொறுப்பேற்றார்.

விசும்பாயாவில் அமைந்துள்ள தேசிய ஊடக நிலையத்தின் காரியாலயத்தில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ தகவல்களை வெளியிடவுள்ள இந்த நிலையத்தின் தலைவராக முன்னாள் அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்காரை நியமிக்க அண்மையில் அமைச்சரவையில் அங்கீகாரம் வழங்கியிருந்தது.

இதன்போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த இம்தியாஸ் பாக்கீர் மாக்கார், தேசிய ஊடக நிலையம் இலங்கைக்கு புதிய விடயமாக இருந்தாலும் இந்தியா, அமெரிக்கா, ஜப்பான் போன்ற நாடுகளில் இது போன்ற ஊடக நிலையங்கள் காணப்படுகின்றன. தொழில்வாண்மை ரீதியாக சர்வதேச தரத்தில் இதனை கொண்டுவர நாம் எதிர்பார்க்கின்றோம்.

இன்று புதிய யுகத்தின் ஆரம்பம் இந்த நாட்டில் உருவாகியுள்ளது. கால காலமாக காணப்பட்ட வெறுப்பு அரசியல் முடிவுக்கு கொண்டு வரப்பட்டு நாட்டின் பிரதான இரண்டு அரசியல் சக்திகளும் இணைந்துள்ளன. இனரீதியான ஒற்றுமை தற்பொழுது ஏற்பட்டுள்ளது. அந்த ஒற்றுமை ஊடாக மக்கள் அபிலாஷைகளை நிறைவேற்ற அரசொன்று உருவாகியுள்ளது.

நாம் பல சமயங்களில் உணர்ச்சிபூர்வமாக எடுத்த தீர்மானங்களின் பிழைகளை பிற்காலங்களில் திருத்திக் கொண்ட நிலைமைகளை காண்கிறோம். மொழிப் பிரச்சினை, அதிகாரப்பகிர்வு போன்ற விடயங்களில் நாம் தொடர்ந்தும் அந்த பிழைகளில் செல்லாமல் சரியான பாதையில் இந்த நாட்டை கொண்டு செல்ல ஜனாதிபதி மற்றும் பிரதமர் எடுக்கும் முயற்சிக்கு ஊடகங்களின் ஆதரவும் எமக்கு தேவைப்படுகின்றது.

புதிய யுகமொன்றுக்காக, ஜனநாயக யுகமொன்றுக்காக, நீதியின் ஆதிக்கம், மக்களுக்கு பொறுப்புக் கூறும் சமூகமொன்றுக்காக ஜனாதிபதியும் பிரதமரும் இந்த பயணத்தை தொடர்ந்துள்ளனர். ஊடகங்களின் ஆதரவுடன் மக்கள் வேண்டியுள்ள அந்த வரத்தை நிறைவேற்ற இந்த நிறுவனம் செயற்படும் என தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடகப்பிரிவு, பிரதமர் ஊடகப்பிரிவு மற்றும் அரசாங்க தகவல் திணைக்களம் ஆகியவற்றை இணைத்து தேசிய ஊடக நிலையம் செயற்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ)

## பிரதிப் பொலிஸ்மா அதிபர்களின் வாகனங்கள் மோதுண்டு விபத்து

(கொழும்பு)

கொழும்பு - கெப்பட்டிபொல மாவத்தையில் பிரதி பொலிஸ்மா அதிபர்கள் இருவரின் வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் எஸ்.எம் விக்கிரமசிங்க மற்றும் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண ஆகியோரது வாகனங்களே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளன.

பொலிஸ் அதிகாரிகளின் குடியிருப்புகள் அமைக்கப்பட்டிருக்கும் பிரதேசத்தில் நேற்று முன்தினம் இரவு இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் உயிர் சேதம் எதுவும் ஏற்படவில்லை. எனினும், வாகனங்களுக்கு சேதம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் விபத்து ஏற்படும் போது வாகனத்தில் குறித்த பொலிஸ் அதிகாரிகள் இருவரும் இருக்கவில்லை எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (செ)

## ராம்குமாரின் மரணம் குறித்து வைகோ, ராமதாஸ் கண்டனம்

புழல் சிறையில் ராம்குமார் தற்கொலை செய்து கொண்ட சம்பவத்திற்கு அரசியல் தலைவர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

ம.தி.மு.க பொதுச் செயலாளர் வைகோ வெளியிட்டுள்ள அறிக்கையில் ராம்குமார் சிறையின் உள்ளே கட்டுக்காவல்களை மீறி, சமையல் அறைக்குச் சென்று மின் கம்பியை கடித்து, தன் உடலில் தானே மின்சாரத்தைப் பாய்ச்சி தற்கொலைக்கு முயன்றார் என்று கூறப்படுவது நம்பும்படியாக இல்லை.

சிறையில் நடந்த இந்தச் செயலுக்கு சிறைத்துறை அதிகாரிகள்தான் பொறுப்பேற்க வேண்டும்.

சுவாதி கொலை வழக்கின்பின்னணி குறித்தும், சிறையில் ராம்குமார் தற்கொலை குறித்தும், உயர்நீதிமன்றத்தில் பணியில் உள்ள நீதிபதியைக் கொண்டு முழு விசாரணை நடத்தி உண்மைகளை வெளிக்கொண்டுவர வேண்டும் என்றுள்ளது.

பா.ம.க நிறுவனர் டாக்டர் ராமதாஸ் வெளியிட்ட அறிக்கையில்,

தமிழகத்தையே உலுக்கிய கொலை வழக்கில் கைது செய்யப்பட்ட ஒருவர், மின்சார வயரை கடித்து தற்கொலை செய்து கொள்ளும் அளவுக்கு புழல் மத்திய சிறையில் பாதுகாப்பற்ற சூழல் நிலவுவது ஏற்கத்தக்கதல்ல.

கொடிய குற்ற வழக்குகளில் கைது செய்யப்பட்டு சிறையில் வைக்கப்பட்டிருப்பவர்களுக்கு சட்டப்படி அதிகபட்ச தண்டனை பெற்றுத் தர வேண்டியது பொலிஸாரின் கடமை. ராம்குமாரின் மரணம் குறித்து பல்வேறு ஐயங்கள் எழுப்பப்படும் நிலையில் அதுகுறித்து அரசு விளக்கமளிக்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளார். (இ-7)

## மகாநாயக்க தேரர்களுக்கு விரைவில் பதில் கிடைக்கும்

### விமல் எம்.பி. கருத்து

புதிய அரசியலமைப்பு நாட்டை கூறுபோடாதென இனவாதத்தை தூண்டாதென நினைக்கும் மகாநாயக்க தேரர்களினது கருத்துக்களுக்கு நவம்பர் மாதம் தெளிவான பதில் கிடைத்துவிடும். அப்போது நான் கூறியது தவறா அல்லது சரியா என்பதை அவர்கள் புரிந்து கொள்வார்கள். அரசுக்கெதிராக எந்தவொரு கருத்தையும் சுதந்திரமாக தெரிவிக்கக் கூடிய மகாநாயக்க தேரர்கள் அப்போதாவது இந்த அரசாங்கத்துக்கு நெருக்கடி கொடுப்பார்கள் என நினைக்கின்றோம் என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச தெரிவித்தார்.


மேலும்புலம்பெயர்அமைப்புக்களின் துணையுடனும் சர்வதேச அமைப்புக்களின் அனுசரணையின் அடிப்படையில் பலமான தமிழ் அமைப்புக்களின் ஆதரவாளனாகவே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நியூயோர்க்கிற்கு பயணமாகியுள்ளதாகவும் அங்கு அமெரிக்காவின் தேவைகளையும் தமிழ்மக்களின் வேண்டுகோளை நிறைவேற்றுவதற்கான சகல நடவடிக்கைகளையும் அவர் மேற்கொள்வார் எனவும் மேலும் குறிப்பிட்டார்.

தேசிய சுதந்திர முன்னணியின் தலைமைக் காரியாலயத்தில்நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (செ)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை புதன்கிழமை காலை 8.30 மணியிலிருந்து 6 மணி வரை யாழ்.பிரதேசத்தில மாதனைப்பிரதேசம், மல்வில், முகாவில் ஆகிய இடங்களிலும் கிளிநொச்சி பிரதேசத்தில் 59ஆவது படைப்பிரிவு இராணுவ முகாம், 14 ESR-01மற்றும்14 ESR-02 ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில ஓமந்தையிலிருந்து புளியங்குளம் வரை, தெற்கிலுப்பைக் குளம் கிராமம், கொம்பு வைத்தகுளம் இராணுவ முகாம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



❖ உலகம் வேண்டுவது ஒழுக்கமே. கொளுந்து விட்டெரியும் அன்பு, தன்னலமற்ற அன்பு யாரிடம் இருக்குமோ, அவரையே உலகம் வேண்டி நிற்கிறது.

❖ அத்தகைய அன்பே வாயிலிருந்து எழும் வார்த்தை ஒவ்வொன்றையும் மிகச் சிறந்த பயனுள்ளதாக்கும்.

❖ எழுமின் விழிமின் வீரர்களே! உலகம் துயரத் தீயால் வேகின்றதே, நீங்கள் தூங்கலாமா?

❖ வயது ஏற ஏற சிறு செயல்களில் பெருமையை மேலும் மேலும் நாடுவதையே என்னிடம் காண்கின்றேன்.

❖ பெரிய மனிதர் ஒருவர் எவ்வாறு உண்கிறார், உடுக்கிறார் என்பதையும் தமது வேலைக்காரரிடம் எவ்வாறு பேசுகிறார் என்பதையும் அறியவே எனக்கு விருப்பம்.



குரும்பசிட்டி உதயசூரியன் சனசமூக நிலையத்தின் 70 ஆவது ஆண்டு தினத்தை முன்னிட்டு நடைபெற்ற மரதன் ஓட்டம் அண்மையில் நடைபெற்ற போது...

# வளர்மதி கிரிக்கெட் தொடர் அரை இறுதியில் வல்வை வி.க.

வளர்மதியின் கிரிக்கெட் போட்டித் தொடரில் நெல்லியடி நண்பர்கள் விளையாட்டுக்கழகத்தை 30 ஓட்டங்களால் வீழ்த்தி அரையிறுதியாட்டத்திற்கு முன்னேறியது வல்வை விளையாட்டுக்கழகம் .

நவிண்டில் வளர்மதி விளையாட்டுக்கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் 21 வயதுக்குட்பட்டோருக்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டி குறித்த மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது. அதில் அண்மையில் இடம்பெற்ற காலிறுதியாட்டத்தில் வல்வை விளையாட்டுக் கழகமும் நெல்லியடி நண்பர்கள் விளையாட்டுக்கழகமும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாட களமிறங்கிய வல்வை அணி நிர்ணயிக்கப்பட்ட 6 பந்துப்பரிமாற்றங்களில் ஒரு இலக்கை மட்டும் இழந்து 61 ஓட்டங்களைப்பெற்றது.

அவ்வணி சார்பாக கபிலன் 27 ஓட்டங்களையும் பிரதீஸ் 12 ஓட்டங்களையும் மணிமாறன் 15 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர். பதிலுக்கு 62 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய நெல்லியடி நண்பர்கள் அணி எதிரணியின் பந்து வீச்சுக்கு முகம் கொடுக்க முடியாமல் ஒற்றை இலக்கங்களுடன் வீரர்கள் ஆட்டமிழந்து வெளியேற 6 பந்துப்பரிமாற்றங்களில் 7 இலக்குகளை இழந்து வெறும் 31 ஓட்டங்களைப்பெற்று 30 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவ வல்வை அணி அரையிறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது. (க)

# இன்றைய போட்டிகள்

நெடியகாடு இளைஞர் விளையாட்டுக்கழகம் நடத்தும் Northern Challenger உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் இன்றுசெவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் புத்தூர் எவறெஸ்ட் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து உடுப்பிட்டி யுத் விளையாட்டுக்கழகமும் மாலை 4.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் வலிகா மம் றெட் றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து பருத்தித்துறை சிவானந்த விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது.

வலிகாமம் லீக்கின் அனுமதியுடன் குப்பிளான் குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக்கழகம் நடத்தும் வடமாகாண ரீதியில் அழைக்கப்பட்ட கழகங்களுக்கிடையிலான வடக்கின் வல்லரசன் உதைபந்தாட்ட போட்டியில் இன்று மாலை 6.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் கனகபுரம் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து ஊர்காவற்றுறை சென்.ஜேம்ஸ் விளையாட்டுக்கழகமும் இரவு 7.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் திருக்குமரன் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து மன்னார் விடத்தல் தீவு ஐக்கியம் விளையாட்டுக்கழகமும் இரவு 8.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் கொலின்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து ஜோசப் வாஸ்நகர் யுனைற்றட் விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளது.

பொலிகண்டி பாரதி விளையாட்டுக்கழகம் நடத்தும் யாழ்.மாவட்ட ரீதியிலான மின்னொளியிலான உதைபந்தாட்ட போட்டியில் இன்று இரவு 7.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழகமும் இரவு 8.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் பலாலி விண்மீன் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து குப்பிளான் குறிஞ்சிக் குமரன் விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளது.

யாழ். லீக் அனுசரணையுடன் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழகம் நடத்தும் வடக்கின் சுப்பர் கி ங் பட்டத்திற்கான மாபெரும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் இன்று பிற்பகல் 3.40 மணிக்கு நடைபெறும் போட்டியில் திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து கொலின்ஸ் விளையாட்டுக் கழகமும் மாலை 4.20 மணிக்கு நடைபெறும் போட்டியில் ஈவினை அம்பாள் விளையாட்டுக்கழகத்தை பலாலி விண்மீன் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. (கு)




பதுளை வின்சன்ட் டயஸ் மைதானத்தில் 2016.09.17 ஆம் திகதி இடம்பெற்ற தேசிய மட்ட உடற்பயிற்சிப் போட்டியில் ஆண்கள் பிரிவில் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி மூன்றாம் இடம்பெற்று சாதனை படைத்துள்ளது. 2008 ஆம் ஆண்டிற்குப் பின்னர் இக்கல்லூரி தொடர்ச்சியாக தேசிய மட்டத்தில் பங்குபற்றி வருவதும் முதல் மூன்று இடங்களில் ஒன்றைக் கைப்பற்றி வருவதும் குறிப்பிடத்தக்கது.

# தீருவில் இளைஞர் விளையாட்டுக்கழக சுழல் கிண்ண உதைபந்தாட்டப்போட்டி ரேவடி சம்பியன்



சுழல் கிண்ணத்திற்கான உதைபந்தாட்டத் தொடரில் இரு பிரிவிலும் ரேவடி அணி சம்பியன் கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டது.

வல்வை தீருவில் இளைஞர் விளையாட்டுக்கழகம் வருடாவருடம் நடத்தி வரும் 7 நபர் கொண்ட சுழல் கிண்ணத்திற்கான உதைபந்து சுற்றுத்தொடரின் இறுதிப் போட்டிகள் கடந்த சனிக்கிழமை தீருவில் இளைஞர் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

இறுதிப்போட்டியில் ரேவடி அணியை எதிர்த்து இளங்கதிர் அணிமோதியது. இந்த ஆட்டத்தில் 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிக் கிண்ணத்தை கைப்பற்றியது. 2 ஆம் இடத்தினை இளங்கதிர் அணி பெற்றுக்கொண்டது.

7 நபர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுத் தொடரின் சிறந்த கோல்காப்பாளர் - பிரேம் ராஜ் - ரேவடி விளையாட்டுக்கழகம் சிறந்த வீரர் - சுஞ்சி -ரேவடி விளையாட்டுக்கழகம்.

9 நபர் கொண்ட சுழல் கிண்ணத்திற்கான உதைபந்து சுற்றுத் தொடரின் போட்டிகள் கடந்த ஆண்டு இறுதியில் நடைபெற்றது. இப்போட்டிக்குரிய வெற்றிக் கேடயங்களும் அன்றைய தினமும் வழங்கப்பட்டன.

9 நபர் கொண்ட சுழல் கிண்ணத்திற்கான உதைபந்து சுற்றுத் தொடரின் முதலாம் இடம் ரேவடி விளையாட்டுக்கழகம். 2 ஆம் இடம் தீருவில் இளைஞர் விளையாட்டுக்கழகம்.

இப்போட்டிக்கான சிறந்த கோல் காப்பாளர் -உலகராசா -ரேவடி விளையாட்டுக்கழகம் சிறந்த வீரர் - தமிழரசன் -ரேவடி விளையாட்டுக்கழகம்.

வல்வை தீருவில் இளைஞர் விளையாட்டுக்கழகம் வருடாவருடம் நடத்தி வரும் 7 நபர் மற்றும் 9 நபர் கொண்ட சுழல் கிண்ணத்திற்கான உதைபந்து சுற்றுத் தொடரின் போட்டிகளில் ரேவடி விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்று வெற்றிக் கிண்ணத்தை தமதாக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)

# மோகனதாஸ் வெற்றி



வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

அண்ணா சனசமூக நிலைய வெள்ளி விழாவை முன்னிட்டு நேற்று முன்தினம் நடத்தப்பட்ட கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் B அணிக்கான போட்டியில் நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து மோகனதாஸ் விளையாட்டுக்கழகம் மோதியது. இதில் மோகனதாஸ் விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்றது. (கு)

## பிரிவைத் தாங்க...

களது பெற்றோர் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளனர்.

இச் சம்பவங்களை பார்த்த அதிர்ச்சியில் மகள் மயக்கமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருகையில்,

கல்குடா பகுதியை சேர்ந்த மேற்படி இரு சகோதரர்கள் உட்பட 5 பேர் நண்பர் ஒருவரின் பிறந்த தினத்தை கொண்டாடுவதற்கு நேற்று முன்தினம் மாலை கல்குடா கடலுக்குச் சென்றுள்ளனர்.

அவர்களில் நால்வர் கடலில் நீராடிக் கொண டிருந்த வேளை சண்முகம் சுரேஷ்குமார் (வயது 18) என்பவர் கடலலையால் அடித்துச் செல்லப்பட, சகோதரனான சண்முகம் சதீஸ்குமார் (வயது 21) அவரைக் காப்பாற்ற முயற்சித்த வேளை இருவரும் பரிதாபகரமாக நீரில மூழ்கியுள்ளனர்.

அவர்களை காப்பாற்ற சென்ற மற்றைய இரு நண்பர்களான கங்கேஸ்வரன் டிலக்சுமன் (வயது 16) மற்றும் அருள்தரன் ரஜிந்தன் (வயது 16) ஆகியோரும் நீரில் மூழ்கிய நிலையில் கரையில் நின்ற மற்றைய நண்பன் கூக்குரலிட்டதால் அப்பகுதியில் நின்ற மீனவர்கள் கடலில் மூழ்கியவர்களை காப்பாற்ற முயற்சித்துள்ளனர்.

இதில் சகோதரர்கள் தவிர்ந்த இருவர் மட்டுமே நேற்று முன்தி னம் காப்பாற்றப்பட்டதுடன் சகோதரர்கள் இருவரும் காணாமற் போயிருந்தனர். அவர்களை தேடும் பணியில் மீனவர்கள் கடற்படையினர் தொடர்ச்சியாக ஈடுபட்டிருந்தனர்.

இந்த நிலையில் தங்களது இரு பிள்ளைகளும் கடலில் மூழ்கி காணாமற்போன தகவலை அறிந்த பெற்றோரான கல்குடா பட்டியடிச்சேனை கிராமத்தைச் சேர்ந்த வேலுப்பிள்ளை சண்முகம் (வயது 54), யோகலெட்சுமி சண்முகம் (வயது 46) ஆகிய இருவரும் அத்துயரம் தாங்காது நேற்றையதினம் அதிகாலை அவர்களது வீட்டு முற்றத்தில் உள்ள மரத்தில் தூக்கிட்டு தற்கொலை செய்துள்ளனர்.

இந்நிலையில் தாய் தந்தையை பறிகொடுத்த துயரத்துடன் காணாமற்போன தனது சகோதரர்கள் இருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டு கடற்கரையில் வைக்கப்பட்டிருப்பதை காண்பதற்காக அங்கு விரைந்து வந்த சகோதரியான சண்முகம் தினேஷ்வரி (வயது 27) சம்பவ இடத்திலேயே மயங்கி விழுந்த நிலையில் உறவினர்களால் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேற்படி உயிரிழந்த வேலுப்பிள்ளை சண் முகம் தம்பதியினருக்கு இரண்டு ஆண் பிள்ளைகளும் இரண்டு பெண் பிள்ளைகளுமாக நான்கு பிள்ளைகள். அதில் ஒரு பெண் பிள்ளை நான்கு வருடங்களுக்கு முன்னர் மரணமடைந்துள்ள நிலையில் தங்களது இரண்டு ஆண் பிள்ளைகளும் ஒரே நேரத்தில் கடலில் மூழ்கி காணாமற்போயுள்ளமையால் மனமுடைந்த இவர்கள் தூக்கில் தொங்கி தற்கொலை செய்துள்ளனர் என தெரிய வருகிறது.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 4 பேர் உயிரிழந்த சம்பவமானது கல்குடாப் பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

அதேவேளை உயிரிழந்தவர்களின் இறுதிச்சடங்குகள் இன்றைய தினம் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும் சம்பவம் தொடர்பில் கல்குடா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ-9)

## ஒட்டுமொத்த தமிழ...

மேற்படி இருசங்கங்களும் இணைந்து இது தொடர்பில் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

ஈழத் தமிழ் மக்கள் தொடர்ந்தும் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை உலகின் கவனத்துக்குக் கொண்டு செல்லும் முகமாக எதிர்வரும் 24.09.2016 சனிக்கிழமை நடைபெறவுள்ள எழுக தமிழ் எழுச்சிப் பேரணிக்கு இலங்கை ஆசிரியர் சங்கமும் யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கமும் எமது பூரண ஒத்துழைப்பினையும் அனுசரணையையும் வழங்கி நிற்கின்றோம்.

நடந்து முடிந்த ஆட்சி மாற்றத்துக்கு பின்னைய சூழ்நிலைகளும் நம்பிக்கையூட்டக்கூடிய அளவுக்கு தமிழ் மக்களுக்கு சாதகமாக அமையவில்லை. மாறாக தமிழ் மக்களின் 70 ஆண்டுகால அரசியல் கோரிக்கைகள் அனைத்தையும் பெறுமதியற்றதாக மாற்றுவக்குரிய சூழ்ச்சியே தொடர்ந்து கொண்டிருக்கின்றன.

தமிழர் தாயகமானது சிங்கள பௌத்தமயமாக்கலுக்குட்பட்டு பௌத்த விகாரைகள் அமைக்கப்படுகின்றன. பௌத்தர்களையும் சிங்கள சகோதரர்களையும் வெறுக்கும் மதவாதிகளோ அல்லது இனவாதிகளோ நாமல்ல. மாறாக -எமது இனத்துக்கான அடையாளங்களை நாமாகவே தீர்மானிக்கக்கூடிய அதிகாரத்தினை வழங்காது அடக்கு முறையின் அடையாளமாக சிங்கள பௌத்த மேலாதிக்கத்தினைத் திணிக்கும் செயற்பாடாகவே இதனை பார்க்க வேண்டியுள்ளது. இது தமிழரின் தனித்துவத்தை அழிக்கும் திட்டமிட்ட செயற்பாடாகும்.

எனவே தமிழர் தாயகத்தை ஆக்கிரமித்து நின்று தனித்துவத்தை அழிக்கும் வேலைத் திட்டத்தினை செய்யும் இராணுவம் எமது மண்ணிலிருந்து முதலில் அகற்றப்படவேண்டும்.

கடந்த 30 ஆண்டு காலமாக சொந்த வாழ்விடங்களிலிருந்து விரட்டப்பட்டு அரச படைகளால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள எமது மக்களின் பூர்வீக நிலங்கள் உடனடியாக விடுவிக்கப்பட்டு மக்களுக்கு வழங்க வேண்டும்.

இறுதி யுத்தத்தின் முன்னரும் பின்னரும் கடத்தப்பட்ட, சரணடைந்த பின்னும் காணாமற் ஆக்கப்பட்ட ஒவ்வொருவரின் நிலைமை தொடர்பாகவும் உண்மை கண்டறியப்பட்டு பொறுப்புக் கூறல் இடம்பெற வேண்டும்.

இன அழிப்பு தொடர்பாக ஏற்றுக்கொள்ளப்பட்ட முழுமையான பக்கச்சார்பற்ற சர்வதேச விசாரணை வேண்டும். அத்துடன் இவையெல்லாம் மீண்டும் ஏற்படாத வண்ணம் தமிழர் தேசம், அதன் தனித்துவம், இறைமை, சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கக்கூடிய சமஷ்டி தீர்வுத்திட்டம் உள்ளடக்கிய அரசியல் சாசனம் உருவாக்கப்பட வேண்டும்.

இவைபோன்ற கோரிக்கைகளுக்கு வலுச் சேர்க்கும் முகமாக ஒவ்வொரு உணர்வுள்ள தமிழனும் இப்பேரணியில் கலந்து கொள்ள வேண்டும். தனிப்பட்ட அரசியல் முரண்பாடுகளுக்குரிய களம் இதுவல்ல என்பதை தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் புரிந்துகொள்ள வேண்டும். இது ஒட்டுமொத்த தமிழரின் குரலாக ஓங்கி ஒலிக்க வேண்டும்.

தற்போதைய சூழலில் ஒன்றிணைந்த மக்கள் எழுச்சி ஒன்றே தமிழ் மக்களின் வரலாற்றினை தீர்மானிக்கும் என்பதை அறிவுபூர்வமாகவும் உணர்வுபூர்வமாகவும் சிந்தித்து செயற்பட வேண்டும். எழுக தமிழ் பேரணியில் இணைந்து வலுச் சேர்க்குமாறு கேட்டுக்கொள்கின்றோம் என அவ்அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ)

## 95 போராளிகளு...

மேற்கொண்ட முன்னாள் போராளிகளின் எண்ணிக்கை 95 ஆக அதிகரித்துள்ளது.

புனர்வாழ்வு பெற்று விடுதலையான முன்னாள் போராளிகளுக்கான மருத்துவ பரிசோதனைகள், வடமாகாண வைத்தியசாலைகளில் சுகாதார அமைச்சின் ஏற்பாட்டில் முதலாம் வாரம் கடந்த 2ஆம் திகதியும், இரண்டாம் வாரம் 9ஆம் திகதியும், மூன்றாம் வாரம் 15ஆம், 16 ஆம் திகதியும் ஆரம்பமாகி நடைபெற்றன.

அதில் யாழ் மாவட்டத்தில் 19 பேரும், கிளிநொச்சி மாவட்டத்தில் 23 பேரும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 43 பேரும், வவுனியா மாவட்டத்தில் 6 பேரும், மன்னார் மாவட்டத்தில் 4 பேருமாக 95 பேர் மருத்துவ பரிசோதனைகளை மேற்கொண்டுள்ளனர்.

கடந்த 2ஆம் திகதி 26 பேரும், 9ஆம் திகதி 47 பேரும், 15ஆம் மற்றும் 16ஆம் திகதிகளில் 22 பேரும் மருத்துவ பரிசோதனையில் பங்கேற்றிருந்தனர்.

இதேவேளை, எதிர்காலத்தில் வாரத்தின் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் மேற்படி மருத்துவ பரிசோதனைகள் இடம்பெறவுள்ளதாக வடமாகாண சுகாதார அமைச்சின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (செ)

## உலகில் சிறந்த...

சிவில் சேவைகள் அமைப்பின் தொழில்நுட்பக் குழுவின் நிபுணர்கள், 2015-ம் ஆண்டு மைத்திரிபால சிறிசேன பதவியேற்ற காலத்தில் இருந்து அவர் முன்னெடுத்த நடவடிக்கைகளை ஆராய்ந்து அவரை சிறந்த ஜனாதிபதியாக அறிவித்துள்ளனர்.

ஜனாதிபதி பதவியேற்ற நாளில் இருந்து முன்னெடுக்கப்பட்டு வரும துரிதமான அபிவிருத்தி நடவடிக்கைகளையும் அவர்கள் வரவேற்றுள்ளனர்.

நாடு மற்றும் ஜனாதிபதி தொடர்பான அரசியல், பொருளாதார மற்றும் சமூக குறியீடுகளுக்கு அமைய இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் நாட்டின் எதிர்க்கட்சிகள் அரசாங்கத்தின் அனைத்து நகர்வுகளையும் விமர்சித்து வருகின்றன.

தன்னை உலகில் சிறந்த ஜனாதிபதியாக தெரிவு செய்தமை குறித்து கருத்து வெளியிட்டுள்ள ஜனாதிபதி, இது போன்ற ஒரு மதிப்புமிக்க அங்கீகாரம் கிடைத்தமை குறித்து பெருமையடைகின்றேன்.

எனது அரசாங்கத்தின் கடின உழைப்பு மற்றும் வெளிப்படைத்தன்மை ஊடாக இந்த சாதனை பெறப்பட்டதாக நான் நம்புகிறேன்.

நான் ஜனாதிபதியாக எனது கடமைகளை செய்ய இலங்கை மக்களே சிறந்த சூழலை உருவாக்கி கொடுத்ததாகவும் ஜனாதிபதி கூறியுள்ளார். (செ-11)

## யுத்தம் மூலம்...

சியை விரும்பும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கவும் புலம்பெயர் அமைப்புடன் இணைந்து ஏற்கெனவே புதிய அரசியலமைப்பில் அதற்கான வரைபுகளை உள்ளடக்கி விட்டார்கள்.

நாட்டை தாரைவார்க்க நினைப்பவர்கள் அதற்கான மூலதர்மங்களை பாராளுமன்றத்தின் அனுமதியோடு நிறைவேற்ற நினைக்கின்றனர்.

மேலும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் ஊகத்தின்படி நவம்பர் மாதம் புதிய அரசியலமைப்புக்கான சட்டமூலம் பாராளுமன்றத்துக்கு கொண்டுவரப்படுமானால் ஜனவரி மாதமளவில் சர்வஜன வாக்கெடுப்புக்கு விடுவார்கள்.

பாராளுமன்றத்தின் முழு அனுமதியுடன் அதனை நிறைவேற்றியதாகவும் கூறுவார்கள. ஆனால் நாட்டை நேசிப்பவர்கள் தன்னை சுதாகரித்துக்கொண்டு முழு எதிர்ப்பை வெளிப்படுத்த வேண்டும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (செ-11)

## காஷ்மீர் தாக்...

மடைந்திருந்ததாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த நிலையில் இத்தாக்குதல் சம்பவம் தொடர்பாக இலங்கை வெளிவிவகார அமைச்சு நேற்றைய தினம் ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டு அரசாங்கம் சார்பில் தமது கண்டத்தையும் வெளியிட்டுள்ளது.

சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்களது குடும்ப அங்கத்தவர்களுக்கும் இலங்கை அரசாங்கம் தமது கவலையை வெளியிட்டுள்ளது.

சர்வதேச ரீதியிலான பயங்கரவாதத்தை துடைத்தெறிவதற்கும், பிராந்திய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும் தேவைப்படுகின்ற அனைத்து ஒத்துழைப்புக்களையும் தெற்காசிய வலய நாடு என்ற வகையில் இலங்கை வழங்கும் என்றும் வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (செ-11)

## சாட்சியை அச்சுறுத்திய வழக்கு விசாரணை

(மன்னார்)

மன்னார் நீதிமன்றத்தில் இடம்பெற்று வரும் பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பான வழக்கு விசாரணை ஒன்றிற்கு சாட்சியாளரை அச்சுறுத்தியமை தொடர்பாக மன்னார் பிரதேச செயலாளருக்கு எதிராக வழக்கு விசாரணைகள் நேற்று திங்கட்கிழமை மன்னார் நீதிமன்றத்தில் இடம்பெற இருந்த நிலையில் தனது சார்பாக கதைப்பதற்காக நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மன்னார் பிரதேச செயலாளர், மன்னார் நீதவானின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்திற்கு நபர் ஒருவரை அனுப்பியமை குறித்து மன்னார் நீதவான் எச்சரித்துள்ளார்.

மன்னாரில் தனியார் கல்வி நிலையம் ஒன்றிற்கு தொழிற்பயிற்சியை மேற்கொள்ளச் சென்ற யுவதி ஒருவரை துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்த முயற்சித்தார் என்ற குற்றச்சாட்டில் குறித்த கல்வி நிலையத்தின் இயக்குநரை பொலிஸார் கைது செய்து மன்னார் நீதிமன்றத்தின் உத்தரவிற்கு அமைவாக அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் கைது செய்யப்பட்ட நபருக்கு சார்பாக மன்னார் பிரதேச செயலாளர் செயற்பட்டதாகவும் குறித்த யுவதியின் தந்தையான சாட்சியாளரை அச்சுறுத்தி குறித்த வழக்கை மீளப்பெற்றுக்கொள்ளுமாறு மிரட்டியதாகவும் குற்றஞ்சாட்டப்பட்டள்ளது.

இவ்விடயம் தொடர்பில் பாதிக்கப்பட்டவர்கள் சார்பாக மன்னார் நீதவானின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்ட நிலையில் நீதவானின் உத்தரவிற்கு அமைவாக மன்னார் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர்.

இந்த நிலையில் மன்னார் பிரதேச செயலாளருக்கு எதிரான வழக்கு விசாரணை நேற்று திங்கட்கிழமை மன்னார் நீதிமன்றத்தில் விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட இருந்த போது, நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மன்னார் பிரதேச செயலாளர் சார்பாக நபர் ஒருவர் மன்னார் நீதவானின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்திற்குச் சென்று நீதவானுடன் கதைக்க முற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

மறுநாள் சாட்சியாளரான குறித்த யுவதியின் தந்தையை அச்சுறுத்தியமை தொடர்பான வழக்கு விசரரணை நேற்று திங்கட்கிழமை மன்னார் நீதிமன்றத்தில் மன்னார் நீதவான் முன்னிலையில் விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது முறைப்பாட்டாளர் சார்பாக சட்டத்தரணி றொயிஸ் றெஜி குரூஸ் மற்றும் வவுனியா சிரேஷ்ட சட்டத்தரணி அன்ரன் புனிதநாயகம் ஆகியோர் மன்றில் ஆஜராகியிருந்தனர். எதிராளி சார்பாக சட்டத்தரணி ராஜகுலேந்திரம் ஆஜராகியிருந்தார்.

இதன்போது விசாரணைகளை மேற்கொண்ட மன்னார் நீதவான் மன்றில் வழக்கு விசாரணைகள் இடம் பெற்று வரும் வழக்கு ஒன்று தொடர்பாக சாட்சிக்காக நீதவானின் வாசஸ்தலத்திற்கு ஆட்களை அனுப்புவதை ஏற்றுக்கொள்ள முடியாது என தெரிவித்ததோடு நீதவானுடன் கதைக்க முற்படுவது பிழையானது எனவும், மன்னார் பிரதேச செயலாளர் தொடர்பில் சாட்சிக்காக நீதவானின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்திற்கு நபர் ஒருவரை அனுப்பிய செயலையும் கண்டித்துள்ளார்.

மேலும் சாட்சியாளரான யுவதியின் தந்தையை அச்சுறுத்தியமை தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட மன்னார் நீதவான் மன்னார் பிரதேச செயலாளர் 50 ஆயிரம் ரூபாய் பெறுமதியான சரீர பிணையில் செல்ல அனுமதி வழங்கினார்.

இந்த நிலையில் குறித்த வழக்கு விசாரணை மீண்டும் எதிர்வரும் நவம்பர் மாதம் 7 ஆம் திகதி விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. (செ-4)

கணக்கீடு

AP.பகீரதன்
B.B.A (FM spl.)

A/L 2017, 2018

வகுப்புக்கள் நடைபெறுகின்றது

ECONOMICS HALL

நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
(புகையிரதக் கடவை முன்பாக)

IBS
சுண்டுக்குளி
மகளிர் கல்லூரிக்கு
அருகில்

VAI
பலாலி வீதி
கோண்டாவில்
சந்தி

(5967)

அனுமதிகளினை விரும்பிய இடங்களில் பெற்றுக் கொள்ளலாம்

தொடர்புகளுக்கு: 077 4598 499


# பாதிக்கப்பட்டவர்...

இராசேந்திரன் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்கள் பேரவையால் எதிர்வரும 24 ஆம் திகதி சனிக்கிழமை முன்னெடுகக்கப்படவுள்ள பேரணிக்கு ஆதரவு தெரிவித்து சென்னை திராவிட விடுதலைக் கழகத்தால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவ் அமைப்பு அனுபபியுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கையில்,

முள்ளிவாய்க்கால் படுகொலைக்கு பிறகு செப்ரம்பர் -24 திகதி அன்று வரலாற்று திருப்பம், அன்றைய தினம் தான் ஈழத்தமிழ் மண்ணில் தமிழர்களின் ஒன்றுபட்ட உரிமைப் போராட்டம் பேரணியாக அணி வகுக்கப்போகிறது.

போராட்டங்களின் வடிவங்களை உருவாக்குவது களச சூழல் தான் ஆயுதப் போராட்டம் நடந்த போதே திலீபன் அகிம்சை ஆயுதம் எடுத்த வரலாற்றை ஈழம் கண்டது.

களத்தில் மக்களோடு மக்களாக நிற்கும் அமைப்புக்கள் கரம் கோர்த்து நிற்பதும் ஒரு சிறப்பு

என்னதான் புலம் பெயர்ந்த நாடுகளும் தமிழ் நாடும் போராடினாலும் பாதிக்கப்பட்ட மக்கள் முன்னெடுக்கும் போராட்டமே மகத்தான சக்தி அதுவேசர்வதேசத்தை திரும்பிப்பார்க்க வைக்கும்.

எதிர்வரும் செப்ரெம்பர் 24 இல் மககளுக்காக மக்கள் களத்தில் நிற்கும் தமிழர் இயக்கங்கள் கரம் கோர்த்து களமிறங்குவது தமிழராகிய எங்களுக்கு பெரும் உற்சாகத்தை நம்பிக்கையை உருவாக்குகிறது.

எங்களது குரலும் இதயமும் எப்போதும் உங்களோடே பணயிக்கும்.

செப்ரெம்பர் 24 பேரணியின் அடக்குமுறை எதிர்ப்பு முழக்கம் ஓங்கி ஒலிக்க அரசியல் தீர்வுகளை முன்னெடுக்க தடைகளை தகர்க்க வாழ்த்துகிறோம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-9)


ஆங்கில வகுப்பு

தரம் 02, 03, 04, 05, 06, 07, 08, 09, 10 ஆம் O/L, A/L மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் தொழில் புரிபவர்களுக்குமான English Spoken with Grammar வீட்டுக்கு வந்து கற்பிக்கப்படும்.

தொடர்புகளுக்கு : 0767070069
(C-5831) M.Suren

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

நீங்கள் தொழில் தேடுபவரா?

முன்னணி நட்சத்திர ஹொட்டேல்களில் Front Office, Restaurant, Room Service, Kitchen போன்ற பகுதிகளில் வேலைவாய்ப்புடன்

O/L உடன் Diploma in Hotel Management

CERTIFICATE - DIPLOMA - DEGREE

With FREE English Course

Up to 30% Discount

- பயிற்சிக் காலத்திலேயே உழைக்கும் வாய்ப்பு
- கற்கைநெறி நிறைவில் நிரந்தர வேலைவாய்ப்பு

வெளிநாடு செல்ல விரும்புவோருக்கு விசா ஏற்பாடு

புதிய பிரிவுகள் ஆரம்பம் Week & Weekend Batch

அனுமதிகளுக்கு 077 3616 798

www.sikaram.lk
Sikaram Academy
021 222 0011

SIKARAM ACADEMY
Business - Hospitality - English
SCHOOL of HOSPITALITY

இல.175, 1ஆம் குறுக்குத்தெரு (வேம்படி வீதி), யாழ்ப்பாணம்.

நடமாடும் மிருகவைத்திய சேவை


தாவடிக்கு அண்மையில்
மிருக வைத்திய தேவைகளுக்கு
(5954)

தொடர்பு – Dr. K. கிருபாகரன்

காலை 9 - 12
Mob :- 077 973 8802
Ph :- 021 224 2502

446, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

AUTO CAD


Specially Designed For:
Engineering,Architecture Students
Draught,Technical Personnel
Surveyors

Level 1.Elementary Draughting,
Level 2.Advanced Draughting & Visualizations(3D).


(C-5831)
பொறியியற்பீடத்திற்கு அனுமதி பெறும் மாணவர்களுக்கு அத்தியவசியமானது.

New Batch start on :- 24.09.2016

உங்கள் தேவைக்கேற்ப வரையறையற்ற செய்முறை பயிற்சி நேரம்

iCS EDUCATION
77, மணிக்கூட்டு கோபுர வீதி
யாழ்ப்பாணம்
(பெருமாள் கோவில் அருகாமையில்)
076-7013060 , 021-7306000

Mobile Phone
Repairing Course


SmartPhoneகள் உட்பட அனைத்து Phoneகளிலும் பயிற்சியளிக்கப்படும்

6th Batch start on 22.09.2016

சகல கேள்விகளுக்கும் தெளிவான விளக்கம்.
தனிப்பட்ட கவனிப்பு.
சுயமாக வேலை செய்யும் அளவுக்கு பயிற்சியளிக்கப்படும்.

*10 மாணவர்களுக்கான அனுமதி மட்டுமே உள்ளதால். ஆசன முன்பதிவு செய்யவும்.

ALLIANCE FRANÇAISE DE JAFFNA

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்





af

பிரெஞ்சு மொழி

பிரான்ஸ் FOREIGN MINISTRY & French EMBASSY யின் கீழ்

யாழில் 40 வருடங்களாக AF இன் பயணம்...

இயங்குகின்ற ஒரே சர்வதேச நிறுவனம் AF, உலகம் முழுவதும் 1000 கிளைகள். இலங்கையில் சர்வதேச பிரெஞ் Certificate ஐ AF மட்டுமே வழங்குகின்றது.

பிரெஞ்சு மொழிபெயர்ப்புக்கள் : யாழில் வேறு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் இல்லை.

இலவசம் : PHOTOCOPIES, படித்ததற்கான LETTER, VISA FORM நிரப்புதல் CD, BOOKS பாவனை ...





பிரான்ஸ், கனடா, சுவிற்சர்லாந்து ...

செல்வோர் : யாழ், வன்னி, பிற மாவட்டங்களைச் சேர்ந்த நூற்றுக் கணக்கானோர் AF இல் படிக்கிறார்கள்.

ஆரம்பம் : அடுத்த மாதம் உடன் பதிவு செய்யுங்கள்.

021 222 8093
61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
(5916)

கச்சேரி பஸ்நிலையம் → புகையிரதகடவை → AF (வெள்ளை மாடிக்கட்டடம்)

வடக்கின் முதற்தர பிறிண்டிங் தொழிற்சாலை

ஜனா பிறிண்டேர்ஸ்

டிஜிற்றல் பிறிண்டிங்

ஓவ்செற் பிறிண்டிங்

Offset Printing
Books, Magazines, Leaflets, Brochures
Posters, Labels, Visiting Cards, Invitations

Digital Printing
Banner Printing, Sticker Printing,
Board Printing, Vehicle Branding, Sign Cutting

Sign Work
Awards, Shields, Medals, Tropies,
T-Shirt Printing, ID Card Printing, Mug Printing





புத்தகங்கள்
சஞ்சிகைகள்
லேபிள்கள்
துண்டுப்பிரசுரங்கள்
விளம்பரப் பதாகைகள்
பனர் பிறிண்டிங்
விசிற்றிங் காட்
போஸ்ரர்கள்
ஸ்ரிக்கர்கள்

துல்லியமான அச்சுப் பதிப்புக்கள்

JANA Printers

திருமண அழைப்பிதழ்களின் காட்சியறை





15% விலைக் கழிவுடன்

செப்ரெம்பர் 20ஆம் திகதியிலிருந்து 30ஆம் திகதி வரை

24 மணி நேரத்தில் வாடிக்கையாளரின் உடனடி தேவை கருதி திருமண அழைப்பிதழ்களை சிறந்த முறையில் பிறிண்டிங் செய்து கொடுக்கப்படும்.

தொ.பே.இல : 021 221 3233

இல.246, கஸ்தூரியார் வீதி, கன்னாதிட்டி சந்தி, யாழ்ப்பாணம்.


NEW SCIENCE WORLD
VICTORY MUST
Brown Road, Jaffna.

க.பொ.த(உ/த) 2018 உயிரியல்
மாதாந்தத் தொடர் பரீட்சை – ஓகஸ்ட் 2016

S.Ponthivakaran
V.Umashanger

| Index No. | Full Name | School | Marks | Rank |
|---|---|---|---|---|
| J/2334/B | பாஸ்கரன் பார்த்திபன் | J/K.H.C | 94 | 1 |
| J/2081/B | நவராசா சங்கீர்த்தவன் | J/K.H.C | 92 | 2 |
| J/2082/B | சிவகரன் பிரகாஸ் | J/K.H.C | 92 | 2 |
| J/2298/B | கஜானா சிவயோகராசா | J/K.H.C | 90 | 4 |
| J/2218/B | சுப்பிரமணியம் சுபாசன் | J/J.H.C | 89 | 5 |
| J/2149/B | ஆதிரை மணிவண்ணன் | J/M.L.C | 87 | 6 |
| J/2057/B | கிறேசியன் ஜெனோசன் | J/S.H.C | 87 | 6 |
| J/2579/B | சிஸ்மியா முருகவடிவேல் | J/C.G.C | 86 | 8 |
| J/2039/B | மகேந்திரராஜா ஜனகன் | J/J.H.C | 86 | 8 |
| J/2503/B | தேனுகா ஸ்ரீனிவாசன் | J/J.H.L.C | 85 | 10 |
| J/2552/B | சிறியதாஸ் துவாரகன் | J/K.H.C | 85 | 10 |
| J/2030/B | தயாநேசன் சஞ்சீவன் | J/S.P.C | 85 | 10 |
| J/2094/B | தவராகவி கேதீஸ்வரன் | J/V.G.H.S | 85 | 10 |
| J/2110/B | டுஷாரா தருமரெத்தினம் | J/C.G.C | 84 | 14 |
| Mu/2290/B | கேதாரணி ஜெகராஜன் | Mu/P.M.V | 82 | 15 |
| J/2146/B | சௌயந்தி காயாரோகணன் | J/C.G.C | 81 | 16 |
| J/2467/B | பிரியந்தினி அருமைரத்தினம் | J/J.H.L.C | 81 | 16 |
| J/2143/B | அனிஸ் புளொரிடா இருதயநாதன் | J/K.H.C | 81 | 16 |
| J/2280/B | சங்கவி சகாயரூபன் | J/V.G.H.S | 81 | 16 |
| J/2053/B | ஜெயகுமார் தேனுஜன் | J/J.H.C | 79 | 20 |
| J/5303/B | பிரான்ஸிஸ் சேவியர் ஆன்சன் | J/K.H.C | 79 | 20 |
| J/2056/B | பவீகா குகநேசன் | J/C.G.C | 78 | 22 |
| J/2714/B | திவ்யா பிரபாகர் | J/J.H.L.C | 77 | 23 |
| J/2660/B | கம்சிகா முத்துலிங்கம் | J/V.G.H.S | 77 | 23 |
| J/2282/B | லதாங்கி ரகுபதி | J/V.G.H.S | 76 | 25 |
| J/2336/B | நிசாந்தி செல்வநாதன் | J/J.H.L.C | 75 | 26 |
| J/2642/B | பவதர்சினி பழனிபழம் | J/V.G.H.S | 75 | 26 |
| J/2107/B | டிலக்சியா நவரத்தினம் | J/J.H.L.C | 74 | 28 |
| J/2219/B | சிந்துஜா அருள்ஜோதி | J/J.H.L.C | 74 | 28 |
| J/2328/B | கேதாரகௌரி தவராஜசிங்கம் | J/J.H.L.C | 74 | 28 |
| J/2228/B | அகஸ்திகா வைத்திலிங்கம் | J/C.G.C | 72 | 31 |
| J/2153/B | ஆரணி துரைசிங்கம் | J/K.H.C | 72 | 31 |
| J/2174/B | சங்கவி ரவீந்திரன் | J/C.G.C | 71 | 33 |
| J/2287/B | அபிநயா செல்வராசா | J/J.H.L.C | 71 | 33 |
| J/2679/B | பிரணவி கியூ, லோறன்ஸ் ரெனாறவ்ஸ் | J/K.H.C | 71 | 33 |
| J/2667/B | கௌதமி பிரபாகரன் | J/R.C | 70 | 36 |
| J/2147/B | வைஷ்ணவி கேதீஸ்வரன் | J/V.G.H.S | 69 | 37 |
| J/5303/B | ஜானுகா ஸ்ரீதரன் | J/V.H.C | 67 | 38 |
| J/2361/M | தீபிகா துரைராஜேஸ்வரன் | J/V.G.H.S | 67 | 38 |
| J/2144/B | தர்சி சர்வானந்தா | J/C.G.C | 66 | 40 |
| J/2508/B | பவித்திரா சயந்தகுமாரன் | J/J.H.L.C | 66 | 40 |
| Mu/2292/B | கஜானா சந்திரராசா | Mu/Y.M.V | 65 | 42 |
| J/2130/B | மதுஷா சாந்தகுமார் | J/U.G.C | 64 | 43 |
| J/2152/B | நிகேதா அன்பரசன் | J/V.G.H.S | 62 | 44 |

NEW SCIENCE WORLD Brown Road, Jaffna.

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.09.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.